# உரிமைத் தமிழ்த் தேசம்


தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத் திங்களேடு

உரிமை: 4தேசம்: 1 திருவள்ளுவர்ஆண்டு 2052 தை / ஜனவரி 2021 ஆசிரியர்: **தியாகு** பொறுப்பாசிரியர்: சமந்தா


தோழர் தியாகுவின் அறிவுக் குரல் கேட்க https://www.youtube.com/watch?v=NaMbPqrXqPo&feature=youtu.be

**தேசத்தின் குரல்**

## சுடுபடையும் உழுபடையும்!




இந்தியக் குடியரசு நாளை இந்திய வல்லரசின் படை வலிமையைப் பறைசாற்றும் நாளாகக் கொண்டாடுவதே இந்திய ஆட்சியாளர்களுக்கு வாடிக்கை. இந்த ஆண்டும் அப்படித்தான்

## உள்ளே...


1. தேசத்தின் குரல் -1
2. வீரத்தமிழன் முத்துக்குமார் நினைவேந்தல்-3
3. பாசிச பாசக எதிர்ப்பு 2021 சட்டப் பேரவைத் தேர்தல் வேலைத் திட்டத்திற்கான கலந்தாய்வுக் கூட்டத் தீர்மானங்கள் -7
4. செங்காட்டான் குறிப்பு:-9
5. புரட்சியையும் விதைக்கும் விவசாயிகள் -11
6. முத்துக்குமார் மரண சாசனம் நமக்குக் கைகாட்டி: கலங்கரை விளக்கம் -20
7. கியூபாவின் புரட்சிப் பெண்கள் (11) -27
8 என்ன செய்தார் எங்கெல்ஸ்? -38
9. முத்துக்குமார் நினைவாக… -46
10. நக்வெய்ன் மார்க்சியப் பள்ளியில் (15) -50
11 .டாலருக்கு வந்த வாழ்வு (10): -56
12. சூழலியல் வகுப்பு- (3) -69
13. சோதிப்பெரு வெளிச்சத்திற்கு ஒரு சின்னத்திரியின் அஞ்சலி -78


பதிவு எண் :R.Dis. No. 1964/2014

நடந்தது. கூடுதலாக இராமர் கோயில் வடிவமும் ஊர்வலத்தில் சேர்ந்து சென்ற காட்சி இந்திய இந்துத்துவ ஆட்சியாளர்களின் படையில் இராமருக்கும் முகன்மையான இடம் தரப்பட்டிருப்பதன் குறியீடாக அமைந்தது. துவக்குச் சூட்டால் பிளக்க முடியாத மக்களின் நெஞ்சை இராமபாணத்தால் பிளக்க முடியும் என்பது மோதி-அமித்சா கணக்கு.

அதே குடியரசு நாளில் அதே தில்லியின் எல்லைப் பகுதியில் அரசின் ஆய்தப்படைகளுக்கு அஞ்சாமலும் ”ஜெய் சிறிராம்!” கோசங்களால் மதிமயங்காமலும் இலட்சக்கணக்கான உழவர்கள் தம் உழவூர்திகளோடு திரண்டார்கள். ஐந்து மாத காலமாக அமைதியும் உறுதியும் குலையாமல் அறப் போராட்டம் நடத்தி வரும் உழவர்களைத் தடுக்கவும் வழிமறிக்கவும் துரத்தவும் இந்திய வல்லரசு செய்த முயற்சிகள் யாவும் தோற்றே போயின. போராடும் உழவர்களை காலிஸ்தானிகள் என்றும், பிரிவினைவாதிகள் என்றும், தேச விரோதிகள் என்றும், தீவிரவாதிகள் என்றும் திகிலியர்கள் என்றும் ஆட்சியாளர்களும் அவர்தம் ஊதிகுழல்களும் செய்த அவதூறுகள் எடுபடவில்லை.

இந்தப் பின்னணியில்தான் குடியரசு நாளைப் பயன்படுத்தி உழவர் போராட்டத்தில் ஊடுருவிய காவிக்கும்பல் செங்கோட்டை வரை தங்குதடையில்லாமல் சென்று போராட்ட ஒற்றுமையையும் கட்டுப்பாட்டையும் சீர்குலைக்கும் வேலையைச் செய்துள்ளது என்பது இப்போது தெள்ளத் தெளிவாகி விட்டது. இந்திய அரசின் உள்துறை அமைச்சகக் கட்டுப்பாட்டில் உள்ள தில்லிக் காவல்துறை எந்தக் கொலைபாதகத்துக்கும் அஞ்சாத இந்துத்துவ ஏவல்துறையே என்பதை குடியுரிமைப் போராட்டத்தின் போது உலகமே பார்த்தது.

மோதி பிள்ளையார் பிடிக்கப் போய்க் குரங்காகி விட்டது. உழவுக்கும் உழவர்களுக்கும் பகையான சட்டங்கள் ஒழிக்கப்பட வேண்டும் என்பதில் உழவர்களின் போராட்ட உறுதியும் ஒற்றுமையும் மேலும் வலுப்பட்டுள்ளன. நேரடியாகவே களமிறக்கப்பட்ட கைக்கூலிகளையும் உழவர்கள் விரட்டியடித்துத் தங்கள் களங்களை மீட்டுக் கொண்டு விட்டார்கள். ஒன்று, இந்திய அரசு தன் வேளாண் சட்டங்களை அடியோடு கைவிட்டு உழவர்களின் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும். அல்லது மோதி அமைச்சரவை பதவி விலக வேண்டும். இரண்டுமில்லாமல் உழவர்களுக்கு எதிராக அடக்குமுறையை ஏவிட மோதி அமித்சா கும்பல் சதித்திட்டம் தீட்டுமானால் விளைவுகள் அவர்களுக்கு ஏற்றவையாக இருக்கப் போவதில்லை என்பது உறுதி.

சுடுபடைக் கருவிகளை உழுபடைக் கருவிகள் வெற்றி கொண்டதாகவே வரலாறு குறித்துக் கொள்ளும்!


பதிவு எண் :R.Dis. No. 1964/2014

++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++

# வீரத்தமிழன் முத்துக்குமார் நினைவேந்தல்

**சென்னை கொளத்தூர்:**

ஈழ விடுதலை நெருப்பில் தன்னுயிர் தந்த முத்துக்குமார் நினைவேந்தல் சென்னை கொளத்தூரில் 29.01.2020 காலை நடைபெற்றது. மதிமுக தலைவர் வைகோ சுடரேற்றித்




தொடங்கி வைத்தார். உலகத் தமிழ்ப் பேரவை தலைவர் நெடுமாறன் முத்துக்குமார் சிலையைத் திறந்து வைத்தார். பல்வேறு இயக்கங்கள் கட்சிகள் சார்பில் வீரவணக்கம்

செலுத்தப்பட்டது. தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தின் சார்பில் தோழர் மகிழன், தோழர் ஜீவானந்தம் உட்படத் தோழர்கள் கலந்து கொண்டு முத்துக்குமாருக்குச் செவ்வனக்கம் செலுத்தியதோடு தமிழீழ விடுதலைக்கு உறுதியாகத் துணை நிற்போம் என்று உறுதி ஏற்றனர்..தொடர்ந்து யாழ் பல்கலைக்கழக நினைவுத் தூண் இடிப்பைக் கண்டிக்கும் வகையில் முள்ளிவாய்க்கால் நினைவுத் தூண் அமைக்கப்பட்டது. தோழர் கலைச்செல்வன் எழுதி தமிழ்த் தேசம் சார்பில் நாம் வெளியிட்ட “முத்துக்குமார் - நெருப்பாய் வாழ்ந்தவன்” நூலின் இரண்டாம் பதிப்பு வெளியிடப்பட்டது.

**கொழுவைநல்லூர்:**

முத்துக்குமாரின் சொந்த ஊராகிய கொழுவைநல்லூரில் முத்துக்குமார் அறக்கட்டளை சார்பில் நடைபெற்ற ஈகி முத்துக்குமார் 12ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வில் தோழர் ஆ.கலைச்செல்வனின் **முத்துக்குமார் - நெருப்பாய் வாழ்ந்தவன் நூலின்** இரண்டாம் பதிப்பு வெளியிடப்பட்டது.

**முத்துக்குமார் - நெருப்பாய் வாழ்ந்தவன்**

**ஆசிரியர்: ஆ, கலைச்செல்வன்**

**முதல் பதிப்பு, 2010: தமிழ்த்தேசம் வெளியீடு.**

**இரண்டாம் பதிப்பு, 2021: தென்குமரி பதிப்பகம்,**

**86A, Phase I, Lane II, Le Chalet,**

**மேவளூர்குப்பம், காஞ்சிபுரம் மாவட்டம் - 602 105**

**thenkumari_tamil@gmail.com**

**தொலைபேசி: 9176992001.**

**விலை: ரூ. 160/-.**











VOLTE 73% 17:22
ஏ.கு.முத்துக்குமார்
12 ம் ஆண்டு நினைவேந்தல்
முத்துக்குமார் நெருப்பாய் வாழ்ந்தவன்
நூல் வெளியீட்டு விழா
நாள் : 29.01.2021
காலை : 9.00 மணி
இடம் : மேலாத்தூர் ஊராட்சி திருமண மண்டபம். ஆத்தூர்
தலைமை
ச.உதயகுமார்
தலைவர் முத்துகுமார் அறக்கட்டளை
வரவேற்புரை
இ.குமார்
பு.இ.மு
முன்னிலை
அ.பி.சதீஸ்குமார்
மேலாத்தூர் ஊராட்சி மன்ற தலைவர்
வே.வேல்ராஜ்
மாவட்ட செயலாளர் நாம் தமிழர்கட்சி
நூல் வெளியிடுபவர்
விநாயக ரமேஷ்
ம.தி.மு.க (மாநில சுற்றுச் சூழல் பாதுகாப்புகுழு உறுப்பினர்)
நூல் பெற்றுக்கொள்வோர்
சொ.சு.தமிழினியன்
மண்டல செயலாளர் வி.சி.க
இரா.இராசபாண்டி
இலக்கிய அணி தி.மு.க
கருத்துரை
பால் பிரபாகரன்
கொள்கை பரப்பு செயலாளர், திராவிடர் விடுதலைக்கழகம்
சு.க.சங்கர்
மாநில அமைப்பு செயலாளர், திராவிட தமிழர் கட்சி
உ.ஞான சேகரன்
நாம் தமிழர் கட்சி
அருந்ததி அரசு
மாநில துணை பொதுச் செயலாளர், ஆதித்தமிழர் பேரவை
சிறப்புரை
தோழர் வெ.கனியமுதன்
துணை பொதுச் செயலாளர் வி.சி.க
தோழர் மீ.த.பாண்டியன்
தலைவர் தமிழ்தேச மக்கள் முன்னனி
ஏற்புரை
ஆ.கலைச்செல்வன்
நூலாசிரியர்
நன்றியுரை
ஆ.செல்வத்துரை
முத்துக்குமார் அறக்கட்டளை செயலாளர்
அரசியல் கட்சியினர், புரட்சிகரஅமைப்புகள் பங்கேற்கின்றனர்
... அனைவரும் வருக ...
நிகழ்ச்சி ஏற்பாடு :
முத்துக்குமார் அறக்கட்டளை
கொழுவைநல்லூர்

# பாசிச பாசக எதிர்ப்பு 2021 சட்டப் பேரவைத் தேர்தல் வேலைத் திட்டத்திற்கான கலந்தாய்வுக் கூட்டத் தீர்மானங்கள்

2021 தமிழகச் சட்டப் பேரவைத் தேர்தலில் தமிழக மக்களுக்குப் பகையான பாசிச பாசகவைத் தோற்கடிப்போம்!”

என்ற முழக்கத்தின் கீழ் தமிழ்த்தேச மக்கள் முன்னணி அழைத்த கலந்தாய்வுக் கூட்டம் ஏறக்குறைய 75க்கு மேற்பட்ட தமிழ் சமூக அரசியல் அமைப்புகளின் பங்கேற்புடன் 20-01-2021 புதன்கிழமை காலை 10 மணிக்கு சேப்பாக்கத்தில் உள்ள நிருபர்கள் சங்கத்தில் நடந்தேறியது. அதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு.

1. 2014இல் பாசக மத்தியில் ஆட்சிக்கு வந்த நாள் முதல் திட்டக்கமிசன் கலைப்பு, ஜி.எஸ்.டி., நீட் திணிப்பு, பண மதிப்பிழப்பு, உயர்சாதியினருக்கு 10% இட ஒதுக்கீட்டுச் சட்டம், இந்தி-சமற்கிருதத் திணிப்பு, குடியுரிமைத் திருத்தச் சட்டங்கள், இரயில்வே, விமானம், துறைமுகம், இராணுவ தளவாடத் தயாரிப்பு என அரசுத்துறைகள் தனியாருக்குத் தாரைவார்ப்பு, தொழிலாளர் சட்டத் திருத்தங்கள், 567 தொழிலாளர் நீதிமன்றங்கள் கலைப்பு, வேளாண் சட்டத் திருத்தங்கள், மின்சார சட்டத் திருத்தம் என சமூகநீதி, மாநில உரிமை, தொழிலாளர் - உழவர் நலன் ஆகியவற்றின் மீது வரலாறு காணாத தாக்குதல் நடத்தப்பட்டு வருகின்றது.

2. ஒரே தேசியம், ஒரே சந்தை, ஒரே மொழி, ஒரே மதம், ஒரே தேர்வு, ஒரே வேளாண் கொள்கை, ஒரே தேர்தல் என ஒற்றையாட்சி சர்வாதிகார வழியில் முன்னேறிவருகிறது பாசிச பாசக. இவ்வாட்சி, நிலவும் நாடாளுமன்ற அமைப்புமுறையைச் செயலிழக்கச் செய்து சிறுகும்பல் பாசிச சர்வாதிகாரக் கொடுங்கோல் ஆட்சியாக வளர்ந்து செல்கிறது.

3. நேரடியாகவும் மறைமுகமாகவும் தமிழ்நாட்டு உரிமைகளைப் பறித்தல், ஆளுநர் தலையீடு, ஜி.எஸ்.டி. பங்குதொகையைத் தரமறுத்தல், வேளாண்மை, சட்ட ஒழுங்கு, கல்வி என மாநிலப் பட்டியல் விவகாரங்களில் மத்திய அரசு சட்டமியற்றுதல், தமிழகக் கட்சிகளைச் சிதறடித்தல், தமிழக அரசியலைக் குழப்பி நிலையற்ற தன்மைக்கு மாற்றுதல் (Destabilize) என சங்பரிவார பாசிச பாசக தில்லி அதிகாரத்தைக் கொண்டு தமிழகத்தின் மீது தொடர் தாக்குதல் நடத்தி வருகிறது.

4. பாசகவை ஒரு பாசிசக் கட்சியாகவும் தமிழ், தமிழர், தமிழக விரோத சக்தியாகவும், சமய சமூக நல்லிணக்கத்திற்கு எதிரான சக்தியாகவும் தமிழ்நாட்டின் சமூக நீதி, மாநில உரிமை, மக்கள் நலன்பேண் அரசியல் ஆகிய மரபார்ந்த அரசியலுக்கு நேரெதிரான அந்நிய சக்தியாகவும் பிரகடனப்படுத்துகிறோம். தமிழக மக்கள் வரவிருக்கும் சட்டப்பேரவைத் தேர்தலில் பாசிச பாசகவைப் புறக்கணித்து அக்கட்சி போட்டியிடும் அனைத்துத் தொகுதிகளிலும் தோல்வியடையச் செய்ய வேண்டும் என்று பாசிச பாசக எதிர்ப்பியக்கத்தின் சார்பாக அறைகூவல் விடுக்கிறோம்.

5. 'பாசிச பாசக - எதிர் - தமிழ்நாடு' என 2021 தமிழ்நாடு சட்டப் பேரவை தேர்தலில் களம் அமைத்து பாசக போட்டியிடுகின்ற அனைத்துத் தொகுதிகளிலும் தேர்தல் பணியாற்றி பாசகவைத் கட்டுப்பணம் கூடப் பெறமுடியாத வகையில் தோற்கடிக்க பாசிச எதிர்ப்பில் உறுதிபூண்ட அனைத்து சனநாயக ஆற்றல்களும் களங்காண்பது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

6. பாசிச பாசக தமிழ்நாட்டில் காலூன்ற விடாமல் தடுக்க வேண்டியது வரலாற்றுக் கடமையும். அவசரத் தேவையும் ஆகும். ஆகவே, பாசிச எதிர்ப்பில் அக்கறையுள்ள சனநாயக சக்திகள் அனைவரும் வாய்ப்புள்ள வழிகளில் எல்லாம் பாசிச பாசகவைத் தோற்கடிக்கும் இயக்கத்தில் பங்கேற்க வேண்டும் என்று அறைகூவல் விடுக்கிறோம்.

(இந்தக் கலந்தாய்வுக் கூட்டத்தில் தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தின் சார்பில் தலைமைக்குழு உறுப்பினர் தோழர் மகிழன் கலந்து கொண்டார்.)

ஒருங்கிணைப்புக் குழுவிற்காக,

பாலன்

தொடர்பு எண்கள் - 7010084440, 9047521117, 6379687413, 8056119257, 8778141813

செங்காட்டான் குறிப்பு:

## பொய்க்கால் குதிரைகள்

தமிழ்நாடு சட்டப் பேரவைக்கான தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கிறது. சட்டப் பேரவை என்பது அரசின் ஓர் உறுப்பு, ஆட்சி செய்யும் உறுப்பு, நீதி செய்யும் உறுப்பு என்பது போல் இது சட்டம் செய்யும் உறுப்பு. இந்தத் தேர்தலில் போட்டியிடும் கட்சிகளும் தனிமனிதர்களும் இப்போதிருக்கும் சட்டங்கள் பற்றியும் இனி இயற்ற வேண்டிய சட்டங்கள் பற்றியும் விவாதிக்க வேண்டும். அவை தொடர்பான உறுதிகளை மக்களுக்குத் தர வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக, தாங்கள் இடம்பெறப் போகும் சட்டப் பேரவைக்கு சட்டமியற்றும் இறைமை உள்ளதா என்று சொல்ல வேண்டும். அதாவது இந்திய அரசமைப்பின் குறைநிறைகள் பற்றிப் பேச வேண்டும்.




ஆனால் -

தேர்தல் களத்தில் ஒரே விவாதப் பொருள்: யார் முதலைமைச்சர்? எனபதாகவே உள்ளது. எடப்பாடி பழனிச்சாமி "நான் நானேதான் முதலமைச்சர் வேட்பாளர்' என்கிறார். மு.க. ஸ்டாலினுக்கு இந்தச் சிக்கலே இல்லை. கூட்டணிக் கட்சித் தலைவர்களே ஸ்டாலினை வருங்கால முதலமைச்சர் என்று மேடைக்கு மேடைக்கு அறிவித்துக்





கொண்டிருக்கிறார்கள். பாவம் இடதுசாரிகள்! ஸ்டாலின் ஆசி பெற்றும் கோடி பெற்றும்தான் தேர்தல் களத்துக்கே வந்தாக வேண்டும்! கமல்ஹாசனுக்கும் செந்தமிழன் சீமானுகும் மட்டும் வண்ண வண்ணக் கனவுகள் வராமலா போகும்? வரட்டும், வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் நான்… நான்… நான்… என்று அலறுவதுதான் அருவருப்பாக உள்ளது. நம்மவரா? தன்னவரா? நாம் தமிழரா? நான் முதல்வரா?

அது சரி. முதலமைச்சர் பதவிக்கா தேர்தல் நடக்கப் போகிறது? எங்கே எப்போது? அதற்கொரு வாக்குச் சீட்டும் வாக்குப் பதிவும் வாக்குச் சாவடியும் உண்டா? சட்டப்பேரவைத் தேர்தல் முடிந்த பின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களில் பெரும்பான்மையினர் தேர்ந்தெடுக்கும் தலைவரை ஆளுநர் அழைத்து அமைச்சரவை அமைக்கச் சொல்வார். இப்படித்தான் முதலமைச்சர் வர வேண்டும். அது வரை முதலமைச்சர் வேட்பாளர் என்ற பேச்சுக்கே இடமில்லை.

ஆனால் இந்த அரசமைப்புக்கு அடிமைப்பட்ட எல்லாக் கட்சிகளும் முதலமைச்சர் வேட்பாளர் என்று பேசுவது பொய்க்கால் குதிரைகளின் ஆட்டம்! எந்தப் பொய்க்கால் குதிரை போர்ப் புரவியாகப் போகிறது? இது மக்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய உண்மையான சிக்கல்களிருந்து அவர்களது கவனத்தைத் திசை திருப்ப உதவுகிறது. உரிமைச் சிந்தனையை மழுங்கடிக்கப் பயன்படுகிறது. தனிமனித வழிபாட்டையும் வல்லாட்சியத்தையும் வளர்த்துத் தன்மானத்தையும் குடியாட்சியத்தையும் குழிதோண்டிப் புதைக்கப் பார்க்கிறது.

எச்சரிக்கை தமிழர்களே!

# புரட்சியையும் விதைக்கும் விவசாயிகள்:

**சமந்தா**

இந்தியாவில் ஊதியக் குறைப்பாலும், வேலையிழப்பினாலும், விலைவாசி உயர்வாலும் மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். உலோகங்கள், கட்டுமானப் பொருட்களின் விலைவாசி கடுமையாக உயர்ந்துள்ளது. மூலப்பொருட்களின் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்தக் கோரி வார்ப்பாலைகள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளன. பொருளாதார நெருக்கடியில் உள்ள மக்களிடமிருந்தே அயோத்தியில் பிறக்காத ராமருக்கு கோயில் கட்டுவதற்கு நிதி திரட்டப் போகிறார்களாம். ஏன் இதற்கும் அந்நிய முதலீடுகளையே அனுமதிக்கலாமே?

கோவிட் தாக்கத்தால் "இந்தியாவில், அமைப்புசார் தொழிலாளர்களின் ஊதியம் 3.6 விழுக்காடு குறைக்கப்பட்டுள்ளதாகவும், அமைப்புசாராத் தொழிலாளர்களின் ஊதியம் 22.6 விழுக்காடு குறைந்துள்ளதாகவும் சர்வதேசத் தொழிலாளர் கூட்டமைப்பின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பாஜக அரசு இது வரை 0.75 விழுக்காடு நிதித் தொகுப்பை மட்டுமே அளித்துள்ளது, முதல் நிதித் தொகுப்புக்குப் பிறகு அறிவிக்கப்பட்ட அனைத்து நிதித் தொகுப்புகளும் வெறும் கடன் திட்டங்களே தவிர நிதிச் சலுகைகள் அல்ல, ஆனால் நிதியமைச்சகம் 10 விழுக்காட்டிற்கு மேல் நிதித் தொகுப்பை அளித்துள்ளதாகவும், அதனால் பொருளாதாரம் வேகமாக மீட்சி அடைவதாகவும் பொய்களை அடுக்குகிறது. பொருளாதார மீட்சிக்கான நிதித் தூண்டல்களை செல்வம் உருவாக்குபவர்களாக கருதப்படும் பெருமுதலாளிகளும் அளிக்கத் தயாராக இல்லை, அவர்கள் பொருளாதாரத் தூண்டல்களை வெளிநாடுகளுக்குத்தான் அளித்துள்ளார்கள் 2020இல் மட்டும் இந்திய நிறுவனங்களால் சுமார் 13 பில்லியன் டாலருக்கு வெளிநாடுகளில் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

2020இல் டாலரின் மதிப்பு 6 விழுக்காட்டிற்கு மேல் குறைந்து டாலர் குறியீடு 90களுக்குச் சரிந்துள்ளது. டிசம்பர் மாதத்தில் இந்தியப் பங்குச் சந்தைகளில் 64,940 கோடி அளவிற்கு அந்நிய நிதி முதலீடுகள் செய்யப்பட்டுள்ளன. அப்படியிருந்தும் இந்திய ரூபாய் டாலருக்கு எதிராக மதிப்பேற்றம் பெறாமல் சரிந்து ஆசிய அளவில் வலுவிழந்த நாணயமாகக் காணப்படுகிறது. ஆசியாவின் மற்ற நாணயங்கள் மதிப்பேற்றம் பெறும் போது இந்திய ரூபாய் மதிப்பு தலைமை

வங்கியின் வெளிச்சந்தை நடவடிக்கைகளால் ஏற்றம் பெறாமல் தடுக்கப்பட்டுள்ளது. மத்திய வங்கி 2020இல் 10,000 கோடி டாலருக்கு மேல், மொத்தப் பொருளாக்க மதிப்பில் 4 விழுக்காட்டு மதிப்பிற்கு அமெரிக்க டாலர்களைத் தொடர்ந்து வாங்கி வருகிறது. எதற்காக என்றால் ஏற்றுமதிக்கான இந்தியாவின் போட்டித் திறன் குறைந்து விடக் கூடாது என்பதற்காகவே இது செய்யப்படுகிறது. . இந்தியாவின் மொத்தப் பொருளாக்க மதிப்பில் ஒரு சிறு பகுதியாகவே ஏற்றுமதி உள்ளது. குறிப்பாக இந்த ஆண்டில் உலகளவிலான கோவிட்-19 தாக்கத்தால் ஏற்றுமதியின் மதிப்பு மேலும் குறைந்துள்ளது. சர்வதேச வர்த்தகம் மந்த நிலையில் உள்ள போது ஏற்றுமதியின் மூலம் பொருளாதார வளர்ச்சிக்குத் தூண்டுதல் அளிக்கலாம் என்பது முட்டாள்தனமான வாதமே. கச்சா எண்ணெய் விலை அதிகரித்துள்ள நிலையில் தலைமை வங்கியின் ரூபாய் மதிப்பைக் குறைக்கும் நடவடிக்கைகள் இந்தியாவின் இறக்குமதிச் செலவையும் வர்த்தகப் பற்றாக்குறையையும் அதிகரித்துள்ளன. அமெரிக்க டாலர்களை வாங்கும் வேண்டா வெட்டி வேலையைச் செய்வதற்குப் பதிலாக மத்திய வங்கி மத்திய அரசிற்கு நேரடியாக நிதிக் கடன்களை அளித்திருந்தால் அதன் மூலம் கூடுதல் நிதிச் சலுகைகளை அரசால் அளித்திருக்க முடியும். அந்த நிதிச் சலுகைகளை வழக்கம் போல் பெருமுதலாளிகளுக்கு அளிக்காமல், மக்களின் வாங்குந்திறனை உயர்த்துவதற்கான வேலைவாய்ப்புகளையும், பணச் சலுகைகளையும் அளித்திருந்தால் ஓரளவுக்கேனும் வேண்டல் மீட்கப்பட்டு பொருளாதார நடவடிக்கைகளுக்குத் தூண்டுதலாக அமைந்திருக்கும். வர்த்தகப் பற்றாக்குறையும், பணவீக்கமும் சிறிதளவேனும் கட்டுப்படுத்தப்பட்டிருக்கும். ஆனால் மத்திய அரசின் கோரிக்கை இல்லாமல் மத்திய வங்கியால் தன்னிச்சையாக நிதிப் பற்றாக்குறையைப் பணமாக்கவும் இயலாது. ஆனால் நவீன தாராளமயப் பெட்டியைத் தாண்டிச் சிந்தித்துச் செயல்படுவதற்கான அறிவோ துணிவோ பாஜக அரசுக்கு இல்லாததால் அதற்கான வழியும் தடைபட்டது. பெயரளவுக்கு மட்டும்தான் தற்சார்பு என்பது கூவப்பட்டு வருகிறது. இந்தியாவின் வர்த்தகப் பற்றாக்குறையைக் குறைப்பதற்கான கட்டுப்பாடுகளை ஏற்படுத்தாமல் மூலப்பொருட்கள், இடைநிலைப் பொருட்கள் இறக்குமதி செய்வதற்கு எந்த தடையும் இல்லை' என நிதியமைச்சர் அறிவித்துள்ளார்.

மத்திய வங்கியின் வெளிச்சந்தை நடவடிக்கைகளும், 4 விழுக்காடு வங்கிக் கடனும் யாருக்கு உதவியுள்ளன? பங்குச் சந்தைகளில் பட்டியலிடப்பட்ட பெருநிறுவனங்களுக்கு மட்டுமே உதவியுள்ளன. விரைவில் வெடிக்கப்போகும் ஒரு பங்குச்சந்தைக் குமிழி உருவெடுத்துள்ளது.

பங்குச் சந்தையில் ஆரம்பப் பொதுப்பங்கு வழங்கல்கள் மூலம் பெருநிறுவனங்கள் பெருமளவில் மூலதனம் திரட்டி வருகின்றன. அவற்றின் பங்குகளது விலை அவற்றின் உள்ளார்ந்த மதிப்பைக் காட்டிலும் பல மடங்கு உயர்ந்து வருகிறது. மூலதனத்தை உயர்த்த முடியாமல் சிறு நிறுவனங்கள் போராட வேண்டிய நிலையில் உள்ளன. அவற்றின் பங்குகளது விலை உள்ளார்ந்த மதிப்பைக் காட்டிலும் வீழ்ந்துள்ளது. பொருளாதார மந்த நிலையை முதலீட்டாளர்கள் குறைந்த விலையில் பங்குகளை வாங்குவதற்கான வாய்ப்பாகப் பார்க்கின்றனர். பெருநிறுவனங்களில் முதலீடு செய்வதே முதலுக்கு பாதுகாப்பு என்ற அடிப்படையில் அவற்றின் பங்குகளை வாங்கிக் குவித்துள்ளார்கள். இந்த ஆண்டில் குடும்பங்களுக்குச் சொந்தமாக உள்ள பெருநிறுவனங்கள், வணிக நிறுவனங்களின் சந்தை மூலதன மதிப்பு 31 விழுக்காடு உயர்ந்து ரூ. 115 டிரில்லியனாக அதிகரித்துள்ளது. அதானியின் பசுமைப் பங்குகள் மட்டும் 565 விழுக்காடு உயர்ந்துள்ளன. பங்குச் சந்தைகளில் அனைத்துத் தனியார் துறை நிறுவனங்களின் ஒருங்கிணைந்த சந்தை மூலதன மதிப்பு இந்த ஆண்டு 24.4 விழுக்காடு அதிகரித்து 142.4 லட்சம் கோடி ரூபாய்க்கு மேல் உயர்ந்துள்ளது. இந்தியாவில் பெரும் பணக்காரர்களின் சொத்து இந்த ஆண்டில் 33 விழுக்காடு உயர்ந்து 364 பில்லியன் டாலராக அதிகரித்துள்ளது. பணக்காரர்க் கூட்டணியில் புதிதாக 10 பெரும்பணக்காரர்கள் சேர்ந்ததால் இவர்களின் மொத்த எண்ணிக்கை 80லிருந்து 90ஆக உயர்ந்துள்ளது.

தனது வளர்ச்சியையே இந்தியாவின் வளர்ச்சியாகப் பார்க்கும் முகேஷ் அம்பானி இந்திய அரசு செயல்படுத்தி வரும் டிஜிட்டல் இந்தியாமயமாதலில் தனிநபர் வருமானம் உயரும் என்கிறார். யாருடைய தனிநபர் வருமானம் உயரும் என்பதைச் சொல்லவும் வேண்டுமா? ரிலையன்ஸ் குழுமம் இந்தியாவின் கிழக்குக் கடற்கரையில் சூழலியல் நெறிகளுக்குப் புறம்பான முறையில் எரிவாயு எடுக்கும் திட்டத்தைச் செயல்படுத்த உள்ளது. 2021இல் அரசு கூடுதலாகக் குறைந்தது 300 கனிமச் சுரங்கத் தொகுதிகளை ஏலம் விடுவதற்குத் தயாராயிருக்கிறது. உச்ச நீதிமன்றமும் ஒப்புக்குக் கூட சூழலியல் நெறிகளுக்கு முக்கியத்துவம் அளிப்பதில்லை. தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களுக்குச் சுற்றுச்சூழல் அனுமதி தேவையில்லை என்றும் சேலம் - சென்னை எட்டுவழிச் சாலைத் திட்டத்தைத் தொடரலாம் என்றும் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்திருப்பது கடும் கண்டனத்திற்குரியது. புதிய திட்டங்களுக்கு சுற்றுச்சூழல் அனுமதியைத் தவிர்ப்பதற்கு அவற்றை தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களுடன் கோத்து விடும் போக்கையே இது ஏற்படுத்தும் என்பதைக் கூற வேண்டிய அவசியமில்லை. அக்டோபரில் மத்திய அரசு வரி வருவாயிலிருந்து

மாநிலங்களுக்கு வழங்க வேண்டிய நிதிப் பங்கீடு ஐந்தில் ஒரு பங்கு குறைக்கப்பட்டுள்ளது. தற்போது, மத்திய நிதியுதவித் திட்டங்களுக்கான ஒதுக்கீடுகள் 9 விழுக்காடு குறைக்கப்பட்டுள்ளன.

பெருநிறுவனங்கள் அரசியல் கட்சிகளுக்குக் கொடுத்த தேர்தல் நிதியைக் கடுவட்டியோடு அறுவடை செய்வதற்கும், சாறுண்ணிக் கட்சிகளுக்கு அவை தொடர்ந்து நிதியளிக்கவும் ஏதுவாகவே பாஜக அரசு சந்தர்ப்பவாதக் கொள்கைகளைச் செயல்படுத்துகிறது.

நிதின் கட்காரி பொருளாதார வளர்ச்சிக்கு சிறுகுறு நடுத்தர தொழில்துறையின் பங்களிப்பை 30 விழுக்காட்டிலிருந்து 40 விழுக்காடாக உயர்த்த வேண்டும் என்றும், சிறுகுறு நடுத்தரத் தொழில் துறைகளில் இருந்து மேலும் 5 கோடி வேலைகளை உருவாக்கவும் அரசு திட்டமிட்டுள்ளதாகக் கூறி வருகிறார். ஆனால் சிறு நிறுவனங்கள் கடன் பெற இயலாத நிலையில் தவித்து வருகின்றன என்பதே உண்மை நிலவரமாக உள்ளது. இந்தியாவில் பெருநிறுவனங்கள் கடன் பெறுவதற்குப் பின்பற்றப்படும் ‘பேசல்’ (BASEL reforms) விதிமுறைகளையே சிறு நிறுவனங்களுக்கும் செயல்படுத்துவதை எந்த விதத்திலும் நியாயப்படுத்த முடியாது. குறைந்த சந்தை மதிப்பைக் கொண்ட சிறு நிறுவனங்களுக்கு அதிக வட்டியிலேயே கடன் அளிக்கப்படுவதும், அதிகச் சந்தை மதிப்பைக் கொண்ட பெருநிறுவனங்களே மலிவுக் கடன் பெற முடிவதும் சமூக நீதிக்கு முற்றிலும் புறம்பானதே என்பதுடன் சிறு நிறுவனங்களின் செயல்பாடுகளை, வளர்ச்சியை தடுப்பதாகவும் உள்ளன. பேசல் விதிமுறைகளால் வங்கிக் கடன் பெற முடியாமல் சிறு நிறுவனங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இந்தியாவில் 20 லட்சம் உறுப்பினர்களைக் கொண்ட 740 சிறு குறு நடுத்தர நிறுவனங்களின் கூட்டமைப்புகள். வங்கித் துறையில் ’பேசல்’ விதிமுறைகளைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளன.

ஆனால் இவை எதுவும் தெரியாதது போல் மத்திய வங்கி ஆளுநர் சக்தி காந்தா தாஸ் வங்கிகள் கடன் வழங்குதலைப் பிணையத்தின் அடிப்படையில் என்றில்லாமல் பணப் புழக்கத்தின் அடிப்படையிலான கடன்களில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்று பெயரளவிற்குக் கூறி வருகிறார்.

2019ஆம் ஆண்டில் மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றிய பிறகு பாஜக அரசு பொதுத்துறை நிறுவனங்களை தனியார்மயப்படுத்துவதன் மூலம் பெருமளவு நிதி திரட்டத் திட்டமிட்டிருந்தது. அதன் ஒரு பகுதியாக இந்த நிதியாண்டில் 2.1 லட்சம் கோடி ரூபாய் முதலீடு செய்ய இலக்கு நிர்ணயித்தது. இந்த ஆண்டு பாஜக அரசு பொதுத்துறைப் பங்குகளைத் தனியார்மயப்படுத்துவதன் மூலம் இது வரை 42,871.94 கோடி திரட்டியுள்ளது. பொதுத்துறை நிறுவனங்களின் தனியார்மயம் அரசு நினைத்த வேகத்தில் நடக்கவில்லை என்பதே இந்த ஆண்டில் ஆறுதலளிக்கும் விசயமாக உள்ளது. அனில் அகர்வால் 10 பில்லியன் டாலருக்குப் பொதுத்துறைப் பங்குகளை வாங்கும் திட்டத்தில் உள்ளார். அவற்றின் சந்தை மதிப்பின் பெருவீழ்ச்சிக்காகக் காத்திருக்கிறார். தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் நிறுவனத்தின் மூலம் மக்களுக்கு நோய்களை ஏற்படுத்தவும், போராட்டத்தில் ஈடுபட்ட 13 பேர் கொல்லப்படவும் காரணமான 'மனித நேயர்' அனில் அகர்வால் வணிகத்தின் இலாபங்கள் சமூகத்தின் மிகவும் முக்கியமான தேவைகளுக்கு உதவ வேண்டும் என்றும், நம் பெண்கள் மற்றும் குழந்தைகளின் ஆரோக்கியமான எதிர்காலத்தைப் பாதுகாப்பதை விட முக்கியமானது எதுவுமில்லை என்றும் நம்புவதாகப் பசப்புகிறார்.

பொதுத் துறை நிறுவனங்களின் செயல்திறனுக்கும் மதிப்பும் முக்கியத்துவம் அளிக்கப்படாது, அவற்றின் சந்தை மதிப்பை அதிகப்படுத்தவே அரசு முயல்கிறது. அரசின் தொடர்ச்சியான பங்கு விற்பனையே பொதுத்துறை நிறுவனத்தின் குறைந்த செயல்திறனுக்கு முக்கியக் காரணமாகும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மும்பை பங்குச் சந்தையில் பொதுத்துறை நிறுவனங்களின் குறியீடு 18 சதவீதம் குறைந்துள்ளது. கோவிட்-19 நோயால் பெரும் எண்ணிக்கையில் மக்கள் பாதிக்கப்பட்டதற்கும், உயிழப்புகளுக்கும் லாப நோக்கில் செயல்படும் தனியார் மருத்துவ நிறுவனங்களே காரணம் என்ற போதும் கூட சுகாதாரத் துறையில் அரசின் முதலீடுகளை அதிகப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. சுகாதாரத் துறையில் தனியார் நிறுவனங்களின் பங்கை அதிகரிக்க வேண்டும் என்றுதான் மீண்டும் மீண்டும் நிதி ஆயோக் கூறி வருகிறது.

ஒருவர் ஒரு கோடி ரூபாய் மதிப்பிற்குச் சொத்துகள் வைத்துள்ளார் எனக் கொள்வோம். அவர் அந்த ஒரு கோடி ரூபாயை வருவாய் பெறும் முறையில் முதலீடு செய்யாமல் அதைப் பகுதி பகுதியாக விற்றுச் செலவழித்தால் அவரின் சொத்துகளது மதிப்பு குறைந்து விடும். அதை நாம்

வளர்ச்சி என்று சொல்வோமா, வளர்ச்சிக் குறைவு என்று சொல்வோமா? வளர்ச்சிக் குறைவு என்றுதானே குறிப்பிடுவோம், இன்னும் சொல்லப் போனால் ஊதாரித்தனமாகவே அது கருதப்படும் இல்லையா? அதை வளர்ச்சி என்று ஒரு முட்டாளால் கூட ஏற்றுக் கொள்ள இயலாது. ஆனால் இந்திய அரசு பொதுச் சொத்துக்களை ஒவ்வோர் ஆண்டும் பகுதி பகுதியாக தனியாரிடம் விற்பனை செய்து விட்டு அதை வளர்ச்சி என்றே குறிப்பிடுகிறது. இப்படித்தான் இந்தியாவின் வளர்ச்சி என்பது மக்களின் வளர்ச்சியாக இல்லாமல் தனியார் பெருநிறுவனங்களின் வளர்ச்சியாக உள்ளது. ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுத் திட்டம் (யுஎன்டிபி) வெளியிட்டுள்ள 2019ஆம் ஆண்டிற்கான மனித வளர்ச்சிக் குறியீட்டில் இந்தியா ஓரிடம் பின்சென்று 189 நாடுகளில் 131ஆம் இடத்தில் உள்ளது, ஆனால் வணிகத்தை இலகுவாக்குவதற்கான குறியீட்டில் 14 இடங்கள் முன்னேறி 63ஆம் இடத்தில் உள்ளது என்பதிலிருந்தே இந்தியாவின் வளர்ச்சிப் பாதை எத்தகையது என்பதையும் யாருக்கானது என்பதையும் புரிந்து கொள்ள முடியும்.

**<u>பணவீக்கம்:</u>**

உணவுப் பொருட்களின் விலை, குறிப்பாகக் காய்கறிகளின் விலை மிகவும் அதிகரித்துள்ளது. நவம்பர் மாதத்தில் நுகர்வோர் குறியீடு அடிப்படையிலான சில்லறைப் பணவீக்கத்தின் அளவு 6.93 விழுக்காடு அதிகரித்துள்ளது, உணவுப் பொருட்களின் விலைவாசி 9.10 விழுக்காடு அதிகரித்துள்ளது. காய்கறிகளின் விலைவாசி 15.63 விழுக்காடு அதிகரித்துள்ளது. பருப்பு வகைகளின் விலைவாசி 17.91 விழுக்காடு அதிகரித்துள்ளது. முட்டையின் விலை 20.26 விழுக்காடு உயர்ந்துள்ளது. மீன், இறைச்சியின் விலை 16.67 விழுக்காடு உயர்ந்துள்ளது. தமிழ்நாட்டில் பணவீக்கம் 6.74 விழுக்காடு உயர்ந்துள்ளது.

**<u>அக்டோபரில் உற்பத்தி நிலை:</u>**

புள்ளியியல் அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட தொழில்துறை உற்பத்திக் குறியீட்டு அறிக்கையின் படி முதன்மைத் துறைகளின் உற்பத்தி 3.6 விழுக்காடு அதிகரித்துள்ளது. அதில் சுரங்கத் துறையில் உற்பத்தி 1.5 விழுக்காடு சரிவடைந்துள்ளது. செய்பொருளாக்கத் துறையில் உற்பத்தி 3.5 விழுக்காடும், மின்சார உற்பத்தி 11.2 விழுக்காடும் அதிகரித்துள்ளன.

பயன்பாட்டு அடிப்படையிலான வகைப்பாட்டில் முதன்மைப் பொருட்களின் உற்பத்தி 3.3

விழுக்காடு சரிவடைந்துள்ளது. உடனடி நுகர்வுப் பொருட்கள் (7.5%), மூலதனப் பொருட்கள் (3.3%), இடைநிலைப் பொருட்கள் (0.8%), கட்டுமானப் பொருட்கள் (7.8%), நீடித்த நுகர்வுப் பொருட்கள் (17.6%) ஆகியவற்றின் உற்பத்தி அதிகரித்துள்ளது.

**நவம்பரில் தொழில்துறை வளர்ச்சி:**

தொழில்துறை மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறை வெளியிட்ட எட்டு முக்கியத் தொழில்களின் ஒருங்கிணைந்த உற்பத்திக் குறியீடு நவம்பரில் 2.6 விழுக்காடு அதிகரித்துள்ளது. நிலக்கரி உற்பத்தி 2.9 விழுக்காடும், உரத்துறை உற்பத்தி 1.6 விழுக்காடும், மின்சார உற்பத்தி 2.2 விழுக்காடும் அதிகரித்துள்ளது. கச்சா எண்ணெய் உற்பத்தி 4.9 விழுக்காடும், இயற்கை எரிவாயு உற்பத்தி 9.3 விழுக்காடும், பெட்ரோலிய சுத்திகரிப்பு உற்பத்தி 4.8 விழுக்காடும் குறைந்துள்ளன. எஃகு உற்பத்தி 4.4 விழுக்காடும், சிமெண்ட் உற்பத்தி 7.1 விழுக்காடும் குறைந்துள்ளன.

தேசியக் குடும்பநலக் கணக்கெடுப்பு 2019-20:

22 மாநிலங்கள்/ஒன்றியப் பிரதேசங்களில் முதல் கட்டமாக மேற்கொள்ளப்பட்ட தேசியக் குடும்ப நலக் கணக்கெடுப்பின் முடிவுகளை சுகாதாரம், குடும்ப நலத்திற்கான அமைச்சகம் வெளியிட்டுள்ளது. இந்தக் கணக்கெடுப்பு இதற்கு முன்னர் 2015-16இல் எடுக்கப்பட்டது. 2019-20இல் குறைந்தது 10 ஆண்டுகள் வரை கல்வி பெற்ற ஆண், பெண்களின் எண்ணிக்கையில் பெரும் முன்னேற்றம் காணப்படவில்லை. குழந்தைத் திருமணங்களின் எண்ணிக்கை திரிபுரா, மணிப்பூர், அஸ்ஸாம் ஆகிய மாநிலங்களில் 2015-16இல் காணப்பட்டதைக் காட்டிலும் அதிகரித்துள்ளது. மேற்கு வங்கம் (41.6 விழுக்காடு), பீகார் (40.8 விழுக்காடு) ஆகிய மாநிலங்களில் குழந்தைத் திருமணங்கள் இன்னும் அதிகமாகவே உள்ளன. 2019-20இல் இரத்த சோகையுடைய குழந்தைகள், பெண்களின் எண்ணிக்கை அதிகமாகவே உள்ளது. காஷ்மீர், திரிபுரா, குஜராத், மேற்கு வங்காளம், ஆகிய மாநிலங்களில் 2015-16ஐ விட இரத்த சோகையுள்ள குழந்தைகள், பெண்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. மற்ற மாநிலங்களை விட காஷ்மீரில் ஆண்களும் அதிக அளவில் ரத்த சோகையுடையவர்களாக உள்ளனர் என்பது காஷ்மீரில் மத்திய அரசால் ஏவப்பட்ட ஒடுக்குமுறையால் காஷ்மீரிகள் எந்தளவு கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை வெளிப்படுத்தும் குறியீடே. கர்நாடகா, சிக்கிம், மகாராஷ்டிரா, இமாச்சலப் பிரதேசம், அசாம் ஆகிய ஐந்து மாநிலங்களில் குடும்ப வன்முறை அதிகரித்துள்ளது. அசாம், கர்நாடகா, மகாராஷ்டிரா, மேகாலயா, மேற்கு வங்கம் ஆகிய ஐந்து மாநிலங்களில் பாலியல் வன்முறை

அதிகரித்துள்ளது. 20 மாநிலங்கள்/ஒன்றியப் பிரதேசங்களில் குடும்பக் கட்டுப்பாடு சிகிச்சை செய்து கொள்ளும் ஆண்களின் எண்ணிக்கை 1 விழுக்காட்டிற்கும் குறைவாகவே காணப்படுகிறது. பிரசவம், குழந்தை வளர்ப்பு, குடும்ப வேலைகள் என குடும்ப அமைப்பால் பெருஞ்சுமைகளைத் தாங்கும் பெண்களுக்குக் கூடுதலாகக் குடும்பக் கட்டுப்பாடு சிகிச்சை என்ற சுமையையும் திணிக்கும் அவலநிலை எவ்வளவு அநீதியானது! இது இந்தியாவில் பாலின சமத்துவமின்மையை வெளிக்காட்டும் பல குறியீடுகளில் ஒன்று மட்டுமே.

கோவிட்-19 தாக்கத்திற்கு பிறகு பெண் தொழிலாளர்களின் எண்ணிக்கை மேலும் 9 சதவீதத்திற்கு மேல் குறுக்கமடைந்திருப்பது பாலின சமத்துவமின்மையை மேலும் அதிகமாக்கவே செய்யும்.

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறிய ஐக்கிய முடியரசு 2021இல் இந்தியாவுடன் தடையற்ற வணிகத்தில் ஈடுபடுவதற்கான ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொள்ள இருக்கிறது. டிசம்பரில் ஜெனிவாவில் நடைபெற்ற உலக வர்த்தகக் கூட்டமைப்பின் பேச்சுவார்த்தையில் அனைத்து நாடுகளுக்கும் கோவிட்-19 தடுப்பு மருந்தை கிடைக்கப் பெறச் செய்வதற்காக கோவிட்-19 தடுப்பு மருந்தை அறிவுசார் சொத்துரிமையிலிருந்து விலக்குவதற்கான முயற்சி அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியத்தால் தடுக்கப்பட்டு ஒருமித்த கருத்து இல்லாமல் தோல்வியடைந்தது. வளர்ந்து வரும் ஏழை நாடுகளையும், உலகெங்கும் வாங்கும் சக்தியற்ற கோடிக் கணக்கான ஏழை மக்களையும் நிர்க்கதியில் தள்ளியுள்ளது. மனித நேயமற்ற உலக வர்த்தக அமைப்பு. அருகி வரும் மீன்வளங்களைப் பாதுகாப்பதற்காக மீன்களின் ஏற்றுமதிக்கு அளிக்கப்படும் நிதிச் சலுகைகளைத் தடை செய்வதற்கான பேச்சுவார்த்தையும் தோல்வியில் முடிந்துள்ளது.

இந்த இரட்டை நெருக்கடிக் காலத்தைச் சரியாகப் பயன்படுத்தி மக்கள்விரோதச் சீர்திருத்தங்களை முன்னெடுப்பதற்கான எந்தவொரு வாய்ப்பையும் தவற விடவில்லை என்பதில் பெருமை கொண்டுள்ள நிதியமைச்சர் அடுத்த நிதி நிலை அறிக்கைக்கான உயர்மட்ட ஆலோசனைக் குழுவில் தொழிலதிபர்களின் கோரிக்கைகளையும் ஆலோசனைகளையும் பெற்று வருகிறார். இந்திய மக்களையும், மாநிலங்களையும் ஒடுக்குவதில் திறமை காட்டியதற்காகவும், ஆசியப் பிராந்தியத்தில் அமைதி நிலவாமல் போர்ச்சூழலைப் பேணி வருவதற்காகவும் நரேந்திர மோடிக்கு அமெரிக்க அதிபர் விருது அளித்துச் சிறப்பித்துள்ளார். டெல்லியில் கடுங்குளிரில் ஒரு

மாதத்திற்கும் மேலாகத் தொடர்ந்து போராடிவரும் லட்சக் கணக்கான விவசாயிகளை நிதியமைச்சரும் பிரதமரும் தொடர்ந்து புறக்கணித்து வருகிறார்கள். இது வரை 50க்கும் மேலான விவசாயிகள் இப்போராட்டத்திற்காக இன்னுயிர் ஈந்துள்ளனர். விவசாயிகளின் கோரிக்கைகளைப் புறக்கணிப்பதற்காகவே நாடாளுமன்றத்தின் குளிர்கால அமர்வை நடத்தாமல் தடுத்துள்ளனர். இதனால் மத்திய அமைச்சகங்கள், துறைகள் பண நெருக்கடியை எதிர்கொள்கின்றன உலகிலேயே தொழில்முனையும் பெருநிறுவனங்களுக்கான வரிவிகிதம் இந்தியாவில்தான் மிகவும் குறைவு எனப் பெருமிதம் கொள்ளும் நரேந்திர மோடி 'ரியல் எஸ்டேட்' துறையை ஊக்குவிக்கவே அக்கறை காட்டியுள்ளார். ஜனநாயகமற்ற இந்தப் பாசிச ஆட்சிதான் அமிதாப் காந்த்திற்கு அதிகமான ஜனநாயகமாக தெரிகிறது! அதுவே சீர்திருத்தங்களுக்குத் தடையாக உள்ளாதாக அவர் கடிந்து கொள்கிறார். மத ரீதியாகவும், இன ரீதியாகவும், பொருளாதார அடிப்படையிலும் ஒடுக்கப்பட்ட பஞ்சாப், ஹரியானா விவசாயிகள் "டெல்லி சலோ" போராட்டம் பஞ்சாபில் தொடங்கி இப்போது இந்தியாவெங்கும் எழுச்சியுடன் பரவியுள்ளது. இந்தியாவில் ஒரு பெரும் கூட்டம் ஒன்றுமே செய்யாமல் மேலும் மேலும் சொத்து சேர்த்து வருகிறார்கள். நமக்குச் சோறு போடும் விவசாயிகளோ போராட்டத்தில் ஈடுபடும் போதும் நிலத்தைப் பண்படுத்தி விவசாயம் செய்து வருகிறார்கள். அவர்கள் வெங்காயத்துடன் புரட்சியின் விதைகளையும் விதைக்கிறார்கள். அதன் வளர்ச்சியை எவராலும் தடுக்க முடியாது.


## தோழர் தியாகுவின் அறிவுக்குரல் கேட்க

## கீழுள்ள இணைப்பை சொடுக்கவும்

https:www.youtube.com/user/ajanthavalga?fbclid=IwAR0APppP9wjVctyVG1DShVLvQWRKtHOTuuR4g7zwwBeqLE-6zcuyiKZjxoQ

# முத்துக்குமார் மரண சாசனம்-

# நமக்குக் கைகாட்டி: கலங்கரை விளக்கம்

**கலைவேலு**




தமிழ்நாட்டின் அரசியலை ஒரே ஓர் உயிர், ஒரே ஒரு நொடியில் முற்றிலும் மடைமாற்றி விட்டது. தமிழரின் நலனைக் காவு கொடுக்கும் தன்னலப் பதவி வெறி அரசியல் பின்னங்கால் பிடரியில் அடிவிழ ஓட்டம் பிடித்து விட்டது. வாக்கு வேட்டை அரசியல் அம்மணப்பட்டு அவமானத்தில் கூனிக் குறுகி நிற்கிறது. தமிழ் மக்களை விடுவிக்கும் தமிழ்த் தேசியச் சமூக நீதி அரசியல் வீறு கொண்டு எழுகிறது. அது சுட்டெரிக்கும் சுடுநெருப்பாய்ச் சுழன்றெரியத் தொடங்கி விட்டது. முத்துக்குமார் மூட்டிய தீ தமிழ்ப் பகையை முற்றாக

அழித்தெரிக்காமல் அணையப் போவதில்லை.

ஆனாலும் ஒன்றை நாம் மறந்து விடக் கூடாது. வெற்றுணர்ச்சிக்கு ஆட்பட்டு வீணாகி விடக் கூடாது. செல்ல வேண்டிய திசைவழியிலும், சென்றடைய வேண்டிய குறியிலக்கிலும் தீர்மானிக்க வேண்டிய முடிவுகளிலும் தெளிந்த தெளிவும், ஊசலாட்டமில்லாத உறுதியும் வேண்டும். முத்துக்குமாரே நமக்கு வழிகாட்டுகிறார்: **“கடந்த முறை நடந்தது போல், உங்கள் போராட்டத்தின் பலன்களைச் சுயநலமிகள் திருடிக் கொள்ள விட்டு விடாதீர்கள்”** என எச்சரிக்கிறார். அவரின் மரண சாசனம் நமக்குக் கைகாட்டி; கலங்கரை விளக்கம்.

முத்துக்குமார் இந்திய “வல்லாதிக்க அரசியலை” யும் தமிழ் நாட்டின் “கங்காணி அரசியலை”யும் தெளிவாகப் படம்பிடிக்கிறார். “இந்திய ஏகாதிபத்தியம்” என்ற சொல்லாடல் அவரின் சரியான அரசியலைக் காட்டுகிறது. இந்திய வல்லாதிக்கம் அண்டை நாடுகளை அரட்டி மிரட்டும்; மக்களைச் சுரண்டிக் கொழுக்கும். இந்தியத் துணைக் கண்டத் தேசிய இன மக்களைத் தன் காலடியில் நசுக்கிக் கசக்கி இரத்தம் குடிக்கும். அது கையெட்டும் தொலைவில் ஒரு தேசிய இனம், விடுதலை பெற்று விடச் சம்மதிக்குமா? அது தன் சுரண்டலைப் பாதிக்கும் என்பதை உணராமல் இருக்குமா? அதனால்தான் ஈழ விடுதலைப் போராட்டத்தை எவ்வழியிலும் முத்துக்குமார் குறிப்பிடுவதைப் போல், “திருட்டுத்தனமாக”வேனும் அழித்து ஒழித்து விடத் துடிக்கிறது.

அதிகாரவர்க்கம் பற்றியும் ஆழமான புரிதலை முத்துக்குமார் கொண்டுள்ளார். **“பயங்கரவாதமென்பது, இந்தியா - பாகிஸ்தான் இருதரப்பு அதிகார வர்க்கங்களும் தங்கள் மக்களைச் சுரண்டப் பரஸ்பரப் புரிதலுடன் உருவாக்கிக் கொண்ட ஒன்று”** என்கிறார். பாகிஸ்தானும் இந்தியாவும் சேர்ந்து உலகளவில் வல்லாதிக்க ஆற்றல்கள் தங்கள் நலன்களைப் பேணிப் பாதுகாத்துக் கொள்ளப் பயன்படும் சூத்திரமாய் உள்ளது. வல்லாதிக்கம் தொடர்ந்து நிலைபெற எப்பொழுதுமே அதற்கு ஓர் எதிரி தேவை; எதிரி இல்லையென்றாலும் அது எதிரியை உருவாக்கிக் கொள்ளும். 9/11 நிகழ்வுக்குப் பிறகு அமெரிக்க வல்லாதிக்கம் இராக், ஆப்கானிஸ்தான் பயங்கரவாதங்களைத் தோற்றுவித்தது. வெனிசுலா, ஈரான், வடகொரியா என அப்பட்டியலை நீட்டிக்கத் திட்டமிட்டுக் கொண்டிருக்கிறது. இந்திய வல்லாதிக்கத்திற்கு பாகிஸ்தான் பயங்கரவாதம், காசுமீர் பயங்கரவாதம், அஸ்ஸாம் பயங்கரவாதம், வடகிழக்கு மாநிலப் பயங்கரவாதம், மாவோயிசப் பயங்கரவாதம் எனப் பல பயங்கரவாதங்கள் தேவைப்படுகின்றன. இப்பட்டியலில் விடுதலைப் புலிப் பயங்கரவாதம் இப்பொழுது முன்னிலை பெறுகிறது. கூடிய விரைவில் தமிழ்த் தேசிய பயங்கரவாதமும் இதில் இடம்பெறலாம். **“நாளை**

**நம் மீதே பாய மாட்டார்கள் என்பதற்கு என்ன நிச்சயம்?”** என்ற முத்துக்குமாரின் கேள்வி இதையே நம்மிடம் எச்சரிக்கையாக முன்வைக்கிறது. இந்திய வல்லாதிக்கம் பற்றிய புரிதலுக்கு இந்தியக் கட்டமைப்பு பற்றிய தெளிவு வேண்டும். முத்துக்குமாரிடம் இந்தத் தெளிவும் புரிதலும் இருக்கின்றன. இந்தியா ஒரு நாடன்று;ஒரு துணைக் கண்டம். அங்கு பல்வேறு தேசிய இன மக்கள் வாழ்கிறார்கள். அவர்களின் நாடுகள் “மாநிலங்களாக” இந்தியச் சிறைக்குள் அடைபட்டுக் கொண்டிருக்கின்றன. முத்துக்குமாரிடம் பிழையற்ற இந்த வரலாற்றறிவு இருந்ததனால்தான், **“அரசுகளில் அங்கம் வகிக்கக் கூடிய உங்கள் தேசிய இனங்கள்”** என்று எழுத முடிந்துள்ளது. தனித்தனித் தேசிய அரசுகளைக் கொண்டிருக்க வேண்டிய தேசிய இனங்கள் என்பதைத் தவிர இதற்கு வேறென்ன பொருள்? “ஈழத்திலிருக்கும் எங்கள் சகோதரர்கள் இந்தியர் என்னும் நம் பெயரைப் பயன்படுத்தித்தான் நம் அரசால் கொலை செய்யப்படுகிறார்கள்” என்னும் தொடரில் உள்ள “இந்தியர்” “நம் அரசால்” ஆகிய சொற்கள் நாம் இந்தியர் இல்லை, இது நம் அரசன்று என்று சொல்லாமல் சொல்கின்றன. இந்தியாவிலுள்ள அனைத்துத் தேசிய இனங்களுக்கிடையேயும் இத்தகைய புரிதல் இருக்க வேண்டும் என முத்துக்குமார் விழைகிறார். இந்த புரிதல்தான் “எதிர்காலத்தில் ஒரு நவநிர்மான் சேனாவோ, ஸ்ரீராம் சேனாவோ தமிழ்நாட்டில் உருவாகவிருக்கும் ஆபத்தைத் தவிர்க்கும்” என ஆணியடித்தாற்போல் சொல்கிறார். இங்கு அவர் தமிழ்நாட்டிற்கு எதிர்வரும் ஆபத்தைத் தனித்துச் சுட்டினாலும், இந்தியத் துணைக் கண்டத்தில் அடிமைப்பட்டுக் கிடக்கும் அனைத்துத் தேசிய இனங்களையுமே எச்சரிக்கிறார். இந்துத்துவாவின் அகண்ட பாரதக் கனவைத் தகர்க்க இதுவே வழி.

**“காகிதம் எதையும் சாதிக்காது மக்களே!” “தேர்தல்காலத் தமிழர் கலைஞர்” “தனது மந்திரிகளுக்கு அவசியப்பட்ட துறைகளுக்காகச் சண்டப் பிரசண்டம் செய்து சதிராடிய சூரப்பலி”** என்கிற முத்துக்குமாரின் கருத்துச் செறிவுமிக்கத் தொடர்கள் எத்தனை எத்தனை உண்மைகளைத் தொட்டுக் காட்டுகின்றன! இங்கே அவர் கருணாநிதியை மட்டுமா சாடுகிறார்? இல்லை, இல்லை. செயலலிதா தொடங்கி விசயகாந்த், சரத்குமார் முடிய உருப்படியாய் எந்த அதிகாரமும் இல்லாத முதல்வர் நாற்காலிக்காய் நாக்கைத் தொங்கப் போட்டலையும் எல்லா அரசியல் களவாணிகளையும் தோலுரிக்கிறார். பதவி பெற வேண்டும். பெற்ற பின் “டெல்லிக்குச் சலாம்” போட்டு, தமிழ்நாட்டில் இருக்கும் பணத்தையெல்லாம் தனக்கும் தன் குடும்பத்திற்கும் சுருட்டிக் கொள்ள வேண்டும்... இதுதானே தமிழ்நாட்டுத் தேர்தல் அரசியல்காரர்களின் கொள்கை, குறிக்கோள், இலட்சியம் எல்லாமே.

தமிழ்நாட்டில் இன்று போராட்ட அரசியல் பழங்கதையாகி விட்டது. போராட்ட அரசியலைப் புதைகுழிக்கு அனுப்பிய பெருமை திராவிடக் கட்சிகளுக்கு, குறிப்பாகத் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு, அதிலும் குறிப்பாகத் “தமிழினத் தலைவர்” டாக்டர் கலைஞருக்கே உண்டு. தன் கட்சியை மாநாடு மட்டுமே நடத்தும் கட்சியாகத் தீர்மானம் நிறைவேற்றி தில்லிக்கு மனுப்போடும் கட்சியாக, மக்களை ஏமாற்ற மாபெரும் பேரணிக் காட்சிகள் காட்டும் கட்சியாகச் சிதைத்துப் போராட்ட அரசியல் என்ற சொல்லாடலையே “கழக” அகராதியிலிருந்து நீக்கி விட்டார். மாற்றாக “வாரிசுப் போராட்ட அரசியல்” என்ற சொல்லைச் சேர்த்துக் கொண்டார். தன்னையும் தன் கட்சியையும் மாற்றிக் கொண்டதோடு நிற்காமல், முத்துக்குமார் அடங்காச் சினத்துடன் சுட்டிக் காட்டுவதைப் போல் **“தமிழின உணர்வுகளை மழுங்கடித்து, ஒட்டுமொத்தத் தமிழினத்தையும் மகஜர் கொடுக்கும் ஜாதியாக”** மாற்றி விட்டார். முத்துக்குமார் அறைகூவி அழைக்கிறார்: **“அந்த மரபை அடித்து உடையுங்கள்.”**

கூட்டங்கள், மாநாடுகள், தீர்மானங்கள், பேரணிகள் எல்லாமே வேண்டும்தான். மக்களிடையே கருத்துப் பரப்புரை செய்ய அவை பெருமளவில் உதவும். ஆனால், அவற்றோடு நின்று விடக் கூடாது. கருத்தால் எழுச்சி பெற்ற மக்களை ஒன்றுதிரட்டி நம் நோக்கத்திற்காய்ப் போராட வேண்டும். போராட்டம், போராட்டம், தொடர்ந்து போராட்டம், போராட்டம், மட்டுந்தான் நம் இறுதி இலக்கிடம் கொண்டுசேர்க்கும்; போராட உள்ளத்து உறுதி வேண்டும்; எல்லாவற்றிக்கும் மேலாக அர்ப்பணிப்பு உணர்வு வேண்டும். போராட்டத்தை வெற்றிக்கு இட்டுச் செல்லக் கட்டுக்கோப்பான அமைப்பு வேண்டும். போராட்ட அரசியல் தேவையை முத்துக்குமார் உணர்ந்திருந்ததால்தான், “தன் பிணத்தைக் கைப்பற்றி அதைப் புதைக்காமல் ஒரு துருப்புச் சீட்டாக வைத்துப் போராடும்” படி அவரால் அறைகூவல் விடுக்க முடிந்துள்ளது.

ஆனால், இங்கு தமிழ் மக்கள் தமிழர்களாய் ஒன்றுதிரளப் பெருந்தடையாக இருப்பது முதலில் சாதி, அடுத்தது மதம். பார்ப்பனியம் நம்மை ஒன்றன் மேல் ஒன்றான சாதி அடுக்குகளாகப் பிரித்து, எல்லா அடுக்குகளுக்கும் மேலடுக்காய்ப் பார்ப்பனரை உட்கார வைத்து நாம் சமமாய் ஒன்றுசேர்வதற்கான எல்லா வழிகளையும் அடைத்து விட்டுத் தொடர்ந்து கோலோச்சுகிறது. சாதிகளைக் கடந்து தமிழர்களை ஒன்றுதிரட்டத் திணறுகிறோம். சாதிப் பகைமையில் தமிழர்கள் வெந்து போவதைக் கண்டு நொந்து போகிறோம். சாதி ஒடுக்குமுறைக்கு எதிராக ஒவ்வொருவரும் அவரவர் வழியில் போராடி வருகிறோம். இதோ தன்னேரில்லாத் தனிப்பெரும் ஈகி முத்துக்குமார் வழிகாட்டுகிறார். “நமக்குள்ளிருக்கும் ஜாதி, மதம் போன்ற வேறுபாடுகளை எரித்துக்கொள்ள இதுதான் தருணம்”. என்ன தருணம் இது?

ஒட்டுமொத்தத் தமிழர் நலனுக்காய்ப் போராடும் தருணம். ஈழத்தமிழர் நலனுக்காய் மட்டுமின்றி இங்குள்ள தமிழர் நலன் நோக்கியும் போராடும் தருணம்.

ஈழத் தமிழனுக்காய், காவேரி, முல்லைப் பெரியாறு, பவானி, பாலாறு ஆற்று உரிமைகளுக்காய், மொழி உரிமைகளுக்காய் என இவ்வாறு தமிழர் பொது நலனுக்காய்ப் போராடுவதன் மூலமே சாதியைத் தகர்க்க முடியும்; தமிழனாய்த் தலைநிமிர முடியும். இவ்வாறு ஒன்றுதிரண்டு விடக் கூடாது என்பதற்காகத்தான் இங்கு சாதி உணர்வுகள் தூண்டித் தூபமிட்டு வளர்க்கப்படுகின்றன. முத்துக்குமார் இதைச் சரியாகவே புரிந்து கொண்டிருப்பதால்தான் "**மாணவர்களின் தமிழின உணர்வை மழுங்கடிக்கவே திட்டமிட்டு, இந்திய உளவுத்துறை ஜாதிய உணர்வைத் தூண்டி விட்டு, அம்பேத்கர் சட்டக் கல்லரி அனர்த்தத்திற்கு வழிவகுத்திருக்கலாம்**" என எழுதுகிறார்.

இந்தியத் துணைக்கண்டத்துச் "சகோதரத்" தேசிய இனங்களுக்கு வேண்டுகோள் விடுக்கும் முத்துக்குமார் அன்பிற்குரிய சர்வதேசச் சமூகத்தின் மனச்சாட்சியையும் நம்பிக்கைக்குரிய ஒபாமாவின் மனச்சாட்சியையும் நோக்கிக் கேள்வி தொடுக்கிறார். வெள்ளை இனத் திமிருக்குக் குத்துச் சண்டை மாவீரன் முகமதலி சொற்களாலேயே சாட்டையடி கொடுக்கிறார்: "**என் சருமத்திலிருக்கும் கொஞ்சம் வெண்மையும் கற்பழிப்பின் மூலமாக வந்திருக்கு**"மென்று.

ஈழத்தில் நடைபெறும் இனப்படுகொலைக்குக் காரணமாயிருக்கும் சர்வதேசச் சமூகத்தின் மௌனம் எப்பொழுது உடையும் எனக் கேள்வி தொடுத்து விட்டு அன்பின் திருவுருவாம் முத்துக்குமார் இப்படி எழுதுகிறார்:

**"நியாயத்தின்பால் பெருவிருப்புக் கொண்ட ஒரு மக்கள் சமூகம் பூமியிலிருந்து முற்றாகத் துடைத்தழிக்கப்பட்ட பிறகா? அபாரிஜின்கள், மாயா, இன்கா வரிசையில் நாங்களும் சேர்க்கப்படுவது உங்கள் நோக்கமென்றால், எங்கள் பழங்கதைகளில் ஒன்றின்படி, ஒவ்வொரு நாளும் ஏதேனும் ஒரு வீட்டிலிருந்து ஒருவர் வந்து உங்கள் முன்னால் தற்கொலை செய்து கொள்கிறோமே… எங்கள் சகோதரிகளையும் குழந்தைகளையும் விட்டுவிடச் சொல்லுங்கள். தாங்க முடியவில்லை."**

கல்லையும் கனிய வைக்கும் முத்துக்குமாரின் உருக்கமான இந்த வேண்டுகோள் சர்வதேசச் சமூகத்தின் மவுனத்தைக் கலைத்து உறுதியாய்ப் பேச வைக்கும்.

இவ்வாறு, முத்துக்குமார் உள்ளூர் அரசியல் தொடங்கிப் பன்னாட்டு அரசியல் முடிய ஆழ்ந்தகன்ற அரசியல் புரிதல்களோடு தம் கடிதத்தை எழுதியுள்ளார். சிங்களப்

பத்திரிக்கையாளர்களையும் சிங்களத் தம்பதியரையும் பாதுகாக்கும்படி அவர் வேண்டுவது அவரது மனிதநேய மாண்பை வெளிப்படுத்துகின்றது. கடிதத்தில் ஒரு சில இடங்களில் அவர் புரிதலில் குறைகள் இருக்கலாம். இராசீவ் கொலை பற்றி எழுதியிருப்பது, இந்திரா, எம்.ஜி.ஆர் ஆகியோரைத் தமிழீழத்தின் சிறு தெய்வங்களாக அவர் வர்ணித்திருப்பது, காங்கிரஸிலுள்ள சீர்காழி இரவிச்சந்திரன் போன்ற உண்மை இன உணர்வாளர்களை வென்றெடுக்கும் நோக்கத்தைக் கொண்டிருக்கலாம்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் குறித்தும் தமிழீழ விடுதலைப் புலிகள் பற்றியும் முத்துக்குமாரின் பார்வை தெளிவானது; சரியானது. தமிழீழ மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்டதின் விளைவாய்த் தோன்றியதே தமிழீழ விடுதலைப் போராட்டம். முத்துக்குமாரின் சொற்களில் கூறுவதென்றால், "**புலிகள் தமிழீழ இன அழிப்பிலிருந்து உருவாகி வந்தவர்களே தவிர, காரணகர்த்தாக்கள் அல்லர். (They are not the reason; just an outcome).**"

எனவே போரை நிறுத்து எனக் கோரிக்கை வைப்பதும், அதுவும் போரை நடத்துகின்ற இந்தியாவிடமே கோரிக்கை வைப்பதும் திசைதிருப்பும் முயற்சிகள். அதேபோலப் புலிகளை ஆயுதங்களைக் கைவிட வலியுறுத்துவதும் வஞ்சக வலைவிரிப்புகள். ஈழத் தமிழரின் உரிமைகள் முழுதாய் மீட்டெடுக்கப்படும் பொழுது, தாங்கள் விரும்புகின்ற ஆட்சியை அமைத்துக் கொள்ளும் அதிகாரத்தைப் பெறும் போது போர் முடிவுக்கு வரும்;அப்போது புலிகளின் ஆயுதங்களுக்கு வேலை இருக்காது.

ஆனால் முத்துக்குமாரே ஓரிடத்தில் ஆயுதங்களைக் கைவிடுவது பற்றிப் பேசுவார்: **"சிங்களர்கள் தாங்கள் நேர்மையாக நடந்து கொள்வோம் என்ற நம்பிக்கையை உண்டாக்குவதன் மூலமாக மட்டுமே போராளிகளை ஆயுதத்தைக் கீழே வைக்கச் செய்ய முடியும்"** என்று கூறிவிட்டு அடுத்த வரியிலே **"கடந்த கால அரசுகள் எவையும் அப்படிச் செயல்படவில்லை"** என்பார். டட்லி சேனநாயகா - செல்வா ஒப்பந்தம் தொடங்கிக் குப்பைக்குக் கூட உதவாத இந்திய - இலங்கை ஒப்பந்தம் முடிய ஒப்பந்தங்கள் அனைத்தும் கிழித்தெறியப்பட்டதே இலங்கை வரலாறு. சிங்களப் பேரினவாத அரசியலில் நேர்மை, நம்பிக்கை என்பனவற்றிற்கு இடமே கிடையாது. ஈழத் தமிழர்களும் அவர்களின் அரசியல் தலைமையான விடுதலைப் புலிகளும் இதை நன்கு அறிவர். தமிழக மக்களாகிய நாமும் "நம்பிக்கை" அரசியலில் கவனத்தோடும் விழிப்போடும் இருக்க வேண்டும்.

இல்லையெனில் கருணாநிதி மன்மோகன்சிங்கை நம்பச் சொல்லுவார். மன்மோகன்சிங் இராசபக்சேவை நம்பச் சொல்லி நம்மை நடுக்கடலில் கவிழ்த்து விடுவார்.

முத்துக்குமாரின் கடிதத்தில் ஒரு சிறு செய்திப் பிழையும் உள்ளது. ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூனின் தாயகம் சீனா எனக் குறிப்பிடுகிறார். அவரின் பெயரும் தோற்றமும் முத்துக்குமாரிடம் தவறான மனப்பதிவை ஏற்படுத்தியிருக்கலாம். அதன் காரணமாய் பான் கீ மூன் தென்கொரியாவைச் சேர்ந்தவர் என்பது மறந்து போயிருக்கலாம். ஐ.நா. பொதுச் செயலாளருக்கு இந்தியக் குடியரசுத் தலைவர், ஆளுநர்களுக்கு உள்ள அதிகாரங்கள் கூடக் கிடையாது. அவரால் சீனாவுக்கு ஆதரவாய் இயங்க முடியாது. ஈழப் போரையோ அல்லது உலகில் நடைபெறும் எந்தப் போரையுமோ அவரால் தடுத்து நிறுத்த முடியாது. அமெரிக்காவின் தாளங்களுக்கேற்ப ஆட மட்டுமே முடியும்.

முத்துக்குமாரின் கடிதத்தைத் தமிழக இளைஞர்களும் மாணவர்களும் சரியான புரிதலுடன் உள்வாங்கிக் கொள்ள வேண்டும். அவரின் இறுதி விருப்பத்தை அவர்கள்தாம் நிறைவேற்ற வேண்டும். தமிழ்நாட்டில் இன்று "சரியான தலைமை" இல்லை என்ற அவரின் கவலை போக்கப்பட வேண்டும். அவரே குறிப்பிடுவதைப் போல ஈழத்திற்கு வாய்க்கப் பெற்ற **"உன்னதத் தலைவன் நமக்கில்லையே என்ற ஏக்கம் வேண்டாம். இது போன்ற கையறு காலங்கள்தான் அப்படிப்பட்ட தலைவர்களை உருவாக்கும்."** இன்று இளைய தலைமுறையிடம் ஏற்பட்டுள்ள எழுச்சி வீணாகி விடக் கூடாது. 1965இல் ஏற்பட்ட தவறு மீண்டும் நேர்ந்து விடக் கூடாது. சுயநலமிகள் கையில் மீண்டும் தலைமை சென்று விடக் கூடாது.

இளைஞர்கள் விழிப்பாய் இருக்க வேண்டும். உணர்ச்சியின் உந்துதலில் இழுபட்டுத் திசைமாறி விடாமல் கவனங்கொள்ள வேண்டும். உணர்ச்சி வேண்டும். ஆனால் அது அறிவு வழிப்பட்டதாய் அமைய வேண்டும்.

அதற்குக் கொள்கையில் தெளிவு வேண்டும். **கொள்கைத் தெளிவு** பெற **அறிவியல் பார்வை** வேண்டும். வள்ளுவர் சொன்ன மெய்ப்பொருள் காணும் தேடல் கைவரப் பெற வேண்டும். அடுத்து அக்கொள்கையை வென்றெடுக்கும் **உழைப்பார்வம்** வேண்டும். அதற்காகத் தன்னை ஈந்து கொள்ளும் **ஈக உணர்வு** (அர்பணிப்பு) வேண்டும். குறிக்கோளைச் சென்றடைய ஒழுங்கமைவுடன் கூடிய **அமைப்பாய்** ஒன்றுதிரள வேண்டும்.முத்துக்குமார் விரும்பும் "சரியான தலைமை" உருவாக இதுவே வழி.

***சமூகநீதித் தமிழ்த்தேசம்***

2009 மாசி (பிப்ரவரி)

# கியூபாவின் புரட்சிப் பெண்கள் (11):

சமந்தா

## மார்த்தா ரோஹாஸ்

புரட்சிக்கு முன்:

மார்த்தா ரோஹாஸ் 1931ஆம் ஆண்டு மே 17ல் கியூபாவில் உள்ள சாண்டியாகோவில் பிறந்தார். அவர் தந்தை தையல் வேலை செய்து வந்தார். தாயார் ஓர் ஆடை வடிவமைப்பாளர். மார்த்தாவின் பாட்டி ஆப்பிரிக்க இனத்தைச் சேர்ந்தவர், தாத்தா மானுவல் ரோட்ரிக்ஸ் ஸ்பானிய இனத்தைச் சேர்ந்தவர்.



மார்த்தா சிறுமியாக இருக்கும் போது மருத்துவராக வேண்டும் என்ற விருப்பத்தால் பொம்மைகளுக்கும், பல்லிகளுக்கும் அறுவை சிகிச்சை செய்து பார்த்துள்ளார்.

மார்த்தா நூலகத்திலிருந்து உடற்கூறியல் குறித்த நூல்களை முடிந்த அளவிற்கு எடுத்து வந்து வீட்டில் அமர்ந்து அனைத்தையும் மனப்பாடம் செய்ததாகவும், உடலின் மர்மத்தைப் புரிந்து கொண்டு அதன் ரகசியங்களை வெளிக்கொணர விரும்பியதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் பிறகு ஹவானா பல்கலைக் கழகத்தில் மாணவராக இருக்கும் போது மருத்துவர் ஆவதற்கான இயல்பான விருப்பமும், அந்த அறிவியல் படிப்பை முடிப்பதற்கான ஆர்வமும் தனக்கு இல்லாததை அறிந்து கொண்டார். எழுதுவதை மிகவும் நேசித்ததாலும் புத்தகங்கள், கதைகள் அவற்றின் மர்மங்களை வெளிக்கொணரும் ஆர்வம் மேலிட்டதாலும் மருத்துவர் ஆவதற்கு பதில் தான் ஒரு பத்திரிகையாளர் ஆனதாக மார்த்தா கூறியுள்ளார்.

மார்த்தா தன் வாசிப்பை பால்சாக்கிடமிருந்து தொடங்கினார், பிறகு ஹென்றி பார்பவுஸ்,





கர்சியோ மலபார்டே ஆகியோரின் படைப்புகளையும் டான் குயிக்சோட்டையும் வாசித்துள்ளார். அவர் இப்போதும் ஓரிரு வருடங்களுக்கு ஒரு முறை டான் குயிக்சோட்டை வாசித்து வருவதாக கூறுகிறார்.

மார்த்தா ஹவானா பல்கலைக் கழகத்தில் இதழியல் துறையில் படித்துப் பட்டம் பெற்றார். அவர் ஒரு மாணவராகத் தொலைக்காட்சி செய்தி ஒளிபரப்பில் (சேனல் 4) உள்ளுறைப் பயிற்சி பெற்றிருந்தார்.

புரட்சியில்:

ஒரு கல்லூரிப் பட்டதாரியாக, தொலைக்காட்சி நிருபராக வேண்டும் என்ற இலக்குடன், மார்த்தா விடுமுறைகளைக் கழிக்க தனது சொந்த நகரமான சாண்டியாகோவுக்குச் சென்றார்.



போஹேமியா பத்திரிகையின் புகைப்படக் கலைஞர் பஞ்சிட்டோ கேனோ உள்ளூரில் நடைபெறும் திருவிழா நிகழ்வுகளைச் செய்தியாக்கும் வேலையைச் செய்யுமாறும் அதற்கு 50 பெசோ அளிப்பதாகவும் மார்த்தாவிடம் கேட்டுள்ளார். அதற்கு சம்மதித்தவராய் கேனோவுடன் திருவிழாவுக்குச் சென்றார் மார்த்தா. அவர்கள் திருவிழாக் கொண்டாட்டத்தின் நடுவில் இருந்த போது, 1953 மார்ச் 26 அதிகாலையில் திடீரென வெடிச் சத்தம் கேட்டது. இது என்ன சீனப் பட்டாசா என மார்த்தா கேட்டதற்கு, இல்லை. துப்பாக்கிச் சூடு என்றார் கேனோ. இருவரும் சம்பவ இடத்தை நோக்கி விரைந்தனர். ஃபிடல் காஸ்ட்ரோ தலைமையில் தோழர்கள் மன்கடா ஆயுதப்படைத் தளத்திற்கு எதிரான தாக்குதலில் ஈடுபடுவதைக் கண்டனர். கியூப வரலாற்றின் திருப்புமுனையாக அமைந்த மன்கடா நிகழ்வின் நேரடி சாட்சிகளாக இருந்த மார்த்தாவும், கேனோவும் எந்த ஆதரவும் பாதுகாப்பும் இல்லாமல் தங்களால் இயன்ற இடத்தில் ஒளிந்து கொண்டே தாக்குதலைப் பற்றிய விவரங்களைச் சேகரித்தனர். அந்த இடம் இறந்த உடல்களால் நிறைந்திருந்தது. அவர்கள் இறந்த மற்றும் காயமடைந்த வீரர்களைப் படம்பிடித்தனர். திருவிழாவைச் செய்தியாக்க சென்ற மார்த்தா இப்படித்தான் சில மணி நேரத்தில் போர் நிருபராக மாறினார். மார்த்தா மன்கடா நிகழ்வுடன் தொடர்புடைய பிற இடங்களான போராளிகளின் பயிற்சி முகாமாக இருந்த சிபோனி பண்ணைக்கும், மருத்துவமனைக்கும்



சென்று செய்திகளைச் சேகரித்து அறிக்கையாக்கினார். போராளிகள் மீது கொடுங்கோன்மையாளர்கள் செய்த அடக்குமுறையின் புகைப்பட ஆதாரங்களையும் அறிக்கையையும், போஹேமியா பத்திரிகையின் ஆசிரியர் குழுவுக்கு கொண்டு சேர்ப்பதற்காக மார்த்தா விமானத்தில் ஹவானாவுக்குச் சென்றார். மன்கடா நிகழ்வுகள் குறித்த எந்தவொரு அறிக்கையையும் வெளியிடக் கூடாது எனத் தடைசெய்து அரசாணை பிறப்பிக்கப்பட்டிருந்ததால் அது தணிக்கை செய்யப்பட்டது. போஹேமியா இதழ் மார்த்தாவுக்கு ஒரு வேலையை வழங்கியது.

மார்த்தா மன்கடா தாக்குதலைப் பின் தொடர்ந்த நிகழ்வுகளை விட்ட இடத்திலிருந்து தொடர்வதற்காக உடனே சாண்டியாகோவுக்குத் திரும்பிச் சென்றார். அது குறித்த எந்த விவரத்தையும் தவற விடக் கூடாது என்பதற்காக செப்டம்பரிலிருந்து செய்வதாக இருந்த சேனல் 2 தொலைக்காட்சி நிருபர் வேலையை நிராகரித்தார்.

“ரோஹாஸ், உங்கள் மகள் அங்கே நேரத்தை வீணடிக்கிறாள்; அது எதுவும் வெளியிடப்படப் போவதில்லை. தொலைக்காட்சியில் பணிபுரியும் வாய்ப்பை அவள் இழக்கப் போகிறாள்?” என்று ஒரு நிருபர் மார்த்தாவின் தந்தையை எச்சரித்தார். மார்த்தாவின் நல்வாழ்வு பாதிக்கப்படுமோ எனத் தந்தை ரோஹாஸ் அச்சமடைந்தார். செப்டம்பர், அக்டோபர் என நாட்கள் கடந்தன, மார்த்தாவின் அறிக்கைகளும் நீண்டன.

ஃபிடல் காஸ்ட்ரோ உள்ளிட்ட பலர் ஃபாத்திஸ்டா அரசால் நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர், மார்த்தா நீதிமன்றம் சென்று ஃபிடல் காஸ்ட்ரோவுக்கு எதிரான வழக்கு விசாரணையை (வழக்கு எண் 37) நேரில் கண்டு குறிப்புகள் எடுத்தார். வழக்கு எண் 37இன் அமர்வுகளுக்குச் செல்வதை மார்த்தா ஒரு நாளும் நிறுத்தவில்லை.

“நீங்கள் குறிப்புகள் எடுப்பதை நான் கண்டேன். அவர்கள் அதை வெளியிடப் போவதில்லை” -- ஒரு நாள் விசாரணையின் போது ஃபிடல் மார்த்தாவிடம் பேசிய முதல் வார்த்தைகள் இவை. "அது ஒரு விஷயமே இல்லை, நான் அதைப் பாதுகாப்பாக வைத்திருப்பேன்," என மார்த்தா அவருக்கு உறுதியளித்தார். காஸ்ட்ரோவின் ”வரலாறு என்னை விடுதலை செய்யும்” என்ற புகழ்பெற்ற நான்கு மணி நேர நீண்ட உரையை நேரில் கண்டு குறிப்புகளை எடுத்துக் கொண்டார். மன்கடா தாக்குதல், வழக்கு விசாரணை தொடர்பான அனைத்து உண்மைத் தகவல்களையும் குறிப்பெடுத்து அறிக்கைகளாகத் தொகுத்துத் தட்டச்சு செய்து பாதுகாப்பாக வைத்திருந்தார்.

புரட்சியின் வெற்றிக்கு பின்னர், 1960இல், மார்த்தாவின் அறிக்கைகள் ’மன்கடா: ஒரு அசாதாரண விசாரணை’ என்ற நூலாக்கப்பட்டு முதல் பதிப்பு வெளியிடப்பட்டது. “எனது அறிக்கை வெளியிடப்பட வேண்டும் என்று மட்டுமே நான் விரும்பினேன். இது ஒரு புத்தகமாக மாறும் என்று நான் ஒருபோதும் நினைக்கவில்லை. முதலில் ஒரு இதழியளாராக இதைச் செய்ய வேண்டும் என்ற உந்துதலிலே ஆரம்பித்தேன். பின்னர் எழுதும் போது, மக்கள் மீதான பரிவு மேலிட்டதால், இறுதியாக அரசியல் வழியில் ஈடுபட்டேன்” என மார்த்தா குறிப்பிட்டுள்ளார்.

விசாரணையின் போது ஃபிடல் குற்றம் சாட்டப்பட்டவர் என்ற நிலையிலிருந்து குற்றம்

சாட்டுபவராக ஃபாத்திஸ்டாவின் கொடுங்கோலாட்சியைக் கூண்டிலேற்றியதையே தனக்கு மிகவும் நெகிழ்வூட்டிய தருணமாக மார்த்தா குறிப்பிடுகிறார்.

"நீங்கள்தான் இந்தத் தாக்குதலுக்கு சூத்திரதாரியா?" என ஃபிடலிடம் கேட்கப்பட்ட போது: "மன்கடாவின் அறிவுசார் தலைவர் என்று குற்றம் சாட்டப்படுவதைப் பற்றி இங்கு யாரும் கவலைப்பட வேண்டியதில்லை, ஏனென்றால் மன்கடாவின் ஒரே அறிவுசார் தலைவர் ஹொசே மார்த்தி மட்டுமே என்று ஃபிடல் பதிலளித்ததே விசாரணையில் தன்னை மிகவும் கவர்ந்த விசயம் என மார்த்தா குறிப்பிட்டுள்ளார்"

1953இல் ஃபிடல் மீது விசாரணை தொடங்குவதற்கு முன்பு, மன்கடா தாக்குதல் ஒரு தோல்வி என்பதே புரட்சி ஆதராவாளர்கள் உட்பட அனைவரின் பொதுவான உணர்வாக இருந்தது. ஆனால் ஒரு பின்னடைவை ஃபிடல் வெற்றியாக மாற்றினார். பல நேரங்களில் ஃபிடல் அதைச் செய்துள்ளார், பின்னடைவை வெற்றியாக மாற்றும் ஃபிடலின் ஆற்றலே ஒரு தலைவராக அவரது திறன்களில் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகச் சுட்டிக்காட்டுகிறார் மார்த்தா.

**<u>புரட்சிக்குப் பின்:</u>**

கியூபப் புரட்சியின் வெற்றியின் போது அவர் ரெவிஸ்டா போஹேமியா பத்திரிக்கையில் பணியாற்றி வந்தார், அதன் பிறகு 'புரட்சி' என்ற செய்தித் தாளுக்கான பத்திரிகையாளர்கள் குழுவில் சேர்ந்தார். வெர்டே ஒலிவோ, டிராபஜோ ஆகிய பத்திரிகைகளிலும் பணியாற்றினார். கிரன்மா (1965) செய்தித் தாளின் நிறுவனர்களில் ஒருவராக, அதில் நெடுங்காலம் பணியாற்றி வந்தார். கிரான்மா பத்திரிகையின் தகவல், செய்தி அறை மற்றும் கலாசாரப் பக்கத்தின் தலைவராகச் செயல்பட்டார். சமூகத் தொடர்புக்கான இணைப் பேராசிரியராகவும் செயல்பட்டார்.

பல தேசிய மற்றும் சர்வதேச நிகழ்வுகளைச் செய்தியாக்கி அறிக்கைகளாகவும் கட்டுரைகளாகவும் பதிவு செய்துள்ளார். ஃபிடல் காஸ்ட்ரோ கியூபாவிலும், லத்தீன் அமெரிக்க நாடுகளிலும் மேற்கொண்ட பயண நிகழ்வுகள் குறித்த முக்கியமான விசயங்களைச் செய்தியாக்கிய பெருமை மார்த்தாவை சேரும். அவர் தெற்கு வியட்நாம் மற்றும் கம்போடியாவில் முதல் கியூப மற்றும் லத்தீன் அமெரிக்கப் போர் நிருபராக (1965-1975) பணியாற்றியுள்ளார்.

அமெரிக்கப் போரின் போது வீரமிக்க வியட்நாமை உலக மக்களுக்கு அறியச் செய்த மூன்று சர்வதேசப் பத்திரிக்கையாளர்களில் மார்த்தாவும் ஒருவர். தனது அறிக்கைகள் மூலம், ஹோ சி-மினையும், வியட்நாமிய மக்களையும் கியூபாவிற்கும், பிற லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கும் பரிச்சயப்படுத்தினார். ஸ்பானிஷ், ஆங்கிலம் மற்றும் பிரெஞ்சு மொழிகளில் வெளியிடப்பட்ட கிரன்மாவுக்கான மார்த்தாவின் அறிக்கைகள் உலகம் முழுவதும் பிரபலம் அடைந்தன.

1969ஆம் ஆண்டு வியட்நாம் அதிபர் ஹோ சி-மின் மரணிப்பதற்கு முன் கடைசியாக அவரைப் பேட்டி கண்ட சர்வதேசப் பத்திரிகையாளர்களுள் மார்த்தாவும் ஒருவர்.

1969 ஜூலையில் மார்த்தா அதிபர் ஹோ சி-மின்னைப் பேட்டி கண்டுள்ளார்.

**ஹோ மாமாவும் கொடியும்:**

மார்த்தா செல்லும் போது ஹனோயின் அந்தச் சிறிய வீட்டில், எல்லாம் அமைதியாக இருந்தது. ஹோ சிமின் "காலை வணக்கம் தோழர் மார்த்தா" என ஸ்பானிய மொழியில் வரவேற்றார். மார்த்தாவின் முதல் பயணத்தின் போது நேரில் சென்று வரவேற்க இயலாததற்கு மன்னிப்புக் கேட்டுள்ளார். ஹோ சி-மின் வெண்ணிற சட்டை, கால் சராயும், காலணிகள் இல்லாமல் வெள்ளைப் பருத்திக் காலுறைகளும் அணிந்திருந்தார். "என்னை அதிபர் என்று அழைக்க வேண்டாம், ஹோ மாமா என்று அழையுங்கள்" என்று மார்த்தாவிடம் கேட்டுக் கொண்டார்.
"நேர்காணல் செய்ய விரும்பிய தன்னை அதிபர் ஹோ சி-மின்னே பேட்டி எடுத்து ஆச்சரியப்படுத்தியதாக மார்த்தா நினைவு கூர்கிறார். டே நின் மாகாணத்தில் மார்த்தாவின் அனுபவங்களைப் பற்றியும் ஃபிடலை பற்றியும் ஹோ கேட்டுள்ளார். மார்த்தா 17வது இணைக்கு (வடக்கு மற்றும் தெற்கு வியட்நாமுக்கு இடையிலான இராணுவ எல்லைக் கோடு) சென்று வந்ததால் அவர் ஒவ்வொரு விவரத்தையும் விசாரித்தார். குண்டுகளால் பிளக்கப்பட்ட பள்ளங்களில் மீன் வளர்க்கப்பட்டு ஓரங்களில் பூக்கள் வளர்ந்து, சமீபத்தில் இரசாயனத் தாக்குதல்களுக்கு இலக்கான வின் லின் பகுதியைப் பற்றி மார்த்தாவிடம் கேட்டுள்ளார். பென் ஹை ஆற்றின் கரையில் அமைந்துள்ள வியட்நாம் ஜனநாயகக் குடியரசின் 60 மீட்டர் நீளமுள்ள கொடி எவ்வாறு பறக்கிறது என்றும் ஹோ சி-மின் கேட்டுள்ளார்.

தெற்கே வெயிலடித்தாலும், மழை பெய்தாலும் வியட்நாம் ஜனநாயகக் குடியரசின் கொடி எப்போதும் புதிதாகவே காணப்படுகிறது என்று மார்த்தா பதிலளித்துள்ளார். "ஏனென்றால் வியட்நாமில் உள்ள அனைத்து வர்க்க மக்களுக்காகவும் போராடுவதன் நோக்கம் கொடியை அதன் சரியான இடத்தில் பாதுகாப்பதே. இது வியட்நாமின் சின்னம். நாம் அமெரிக்காவை வெல்வோம். தென் மக்களின் அனைத்து துன்பதுயரங்களும் எனது துன்பதுயரமே" என்று ஹோ கூறியுள்ளார்.

மார்த்தா விடியற்காலையில் 17 இணைக்கு வந்த போது, அங்கிருந்து 7 கிலோமீட்டர் தொலைவில் வியட்நாம் கொடி அசைவதைக் கண்டார். பின்னர் அங்கிருந்த ஒருவர் அந்தப் பகுதியிலிருந்து காலி செய்ய வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்ட போதும், கொடிக்கு அருகிலே இருப்பதற்காக ஒரு தங்குமிடம் தோண்டி, தையல் இயந்திரத்துடன் இருந்து வருவதாகவும், எதிரியின் தீயால் கொடி எத்தனை முறை அழிக்கப்பட்டாலும் அத்தனை முறை கொடியை மாற்றுவதற்குப் போதுமான துணி வைத்திருந்தார் என்பதையும் மார்த்தா நினைவு கூர்ந்துள்ளார்.

ஹோ பற்றி நான் நிறைய கேள்விப்பட்டிருக்கிறேன். ஹோ சி-மின் மகத்தான கலாசாரப் பண்புகள் கொண்டவர் என்பதை நான் அறிவேன். அவரது எழுத்துகளையும், கவிதைகளையும் படித்துள்ளேன். ஆனால் அவர் இவ்வளவு எளிமையாகவும் நேசத்துடனும் இருப்பார் என்று எதிர்பார்க்கவில்லை. அந்த நேர்காணலே அவரது ஆளுமையைத் தெரிந்து கொள்ளப் போதுமானதாக இருந்தது. அவருடைய கருத்துகள் மட்டுமல்லாமல், அவற்றை அவர் வெளிப்படுத்திய எளிய முறையும் என் கவனத்தை ஈர்த்தது என நினைவு கூர்ந்துள்ளார்.
ஹோ மாமா கையெழுத்திட்டுத் தனக்கு அளித்த புகைப்படத்தை மார்த்தா பாதுகாப்பாக வைத்திருக்கிறார்.

<u>மார்த்தாவின் படைப்புகள்:</u>

<u>அரசியல் நூல்கள்:</u>

வியட்நாமிலிருந்து வரும் காட்சிகள், தெற்கு வியட்நாம், கியூபா 1992: புரட்சியின் கடினமான ஆண்டு, சே பற்றிய சாட்சியங்கள், மன்கடாவில் நூற்றாண்டு தலைமுறை (1964), தானியா, மறக்க முடியாத கெரில்லா (1971- இணை ஆசிரியர்), வாழ வேண்டியவர் (ஆபெல் சாண்டமரியா

பற்றிய சாட்சியங்கள்) வியட்நாமில் போருக்கு அர்ப்பணிக்கப்பட்டவை; போஹேமியன் பக்கங்கள், உட்படப் பல நூல்களை வெளியிட்டுள்ளார்.

வரலாற்று புதினங்கள்:

கியூப தேசத்தின் தோற்றம் குறித்தும், 18ஆம் நூற்றாண்டிலிருந்து கியூபாவின் காலனித்துவ வரலாற்றில் கலப்பு இன மக்களின் சமூக வாழ்க்கையையும், கலாசாரங்களின் வரலாறையும், போராட்டங்களையும், இன, வர்க்க சிக்கல்களையும் வெளிச்சம் போட்டுக் காட்டியதற்காக அவரது வரலாற்று புதினங்கள் லத்தீன் அமெரிக்கா முழுவதும் பாராட்டப்பட்டுள்ளன. கியூப வரலாற்றில் புலம்பெயர்ந்த ஆப்பிரிக்கப் பெண்களின் பங்களிப்பைத் தம் படைப்புகளின் வாயிலாக அறியச் செய்துள்ளார்.

ஸ்பென்சர் அரசரின் ஊஞ்சல், வெள்ளை ஆவணங்கள், சாண்டா லுஜூரியா, ஜுவானா லா லோகாவின் மணிகள், குடும்ப மருத்துவர், மன்கடா சோதனை, பச்சை வகுப்பறை, இறந்தவர்களின் குகை, எல் ஹரோன் டி ஒவியெடோ, இங்க்லெசா போர் அன் ஆகோ என பல்வேறு வரலாற்றுப் புதினங்களை படைத்துள்ளார். சீனாவிலிருந்து கியூபா, பெருவிற்குக் கடத்தப்பட்ட சீனர்களை பற்றி மஞ்சள் பொதி என்ற புதினத்தை எழுதியுள்ளார்.

மார்த்தா ரோஜாஸின் கதைகள்:

உப்புச் சிலைகள் (Estatuas de Sal), இன்றைய கியூபாவின் கதைசொல்லிகள் (Cuentistas cubanas de hoy), ஆஃப்ரோ கியூபா (Afrocuba), ஆப்பிரிக்காவின் புதல்வியர் (Daughters of Africa) ஆகிய நூல் தொகுப்புகளில் இந்தக் கதைகள் வெளியிடப்பட்டன.

ஆசை அறைகள் (1996), பெனிலோப்பின் புன்னகையும் அவரது விடைபெறும் வாடிக்கையும் (1993) என இரண்டு கவிதைத் தொகுப்புகளை மார்த்தா வெளியிட்டுள்ளார்.

விருதுகள்:

மார்த்தாவின் வாழ்க்கைப் பணிகளை அங்கீகரிக்கும் விதமாக அவரைச் சிரப்பித்து காசா டி லாஸ் அமெரிக்காஸ் விருது (1978) வழங்கப்பட்டது. ஹொாசே மார்த்தி தேசியப் பத்திரிகை விருது (1997), தேசியப் பத்திரிகையாளர் விருது, மெக்ஸிமோ கோமேஸின் மச்சீட்டி விருது,

அன்டோனியோ பெர்னாண்டஸ் டி காஸ்ட்ரோ கலாசார விருது (2004), குடியரசின் தொழிலாளர் தேசிய நாயகர் விருது (1999), இளைஞர் தலைவர் விருது (2017), மிரர் டோர்ஸ் விருது (2019). அலெஜோ கார்பென்டியர் புதினப் பரிசு (2006) என பல்வேறு விருதுகளால் மார்த்தா சிறப்பிக்கப்பட்டுள்ளார்.

அவருக்கு அலெஜோ கார்பென்டியர் புதினப் பரிசு வழங்கிய நடுவர் மன்றத்தின் கூற்றுப்படி, சந்தேகத்திற்கு இடமின்றி கியூபாவின் வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த படைப்பு (இங்க்லெசா போர் அன் ஆகோ) அதன் தீவிரமான புலனாய்வுப் பணிக்காகவும், அறியாத காலப் பகுதிகளை வெளிச்சம் போடத் துணிந்ததற்காக மட்டுமல்லாமல் அதன் உண்மையான நடைக்காகவும், விறுவிறுப்பான, தத்ரூபமான சம்பவங்களுக்காகவும் பாராட்டப்படும் என்று போற்றப்பட்டது.

அன்கன்சாஸ் பல்கலைக்கழகப் பேராசிரியரும் இலக்கிய ஆராய்ச்சியாளருமான எல்பா பர்மிங்காம்-போகோர்னி கிங் ஸ்பென்சர் அரசரின் ஊஞ்சல் புதினத்தைப் பாராட்டி ஒரு கட்டுரை எழுதியுள்ளார்.

மார்த்தா ரோஹாஸைப் பொறுத்த வரை, அவரது நாவல்கள் கியூபக் காலனித்துவச் சமுதாயத்தை வெளிச்சத்துக்குக் கொண்டுவருகின்றன, இதில் வர்க்கப் பாகுபாடு, பணக்காரர்களின், பிரபுக்களின் சலுகைகள் பாசாங்குகள் உண்மைத் தன்மையுடன் புனையப்பட்டிருப்பதாகவும் குறிப்பிடுகிறார்.

மிகுவல் டி செர்வாண்டஸ் விருதை வென்ற அலெஜோ கார்பென்டியர் எழுதிய ஒரு புத்தகத்தின் முன்னுரையில், மார்த்தாவை" பத்திரிகை தொழிலுக்கான ஆழ்ந்த அறிவுடன், கூர்மதி கண்களுடன், நேரடியான துல்லியமான பாணியில், பல விஷயங்களை சில வார்த்தைகளில் சொல்லும் சுறுசுறுப்பான திறமையான எழுத்தாளர், ". என வர்ணிக்கிறார்.
லிசாண்ட்ரோ ஓடெரோ "மார்த்தா ரோஹாஸ் ஒரு சிறந்த பத்திரிகையாளருக்கான அடிப்படை நற்பண்புகளைக் கொண்டிருக்கிறார் ... ஆனால் அதற்கும் மேலாக, ஒரு நல்ல கதைசொல்லியின் பண்புகளையும் அவர் பெற்றிருக்கிறார், அந்தக் கதையை அமைதியான பாய்வோடு அரவணைக்கும் தாளத்தோடு எப்படிச் சொல்வது என்று அவருக்குத் தெரியும்” என வர்ணித்துள்ளார்.

மிர்தா யீஸ்: ”மார்த்தா ரோஜாஸுக்கு உணர்வு நயம், கற்பனையை விலக்காது இயல்பான முறையில், பானங்கள், பாடல்கள், உடைகள், உணவுகள் அனைத்தையும் தனது நாவல்களில் எப்படி அளிப்பது என்பது அவருக்குத் தெரியும். மோசமான சலிப்பூட்டும் வரலாற்று நாவல்களை விலக்குமாறு ஒரு விடாமுயற்சியுள்ள புலனாய்வாளராக அன்றாட வாழ்க்கையின் தொனியை அவர் பொறித்தெடுக்கிறார் என பாராட்டியுள்ளார்.

இறந்தவர்களின் குகை, என்ற மார்த்தாவின் வரலாற்று நாவல் இயக்குனர் சாண்டியாகோ அல்வாரெஸால் ஒரு திரைப்படமாக்கப்பட்டுள்ளது.
மார்த்தா கியூப திரைப்படக் கலைத் தொழிலக அமைப்பு தொடங்கப்பட்டதிலிருந்து இயக்குநர்கள் ஜோஸ் மால்டாவ்ஸ்கி மற்றும் கோன்சலோ அரிஜான் குழுவில் இணைந்து பிரெஞ்சுத் தொலைக்காட்சிக்காக ஆவணப் படங்கள் தயாரித்துள்ளார்.

அமெரிக்காவின் நீண்ட சமூகப் பொருளாதாரத் தடைகள் மார்த்தாவை வடக்கு அரைக்கோளத்தின் பத்திரிகை அரங்கிலிருந்து தள்ளி வைத்தது போலவே, இந்த அற்புதமான முன்மாதிரியை வட அமெரிக்கப் பெண்கள் இழக்கும் படியும் தடுத்து விட்டது என முன்னாள் பத்திரிகையாளரும், நியூயார்க் புரூக்ளின் கல்லூரியில் ஆங்கில இணைப் பேராசிரியருமான ரான் ஹோவெல் குறிப்பிட்டுள்ளார்.

தன் நீண்ட நெடும் எழுத்துப் பணியால் வரலாற்றுக்கு வாழ்வளித்து, தன் புதினங்களால் அதற்குப் புத்துயிர் ஊட்டிய மார்த்தா நீடுழி வாழ வாழ்த்துவோம்.

(தொடரும்)

# என்ன செய்தார் எங்கெல்ஸ்?

**தியாகு**

*"மார்க்சும் எங்கெல்சும் தொழிலாளர் வகுப்புக்கு ஆற்றிய சேவைகளை இரத்தினச் சுருக்கமாக்க் கூறுவதெனில்: தொழிலாளர் வகுப்பு தன்னைத்தான் அறிந்து கொள்ளவும் தன்னைத்தான் உணர்ந்து கொள்ளவும் அவர்கள் கற்றுக் கொடுத்தார்கள். கனவுகளின் இடத்தில் அறிவியலை அமர்த்தினார்கள்." -- இலெனின்.*



பதிவு எண் :R.Dis. No. 1964/2014

நிகழ் பொருளியல் அமைப்புதான், அதாவது முதலிய (முதலாளித்துவ) அமைப்புதான் தொழிலாளர் வகுப்பைப் பெற்றெடுத்தது. முதலிய அமைப்பின் ஒரு முனையில் முதலாளர் இருக்க வேண்டுமானால் மறு முனையில் தொழிலாளர் இருந்தாக வேண்டும். இவ்விரு குமுக வகுப்புகளும் இந்தப் பொருளில் உடன்பிறப்புகள் எனலாம். ஒன்றுக்கொன்று பகையான உடன்பிறப்புகள்! தொழிலாளர் வகுப்பின் கோரிக்கைகள் யாவும் முதலிய அமைப்பிலிருந்தே விளைகின்றன. அவை தொழிற்சங்கத்தின் கண்டுபிடிப்புகள் அல்ல. இந்தப் பொருளியல் அமைப்பும் முதலாளர் வகுப்பும் சேர்ந்து தொழிலாளர்கள் அமைப்புவழித் திரள வேண்டிய தேவையைத் தோற்றுவிக்கின்றன. முதன்முதலில் இந்த உண்மையை மெய்ப்பித்த இரட்டையர் மார்க்ஸ்-எங்கெல்ஸ்.

மாந்தக் குலத்தை ஒடுக்கும் தீங்குகளிலிருந்து அதனை விடுவிப்பது எப்படி? உயர்ந்த மனிதர்களின் நல்லெண்ண முயற்சிகளாலா? சூராதி சூரர்களின் வீரச் செயல்களாலா? இல்லை, இல்லை. அமைப்புவழித் திரண்ட பாட்டாளிகளின் வகுப்புப் போராட்டமே விடுதலைக்கு வழிவகுக்கும். குமுகியம் (சோசலிசம்) என்பது கனவுலக வாசிகளின் கண்டுபடைப்பல்ல, அது புதுமக்காலக் குமுகத்தில் (நவீன கால சமூகத்தில்) பொருளாக்க (உற்பத்தி) ஆற்றல்களின் இறுதி நோக்கமும் தவிர்க்கவியலா விளைவும் ஆகும் என்பதைத் தம் அறிவியல் நூல்களில் விளக்கினார்கள். இன்று வரைக்குமான ஏடறிந்த வரலாறு அனைத்தும் வகுப்புப் போராட்டங்களின் (வர்க்கப் போராட்டங்களின்) வரலாறே. வகுப்புப் போராட்டத்துக்கும் வகுப்பு ஆளுமைக்கும் அடித்தளங்களான தனிச் சொத்துடைமையும் அரசிலி (அராசக) குமுகப் பொருளாக்கமும் மறையும் வரை இந்தப் போராட்டங்கள் தொடரும். இந்த அடித்தளங்களை அழிப்பதே பாட்டாளி வகுப்பின் நலன்களுக்கு ஏற்றதாகும். ஆகவே அமைப்புவழித் திரண்ட தொழிலாளர்களின் உணர்வார்ந்த வகுப்புப் போராட்டம் இந்த அடித்தளங்களுக்கு எதிராகச் செலுத்தப்பட வேண்டும் என்று மார்க்சும் எங்கெல்சும் அறிவுறுத்தினார்கள்.

பாட்டாளி மக்களுக்கு இந்தப் பாடங்களைக் கற்றுத்தர மார்க்சும் எங்கெல்சும் தங்கள் வாழ்நாள் கூட்டுழைப்பை நல்கினார்கள். சிந்தனை, சொல், செயல் மூவகையிலும் இருவரும் ஒருவருக்கொருவர் நிகராகப் பாடாற்றினாலும் எங்கெல்ஸ் எப்போதும் மார்க்சுக்கே முதலிடம் தந்தார். ஆனால் மார்க்ஸ், மார்க்சியம் என்றாலே எங்கெல்சும் அவர்தம் சிந்தனைகளும் அதில் அடக்கம் என்பதில் ஐயமில்லை.

கார்ல் மார்க்சும் பிரெடெரிக் எங்கெல்சும் ஆற்றிய கூட்டுழைப்பின் சாறம் இதுவே

பதிவு எண் :R.Dis. No. 1964/2014

என்றாலும், பிரெடெரிக் எங்கெல்சின் இருனூறாம் ஆண்டில் மார்க்சியத்தில் அவரது பங்களிப்பைத் தனித்துப் பார்க்கும் தேவை இருக்கத்தான் செய்கிறது.

இலெனின் சொல்கிறார்:

**பிரஷ்யாவின் ரைன் மாகாணத்தில் பார்மென் என்ற ஊரில் 1820 நவம்பர் 28ஆம் நாள் எங்கெல்ஸ் பிறந்தார். அவருடைய தகப்பனார் தொழிலுரிமையாளராய் இருந்தார். 1838இல் எங்கெல்ஸ் பள்ளிப் படிப்பை முடிப்பதற்குள்ளேயே ஒரு வணிக நிறுவனத்தில் எழுத்தராய்ப் பணியிலமர்ந்தார்.**

**மாணவப் பருவத்திலேயே எங்கெல்சுக்குக் கொடுங்கோலாட்சியின் மீது வெறுப்பு வளர்ந்தது. வணிக நிறுவனத்தில் வேலை செய்து கொண்டே அவர் மெய்யியல் பயின்று வந்தார்.**

**அக்காலத்தில் ஜெர்மானிய மெய்யியல் உலகில் ஹெகலின் அறவுரை ஆட்சிசெலுத்தியது. மார்க்சைப் போலவே எங்கெல்சும் ஹெகலின் கருத்துகளால் ஈர்க்கப்பட்டார். ஹெகல் பிரஷ்ய முடியரசைப் போற்றிக் கொண்டிருந்தாலும் அவரின் எண்ணங்கள் புரட்சியமாய் இருந்தன. மாந்தரின் பகுத்தறிவிலும் அந்தப் பகுத்தறிவுக்குள்ள உரிமைகளிலும் ஹெகல் நம்பிக்கை வைத்திருந்தார். இந்த உலகம் ஓயாமல் வளர்ந்து கொண்டும் மாறிக் கொண்டும் இருக்கிறது என்பதுதான் ஹெகலிய மெய்யியலின் அடிப்படையாக இருந்தது.**

**எங்கெல்ஸ் 1842இல் பிரித்தானியத் தொழில்துறை மையமாகிய மான்செஸ்டரில் குடியமர்ந்தார். அங்கு அவருடைய தகப்பனாரைக் கூட்டுப்பங்காளராகக் கொண்ட ஒரு வணிக நிறுவனத்தில் சேர்ந்து வேலைசெய்தார்.**

எங்கெல்ஸ் அலுவலகத்திற்குள்ளேயே அடைந்து கிடக்க மாட்டார். சேற்றில் புழுக்கள் போல் தொழிலாளர்கள் நிறைந்து கிடக்கும் சேரிகளுக்குப் போவார். உழைக்கும் மக்களின் அவல வாழ்வைக் கண்டறிவார். பிரித்தானியத் தொழிலாளர் வகுப்பின் நிலைமை பற்றி எழுதப்பட்டவற்றையெல்லாம் படித்தறிவார். தமக்குக் கிடைத்த அதிகாரமுறை ஆவணங்களையெல்லாம் கவனமாக ஆராய்வார்.

எங்கெல்ஸ் தன் ஆராய்ச்சி முடிவுகளைத் தொகுத்து எழுதிய **இங்கிலாந்தில் தொழிலாளர் வகுப்பின் நிலைமை** என்ற நூல் 1845இல் வெளிவந்தது.

பாட்டாளி வகுப்பின் அவல நிலைமை அது தன் இறுதி விடுதலைக்காகப் போராடும்படி

நெருக்கித்தள்ளும் என்று எங்கெல்ஸ் கருதினார். போராடுகிற பாட்டாளி வகுப்பு தனக்குத்தானே உதவிக் கொள்ளும். தொழிலாளர் வகுப்பின் அரசியல் இயக்கமானது குமுகியம் (சோசலிசம்) தவிரத் தங்களுக்கு வேறு வழியே இல்லை என்பதைத் தவிர்க்க முடியாதபடி தொழிலாளர்களை உணரச் செய்யும். மறுபுறம் குமுகியம் என்பது தொழிலாளர் வகுப்பினது அரசியல் போராட்டத்தின் நோக்கமாக அமைந்தால்தான் வலிமை பெறும்.

இங்கிலாந்து வந்த பிறகுதான் எங்கெல்ஸ் குமுகியர் (சோசலிஸ்டு) ஆனார். மான்செஸ்டரில் அவர் அப்போது பிரித்தானியத் தொழிலாளர் இயக்கத்தில் தீவிரமாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டார்; ஆங்கிலேயக் குமுகிய ஏடுகளுக்குக் கட்டுரைகள் எழுதிக் கொடுத்து வந்தார்.

கொலோன் நகரில் மார்க்ஸ்-எங்கெல்ஸ் முதல் சந்திப்பு நிகழ்ந்தது. 1844 செப்டெம்பரில் பிரெடெரிக் எங்கெல்ஸ் பாரிசுக்குச் சென்று மார்க்சைச் சந்தித்து, அது முதல் மார்க்சின் உயிர்த் தோழராகி விட்டார். நண்பர்கள் இருவரும் கோட்பாட்டிலும் நடைமுறையிலும் கூட்டாகச் செயல்படத் தொடங்கினர்.

மார்க்ஸ்-எங்கெல்ஸ் இருவரின் முதல் கூட்டுப்படைப்பு 1845இல் அவர்கள் எழுதிய **<u>ஜெர்மானியக் கருத்தியல்</u>** ஆகும். அப்போது வெளியிடப்படாத இந்நூல் 80 ஆண்டு கழித்தே வெளிவந்தது. புரட்சியின் தேவையை மறுத்தவர்களை மறுத்து எழுதப்பட்ட நூல் அது.

மார்க்ஸ் விரிவான பொருளியல் ஆராய்ச்சிகள் செய்யத் தீர்மானித்ததற்கு எங்கெல்சுடனான தொடர்பும் ஒரு காரணமாயிற்று.

1845 முதல் 1847 வரை எங்கெல்ஸ் பிரசெல்சிலும் பாரிசிலும் தங்கிக் கொண்டு அறிவியல் பணியும் நடைமுறை வேலைகளும் செய்து வந்தார்.

1848ஆம் ஆண்டில் பிரான்சில் வெடித்து ஏனைய மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் பரவிய புரட்சிக்குப் பிறகு மார்க்சைப் போலவே எங்கெல்சும் தாய்நாடு திரும்பினார். நண்பர்கள் இருவரும் <u>நியூ ரைனிஷ் ஜைட்டங்</u> ஏட்டில் முழுமூச்சாய் உழைத்ததோடு, பிற்போக்கு ஆற்றல்களை எதிர்த்துக் களத்திலிறங்கியும் போராடினார்கள்.

மக்களின் ஆய்த எழுச்சியில் தம்மை இணைத்துக் கொண்ட எங்கெல்ஸ் மூன்று சமர்களில் நேரடியாகப் பங்கெடுத்துக் கொண்டார். ஆய்த எழுச்சி தோற்ற பிறகு புரட்சிக்காரர்கள் சுவிட்சர்லாந்து வழியாக இலண்டனுக்குத் தப்பிச் சென்றார்கள்.

எங்கெல்ஸ் படைத்துறைக் கூறுகளில் தேர்ச்சி மிக்கவராய் இருந்தார். புரட்சியப் பாட்டாளி

வகுப்பின் முதல் படையியல் வல்லுநர் அவரே எனலாம். எங்கெல்சின் படையியல் அறிவை உயர்வாய் மதித்த மார்க்ஸ் "மான்செஸ்டரில் உள்ள படைத்துறை அமைச்சகத்தை" (அதாவது எங்கெல்சை) தாம் முழுமையாய் நம்புவதாகக் குறிப்பிட்டார்.

எங்கெல்ஸ் அந்தப் பழைய மான்செஸ்டர் நிறுவனத்திலேயே எழுத்தராக வேலைக்குச் சேர்ந்து, பிறகு பங்காளராகி விட்டார்.

1845இல், பிரஷ்ய அரசு வற்புறுத்தியதால் பிரெஞ்சு அரசு மார்க்சை "ஆபத்தான புரட்சியாளர்" என்று சொல்லி பாரிசிலிருந்து நாடு கடத்தியது. அவர் பிரசெல்சுக்குச் சென்றார். பாரிசில் இருந்த போதே மார்க்சும் எங்கெல்சும் புரட்சியமான பாட்டாளி வகுப்புக் குமுகியக் கோட்பாட்டை வகுத்து உருவாக்கினார்கள். இவ்வகையில் 1847இல் வெளிவந்த மார்க்சின் நூலாகிய **மெய்யியலின் வறுமை** முகன்மையானதாகும். அதே ஆண்டில் **பொதுமைக் கொள்கைகள்** என்ற நூலை எங்கெல்ஸ் எழுதினார்.

மார்க்சும், எங்கெல்சும் 1847இல் "பொதுமைக்கழகம்" (கம்யூனிஸ்ட் லீக்) என்ற அமைப்பில் சேர்ந்தார்கள். இந்த அமைப்பின் சார்பில்தான் இன்றும் புகழ் பெற்று விளங்கும் **பொதுமைக்கட்சியின் கொள்கையறிக்கையை (Communist Manifesto) அவர்கள் எழுதினார்கள். இந்த அறிக்கை 1848 பிப்ரவரியில் வெளியிடப்பட்டது. இந்தச் சிறுநூல் புதிய உலகக் கண்ணோட்டத்தின் உருவரைகளைத் தெள்ளத் தெளிவாய் எடுத்தியம்புகிறது. வரலாற்றுப் பொருண்மியமும், வளர்ச்சியின் சாறமாகிய இயங்கியலும், வகுப்புப் போராட்டக் கோட்பாடும், பொதுமைக் குமுகத்தின் படைப்பாளியாக உலக வரலாற்றில் பாட்டாளி வகுப்பு வகிக்கும் புரட்சிப் பங்கு பற்றிய கோட்பாடும் இந்தப் பதிய உலகக் கண்ணோட்டத்தின் கூறுகளாகும் என்பார் இலெனின்.**

ஓயாமல் நாடு கடத்தப்பட்டுக் கொண்டிருந்த போதும் சரி, இலண்டனில் வாழ்ந்த போதும் சரி, மார்க்சும் ஜென்னியும் அவர்கள் ஈன்றெடுத்த அன்புக் குழந்தைகளும் பட்ட துயரத்தைச் சொல்லி மாளாது. மார்க்ஸ் குடும்பம் கொடிய வறுமையில் உழன்று தவித்தது. பிரெடெரிக் எங்கெல்ஸ் தன்னலமே கருதாமல் ஓயாமல் வழங்கிய பொருளுதவி மட்டும் இல்லாமற் போயிருந்தால், மார்க்ஸ் தமது வாழ்க்கைப் பெரும் படைப்பாகிய **மூலமுதல்** (Capital) என்ற நூலை எழுதியிருக்க முடியாது என்பது மட்டுமல்ல, தவிர்க்க முடியாதவாறு வறுமையின் சுமை தாளாமல் அழிந்தே போயிருப்பார் என்கிறார் இலெனின்.

"மூஷ்" என்று செல்லமாய்க் கொஞ்சி மகிழ்ந்து கொண்டிருந்த சின்னஞ்சிறு மகன்

எட்காரைப் பறிகொடுத்த போது மார்க்ஸ் துடித்துப் போனார். தமது துயரத்தையெல்லாம் ஒருசேரக் கொட்டி எங்கெல்சுக்கு எழுதிய கடிதத்தில் அவர் சொன்னார்: "எத்தனையோ துன்பங்கள் பார்த்து விட்டேன். ஆனால், உண்மையான துன்பம் என்றால் என்னவென்று இப்போதுதான் உணர்கிறேன். உன்னைப் பற்றிய, உனது நட்பைப் பற்றிய நினைப்பும், நாம் இருவரும் சேர்ந்து இவ்வுலகில் உருப்படியாகச் செய்ய வேண்டியது இன்னும் ஏதோ இருக்கிறது என்று நம்பிக்கையும்தான் இந்தக் கொடிய மன வேதனைகளுக்கிடையே எனக்கு எப்போதும் ஆதரவாக இருந்து வருகிறது."

**மூலமுதல்** என்ற பொருளியல் அறிவியல் பெருநூலைப் படைப்பதில் ஈடுபட்டிருந்த மார்க்சுக்கும் அவருடைய குடும்பத்துக்கும் தொடர்ந்து உதவி வர வேண்டும் என்பதற்காகவே எங்கெல்ஸ் வணிகத் துறையில் ஈடுபட்டிருந்தார். அவர் மார்க்சுக்கு எழுதிய ஒரு கடிதத்தில் கூறியிருப்பதாவது: "எனக்கு உளச் சோர்வு ஏற்படுத்தி எனது நேரத்தையெல்லாம் தட்டிப் பறிக்கும் இந்த நாய்த்தனமான வணிகத்தைத் தொலைத்துத் தலைமுழுகி விட வேண்டும் என்பது தவிர வேறெந்த ஆசையும் எனக்கில்லை."

1869இல் வணிகத்திலிருந்து விடுபட்ட போது எங்கெல்ஸ் "நான் விடுமை மாந்தன்" என்று அறிவித்துக் கொண்டார்.

"எகிப்தியச் சிறையிலிருந்து நீ தப்பி விட்டாய்" என்று அவருக்கு வாழ்த்துத் தெரிவித்தார் மார்க்ஸ்.

இதற்கிடையில் எங்கெல்ஸ் தமது வாழ்க்கைத் துணையை இழந்து விட்டார். "புரட்சி மனங்கொண்ட அயர்லாந்துக்காரி" என்று அவரால் வண்ணிக்கப்பட்ட அவருடைய மனைவி மேரி பேர்ன்ஸ் 1863 சனவரி 6ஆம் நாள் இதய நோய்க்குப் பலியானார். தமது இழப்பு குறித்து எங்கெல்ஸ் மார்க்சுக்கு எழுதினார்:

"நான் இவ்வளவு காலம் இந்தப் பெண்மணியுடன் வாழ்க்கை நடத்தியதால் அவளது மறைவு என்னைப் பெரிதாக உலுக்கியே விட்டது. அவளுடன் கூடவே எனது இளமையின் இறுதித் துளியையும் சேர்த்துப் புதைத்து விட்டதாக உணர்ந்தேன்.''

1870 வரை எங்கெல்ஸ் மான்செஸ்டரிலும், மார்க்ஸ் இலண்டனிலும் வசித்து வந்தனர். ஆனால் இருவருக்கும் இடையில் உயிர்த்துடிப்பான அறிவுப் பரிமாற்றம் தொடர்ந்து நிகழ்வதற்கு இந்தப் பிரிவும் தொலைவும் தடையாகவில்லை. அவர்கள் ஒருவருக்கொருவர் கடிதம் எழுதிக் கொள்ளாத நாளே இல்லை எனலாம். நண்பர்கள் இருவரும் இந்தக் கடிதங்களில் கருத்துப்

பரிமாற்றமும் அறிவுப் பரிமாற்றமும் செய்து கொண்டார்கள்; அறிவியல் குமுகியம் (விஞ்ஞான சோசலிசம்) என்னும் அறிவாய்தத்தை வார்த்து உருவாக்கிக் கூர் தீட்டுவதில் கூட்டாய்ச் செயல்பட்டார்கள்.

1870இல் எங்கெல்ஸ் இலண்டனுக்கு வந்து விட்டார். மார்க்ஸ்-எங்கெல்சின் கூட்டுழைப்பு மார்க்சிடமிருந்து மூலமுதல் நூலாகவும், எங்கெல்சிடமிருந்து டூரிங்குக்கு மறுப்பு, குடும்பம், தனிச் சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம் நூல்களாகவும் மலர்ந்தது.

மார்க்ஸ் திட்டமிட்டவாறு மூலமுதலை முழுமையாக எழுதி முடிப்பதற்குள் இறந்து விட்டார். மார்க்ஸ் விட்டுச்சென்ற வரைவுக் குறிப்புகளின் அடிப்படையில் **மூலமுதலின்** இயல் இரண்டையும் இயல் மூன்றையும் அணியமாக்கி வெளியிடும் பெரும்பணியை எங்கெல்ஸ் ஏற்றுக்கொண்டார். 1885இல் இயல் இரண்டையும் 1894இல் இயல் மூன்றையும் வெளியிட்டார். (அவர் இயல் நான்கை அணியமாக்குவதற்குள் இறப்பு குறுக்கிட்டு விட்டது.)

ஆட்லர் என்பார் சொல்வது போல் **மூலமுதலின்** இயல் இரண்டையும் இயல் மூன்றையும் அணியமாக்கி வெளியிட்டதன் மூலம் எங்கெல்ஸ் தமக்கு நண்பராய் விளங்கிய மாமேதைக்கு ஒரு மிடுக்கான நினைவுச் சின்னத்தை நிறுவியதோடு, அந்த நினைவுச் சின்னத்தில் தாம் விரும்பாமலே தமது பெயரையும் அழிக்க முடியாதபடி பொறித்துக் கொண்டு விட்டார்.

மூலமுதலின் இயல் ஒன்று மார்க்சின் தனிப்படைப்பு என்றால், இயல் இரண்டையும், இயல் மூன்றையும் மார்க்ஸ்-எங்கெல்ஸ் ஆகிய இருவரின் கூட்டுப் படைப்பாகவே கருத வேண்டும் என்கிறார் இலெனின்.

எங்கெல்ஸ் எப்போதுமே தம்மை மார்க்சுக்கு அடுத்த நிலையில்தான் வைத்துக் கொண்டார். மார்க்சிடம் அவர் கொண்டிருந்த நேசத்திற்கும் மதிப்பிற்கும் எல்லையில்லை.

1864இல் பன்னாட்டுத் தொழிலாளர் பேரவையை மார்க்ஸ் நிறுவிய போதும், பத்தாண்டு காலம் அதனை வழிநடத்திக் கொண்டிருந்த போதும் எங்கெல்ஸ் பேரவைப் பணிகளில் முனைப்புடன் பங்கேற்றார். இந்தப் பேரவையின் காலம் முடிந்த பிறகும் கூட மார்க்ஸ்-எங்கெல்ஸ் இருவரும் தொழிலாளர் வகுப்பு இயக்கத்தின் வழிகாட்டிகளாகச் செயல்பட்டார்கள். மார்க்சின் மறைவிற்குப் பிறகு எங்கெல்ஸ் இந்தப் பணியைச் செய்து வந்தார். பற்பல ஐரோப்பிய நாடுகளையும் சேர்ந்த குமுகியர்களுக்கு எங்கெல்சின் கோட்பாட்டுச் செல்வமும் பட்டறிவுச் செறிவும் துணைநின்றன.

மார்க்ஸ் மறைந்த பின் எங்கெல்ஸ் ஆற்றிய பணி மார்க்சியத்துக்கு அவரது

தனித்துவமான பங்களிப்பு என்பதில் யாருக்கும் எவ்வித ஐயப்படும் இருக்க முடியாது.

அவர் மெய்யாகவே பன்மொழி அறிஞராக விளங்கினார். குறைந்தது பன்னிரண்டு மொழிகளில் ஆற்றொழுக்காகப் பேசவும் எழுதவும் அவரால் முடிந்தது. படிப்பதற்கு மட்டுமென்றால் அவருக்குத் தெரிந்த மொழிகள் இருபதுக்கு மேல். பட்டங்களும் விருதுகளும் வாங்குவதற்கன்று, பன்னாட்டுப் பாட்டாளிகளுக்குப் புரட்சித் தொண்டு புரிவதற்காகவே அவர் இத்தனை மொழிகளும் கற்றுக் கொண்டார். கோட்பாட்டு ஆராய்ச்சியிலும் நடைமுறைப் பணியிலும் தமது பன்மொழிப் புலமையை அவர் முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டார்.

இதை விடவும் முகன்மையானது மார்க்சியத்தின் பெயராலேயே மார்க்சியத்தைக் கொச்சைப்படுத்தும் முயற்சிகளுக்கு எதிராக அவர் மார்க்சியத்தைக் காத்து நின்றதாகும். குறிப்பாக பொருளியல் அடித்தளத்துக்கும் கருத்தியல் மேற்கட்டுமானத்துக்குமான இயங்கியல் உறவை அவர் சரியாக விளக்கப்படுத்தினார்.

தன் இறுதியாண்டுகளில் நண்பர்களுக்கு எழுதிய மடல்களில் இது குறித்துத் தங்களின் (மார்க்ஸ்-எங்கெல்ஸ்) சிந்தனையை விளக்கப்படுத்தியதோடு, தாங்கள் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டதற்கு தாங்களும் காரணமாக அமைந்து விட்டதற்குத் தற்குற்றாய்வும் செய்து கொண்டார்.

பொருளியல் அடித்தளத்தை மட்டுமே கண்டு மேற்கட்டுமான்ங்களின் செயலூக்கமான பங்கினைக் காண மறுத்த இளம் பிரெஞ்சு 'மார்க்சியர்களைப்' பற்றி 1870களிலேயே மார்க்ஸ் கூறியதை எங்கெல்ஸ் எடுத்துக்காட்டினார்: "எனக்குத் தெரிந்ததெல்லாம் நான் ஒரு மார்க்சிஸ்டு அல்ல என்பதே."

எழுபது வயதைத் தாண்டிய பிறகும், கண் பார்வை மங்கத் தொடங்கிய பிறகும் கூட, எங்கெல்ஸ் கடுமையாக உழைத்து வந்தார். 1894 கடைசியில் அவர் ஒரு நண்பருக்கு எழுதிய கடிதத்தில், முன்னைப் போல் சுறுசுறுப்பாக இருக்க முடியவில்லை என்று வருத்தப்பட்டார். அப்போதே அவரைப் புற்றுநோய் தாக்கியிருந்தது.

1895 ஆகஸ்டு 5ஆம் நாள் பிரெடெரிக் எங்கெல்ஸ் இலண்டனில் காலமானார். இன்றைக்கு இருநூறு ஆண்டு முன்பு பிறந்த அந்த அறிவுச் சுடர் உடலால் அணைந்தாலும் மாந்தக் குல விடுதலைக்கான பாதையில் இன்றளவும் ஒளியேற்றி வழிகாட்டி வருகிறது.

## முத்துக்குமார் நினைவாக…

**போரும் போராட்டமும் பகையை வெல்வதற்காகவே தவிர, நம்மை நாமே அழித்துக் கொள்வதற்கல்ல என்னும் போது, தன்னைத்தானே அழித்துக் கொள்ளும் தீக்குளிப்பை எப்படிச் சரியான போராட்ட வடிவமாக ஏற்க இயலும்? என்ற கேள்வி எனக்கு எப்போதுமே உண்டு. பொது நோக்கத்துக்காகத் தீக்குளிப்பவரின் நெஞ்சுறுதியையும் தன்னளிப்பையும்**



**கிஞ்சிற்றும் குறைப்படுத்தாமலே இந்தக் கேள்வியைக் கேட்க இயலும்.**

**வியத்நாமில் பொதுமையர்களும், தேசிய விடுதலைப் போராளிகளும் அமெரிக்க வல்லாதிக்கத்தையும் அதன் கைப்பாவைகளையும் எதிர்த்து வீரச் சமர் புரிந்தார்கள். சில பௌத்த பிக்குகளோ இந்த நோக்கத்திற்காகத் தீக்குளித்தார்கள். இந்த தீக்குளிப்புகள் உலகின் உளச்சான்றைத் தொட்டு விடுதலைப் போருக்குத் துணைசெய்தன. இப்படித் தீக்குளிப்பதை விடுத்து வேறு வகையில் விடுதலைப் போரில் பங்கேற்க அவர்களின் கொல்லாமைக் கருத்தியல் தடை போட்டிருக்கலாம்..**

**தமிழ்நாட்டில் கீழப்பழூர் சின்னச்சாமியின் தீக்குளிப்பு (1964) வரவிருந்த மொழிப்போருக்குக்**

கட்டியம் கூறுவதாய் அமைந்தது. 1965 மொழிப் போராட்டத்தில் சிவலிங்கம், அரங்கநாயகம், சாரங்கபாணி போன்ற இளைஞர்களின் தீக்குளிப்பு இந்தி எதிர்ப்புப் போராட்டத் தீயை விசிறி விட்டது. இந்த இளைஞர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் என்றாலும் கழகம் அவர்களை தீக்குளிக்கச் சொல்லவில்லை. ஆனால் அவர்களின் ஈகத்தை அக்கட்சித் தலைவர்கள் போற்றினார்கள். தமது அரசியல் வளர்ச்சிக்குப் பயன்படுத்திக் கொள்ளவும் செய்தார்கள். நாமும் தமிழுக்காகத் தம்மைத் தந்தவர்கள் என்ற முறையில் அவர்களின் ஈகத்தைப் போற்றி வணங்குகிறோம்.. ஆனால் இவர்களின் மொழியுணர்ச்சியைத் தூண்டிய திமுக தலைமையிடம் சரியான மொழிக் கொள்கை கிடையாது. மொழிப் போராட்டத்தை இன விடுதலைப் போராட்டமாக வளர்த்தெடுக்கும் திட்டம் கிடையாது. இந்தித் திணிப்பை எதிர்ப்பதன் பேரால் ஆங்கிலத் திணிப்பை ஏற்றுக் கொள்வது, மோசடித் திட்டமாகிய நேரு உறுதிமொழியை வலியுறுத்துவது போன்ற குழப்படிகளுக்குப் பஞ்சமில்லை. தேசிய விடுதலைப் போராளிகளாக வளர்ந்திருக்க வேண்டிய இளைஞர்கள் தீக்குளிப்பு என்ற அளவில் முடிந்து போனதற்குப் போராட்டத் தலைமையின் கொள்கைக் குளறுபடியே காரணமாயிற்று.

தி.மு.கழகத்திலிருந்து வைகோ நீக்கப்பட்டதை எதிர்த்து நொச்சிக்குப்பம் தண்டபாணியும் இடிமழை உதயனும் தீக்குளித்த போது, கழகத் தலைமையின் சனநாயக மறுப்புக்கு எதிரான இந்த இளைஞர்களின் உணர்ச்சியை மதித்தோம் என்றாலும், இதற்காகத் தீக்குளிப்பு என்பதை ஏற்க இயலவில்லை. அந்த நேரம் நாற்காலி இதழில் “என்று ஒழியும் இந்தத் தீச்செயல்?” என்ற தலைப்பில் ஒரு கவிதை எழுதினேன்.

இராசீவ் காந்தி கொலைக்குப் பின், தமிழகத்தில் தமிழீழ ஆதரவு மங்கிக் கிடந்த சூழலில் 1997இல் அப்துல் ரவூப் தீக்குளித்தார். தமிழகத்தில் ஈழ ஆதரவுக்காக நடந்த முதல் தீக்குளிப்பு இதுவே, பெரம்பலூரில் அப்துல் ரவூப் நினைவைப் போற்றி நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசும் போது இப்படிச் சொன்னேன்:

“தமிழீழத்திற்கு ஆதரவாகக் குரல் கொடுக்கத் தமிழகத்தில் யாருமில்லை என்ற எண்ணம்தான் அப்துல் ரவூப்பைத் தீக்குளிக்கத் தூண்டியது. அப்துல் ரவூப் தீக்குளிக்கப்

**போவது முன்கூட்டியே எனக்குத் தெரிந்திருந்தால், தீக்குளிக்க வேணடாம், நாம் சேர்ந்து போராடுவோம், இப்போதைய நிலைமையை மாற்றுவதற்காகப் போராடுவோம் என்று எடுத்துச் சொல்லித் தடுத்திருப்பேன்."**

**அப்துல் ரவூப் தீக்குளித்திருக்கக் கூடாது என்ற எண்ணம் இருப்பினும் அவரது ஈகத்தைப் போற்றி தமிழ்த் தேசம் ஏட்டில் எழுதினேன்:**

**"ஒற்றை மனிதனாய் ஊர்வலம்**
**அற்றை நாளில்**
**பெரம்பலூரில்**
**தீப்பந்த ஊர்வலம்**
**மனிதனே பந்தம்**
**ஈழத்தோடு தமிழினப் பந்தம்**
**எலும்புத் திரியில்**
**குருதி எண்ணெய்**
**எரிய நடந்தான்**
**கருகி விழுந்தான் -**
**எழுந்தோம் உயிர்த்து."**




**தமிழீழ மக்கள் மீதான இனஅழிப்புப் போரை நிறுத்தச் செய்வதற்காகத் தமிழகம் கிளர்ந்தெழுந்து போராடிக் கொண்டிருந்த சூழலில் முத்துக்குமார் தீக்குளித்தார். இந்தச் செய்தி கிடைத்த போது, முதலில் ஏற்பட்ட எண்ணம் "இப்படிச் செய்திருக்கக் கூடாது" என்பதாகவே இருந்தது. அன்றாடம் வந்து கொண்டிருந்த தமிழின அழிப்புச் செய்திகளால் ஏற்பட்ட துயரம், சிங்கள இன வெறியர்கள் மீதும் அவர்களின் கூட்டாளிகளாகச் செயல்பட்ட இந்திய ஆட்சியாளர்கள் மீதும் ஏற்பட்ட வெறுப்பு, தமிழக ஆளுங்கட்சியும் பிற அரசியல் கட்சிகளும் போரை நிறுத்த உருப்படியாக எதுவும் செய்ய முடியாமை குறித்தான வருத்தம்… இத்தகைய உணர்ச்சிகள் ஒன்றுசேர்ந்து முத்துக்குமாரைத் தூண்டி விட்டதாகவே நினைத்தேன்..**

**முத்துக்குமாரின் இறுதி மடலைப் படித்த போது, இவர் உணர்ச்சிவயப்பட்டதால் மட்டும் இந்த முடிவுக்கு வரவில்லை என்று தெரிந்தது.**

இதற்கு முன் தீக்குளித்தவர்கள் உணர்ச்சிவயப்பட்டுச் செய்ததை முத்துக்குமார் அறிவுவழிப்பட்டுச் செய்திருப்பது புரிந்தது. முத்துக்குமார் சிந்தனைத் தெளிவுடன் இந்த முடிவை எடுத்திருக்கிறார். அவர் தன்னைத்தானே அழித்துக் கொண்டது நமக்குப் பேரிழப்புதான். ஒரு வீரத்தமிழனை மட்டுமல்ல, சீரியதொரு வருங்காலத் தலைவனை -- இளைஞர்களின் வழிகாட்டியை -- நாம் இழந்து விட்டோம். ஆனால் ஒரு தற்கொடைப் போராளி தன்னோடு சேர்த்துப் பகைவனையும் அழிப்பது போல், முத்துக்குமார் தன்னோடு சேர்த்து வேறு பலவற்றையும் அழித்திருப்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். முத்துக்குமார் எரிந்த போதும், எரிந்து கருகிய உடல் மீண்டும் சுடுகாட்டில் எரிக்கப்பட்ட போதும்… பகைவனின் பசப்பு மொழியும் எரிந்தது. இரண்டகத்தின் ஏமாற்றும் மோசடியும் எரிந்தன. நம் சோம்பலும் ஒற்றுமையின்மையும் கூட எரிந்தன.

முத்துக்குமாரைப் பற்றி மேலும் தெரிந்து கொள்ளத் துடித்துக் கொண்டிருந்தபோதுதான், தோழர் கலைச்செல்வன் வந்து சேர்ந்தார். இவரைக் காட்டிலும் இன்னும் நெருக்கமாக, இன்னும் முழுமையாக முத்துக்குமாரை அறிந்தவர்கள் யாரும் இருக்க முடியாது என நம்புகிறேன்..

முத்துக்குமார் மொட்டவிழ்ந்து நெருப்பு மலராய் விரிந்த கதையை அவர் சுருக்கமாக வரைந்து கொடுத்தார். முத்துக்குமார் -- நெருப்பாய் வாழ்ந்தவன் என்ற தலைப்பில் அதனை நூலாக்கி தமிழ்த் தேசம் வெளியீடாக்கினோம். முத்துக்குமாரின் உள்ளத்துறைந்த உண்மை ஒளிக்குச் சான்றான அவரின் கவிதைகளையும், அவர் ஒப்படைத்துச் சென்ற எழுத்தாயுதமாம் இறுதி மடலையும், அவரைப் பற்றி ஈழப் பாவலர்கள் புதுவை இரத்தினதுரையும் காசிஆனந்தனும் எழுதிய கவிதைகளையும், அவரது இறுதி மடல் குறித்துத் தோழர் கலைவேலு எழுதிய ஆய்வுரையையும் இணைத்து வெளியிட்டோம்.

முத்துக்குமார் - நெருப்பாய் வாழ்ந்தவன்… இந்நூலின் இரண்டாம் பதிப்பு அண்மையில் வெளியிடப்பட்டது.

# நக்வெய்ன் மார்க்சியப் பள்ளியில் (15)

சமந்தா

ஆசிரியர்: **சத்யகி ராய்**

டெல்லியில் உள்ள தொழில்துறை மேம்பாட்டுக்கான ஆய்வு நிறுவனத்தில் (ஐ.எஸ்.ஐ.டி), இணைப் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார். வளரும் நாடுகளில் தொழில்மயமாக்கத்தில் உலகளாவிய உற்பத்தி வலையமைப்பு ஏற்படுத்தும் தாக்கம், உலகமயச் சூழலில் உலகளாவிய மேலாதிக்கத்தின் வளர்ச்சிப் போக்கு ஆகியவை அவரது தற்போதைய ஆய்வுப் புலங்களாகும்.

**தலைப்பு:**

## ஏகாதிபத்தியம் குறித்த மார்க்சியக் கோட்பாடு (1)

உலகளாவிய மேலாதிக்கத்தின் பரிமாணங்களைக் கொண்டுள்ளது ஏகாதிபத்தியம். ஏகாதிபத்தியம் குறித்துப் பல்வேறு கண்ணோட்டங்கள் காணப்படுகின்றன.

ஏகாதிபத்தியம் என்ற கோட்பாட்டுக் கருத்தினம் இன்றைய சூழலில் பொருத்தப்பாடு உடையதல்ல என்று கூறுபவரும் உண்டு. தாராளமயக் கோட்பாடுகள் ஏகாதிபத்தியத்தை முரண்பாடுகளுடன் மட்டுமே அடையாளப்படுத்துகின்றன. போர் ஏற்பட்டால் ஏகாதிபத்தியமாகவும், போர் இல்லையெனில் ஏகாதிபத்தியம் அல்ல என்றும் அவை விளக்கமளிக்கின்றன. முன்-முதலாளித்துவத்தையும், முதலாளித்துவத்துக்கு பிந்தைய கால கட்டத்தையும் அவை வேறுபடுத்திப் பார்ப்பதில்லை. ஆனால் எந்த ஒரு மார்க்சியரும் ஏகாதிபத்தியத்தின் விளைவே போர் என்று விளக்குவாரே தவிர போரின் இருப்பை வைத்து ஏகாதிபத்தியத்தை வரையறை செய்ய மாட்டார்.

காலனியாதிக்கத்தில் தேசம் அதன் புவியியல் எல்லைகளைத் தாண்டி விரிவுபடுத்தப்பட்டது. அதன் இறையாண்மையும், அதிகார ஆற்றலும் நீட்சி பெற்றன.

.காலனியாதிக்கம் என்பது ஏகாதிபத்தியத்தின் ஒரு பகுதியே. ஏகாதிபத்தியம் இல்லாமல் காலனியாதிக்கம் இருக்க முடியும் என்பது கொச்சைவாதம். ஏகாதிபத்தியத்தின் வரலாற்று முக்கியத்துவம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. முதலாளித்துவப் பின்னணியில் ஏகாதிபத்தியம் என்பதை முன்-முதலாளித்துவ ஏகாதிபத்தியத்தின் நீட்சியாகவும் காணலாம்.

பதிவு எண் :R.Dis. No. 1964/2014

மூடிய பொருளாதார வடிவிலான மூலதனத்தின் வேலைதிட்டத்தில் மார்க்ஸ் வீழும் லாபவீதப் போக்கை எதிர்த்து இயங்கும் காரணிகளை விவரிக்கிறார். மூலதனத்தில் உழைப்புக்கும் மூலதனத்துக்கும் இடையிலான உறவையும், வெவ்வேறு மூலதனங்களுக்கிடையிலான உறவையும் விவரிக்கிறார். மூலதனத்தின் முதல் பகுதியில் கிட்டத்தட்ட ஒத்த அங்கக மதிப்புடைய மூலதனமே கருத்தில் கொள்ளப்பட்டது.

வெவ்வேறு நாடுகளிடையே உபரி-மதிப்பு எவ்வாறு அபகரிக்கப்படுகிறது என்பது மூலதனத்தில் பரிசீலிக்கப்படவில்லை. கிரண்ட்ரிசில் (Grundrisse) வெளிநாட்டு வர்த்தகம் குறித்துக் கூறும் போது ஏகாதிபத்தியம் குறித்து மார்க்ஸ் விவரித்திருக்கலாம்.



லாப வீதத்தின் வீழ்ச்சி என்பது ஒரு போக்கை மட்டுமே குறிக்கிறதே தவிர அதைத் தவிர்க்க முடியாத நிலையாகவோ, அதனால் முதளாளித்துவம் தானாகவே வீழ்ந்து விடும் என்ற பொருளிலோ மார்க்ஸ் குறிப்பிடவில்லை. உழைப்புச் சக்தியின் மதிப்பு குறைக்கப்படுவதன் மூலமும், மற்ற நாடுகளிலிருந்து மலிவு விலையில் மூலப் பொருட்களைப் பெறுவதன் மூலமும், உழைப்புச் சக்திக்கான நுகர்வுப் பொருட்களை மலிவாக்குவதன் மூலமும், மற்ற நாடுகள் மேல் கொண்டிருக்கும் மேலாதிக்கத்தின் மூலமாக மலிவான நுகர்வுப் பொருட்களை

அங்கிருந்து ஏற்றுமதி செய்வதன் மூலமும் லாப வீத வீழ்ச்சிக்கு எதிர்ப்போக்கை ஏற்படுத்த முடியும் என மார்க்ஸ் விவரிக்கிறார்.

முதலாளித்துவம் என்பது உலகளாவிய அமைப்பு. முதலாளித்துவத்தின் முக்கியப் பண்புகளில் ஒன்று சீரற்ற வளர்ச்சி.

மூலதனம் முதல் பாகத்தில் முதலாளித்துவ உற்பத்தி முறையும் உபரி-மதிப்பு ஆக்கமும் பரிசீலிக்கப்பட்டது.
முலதனம் இரண்டாம் பாகத்தில் உபரி- மதிப்பின் சுற்றோட்ட முறை விவரிக்கப்பட்டது.
முலதனம் மூன்றாம் பாகத்தில் முதலாளித்துவ அமைப்பு அதன் முழு வடிவில் பரிசீலிக்கப்படுகிறது. மொத்த உபரி-மதிப்பு எவ்வாறு விநியோகிக்கப்படுகிறது என்பதும் முதலாளித்துவ அமைப்பின் சீரற்ற தன்மையும் விவரிக்கப்பட்டன.

ஒரு சரக்கில் பொதிந்துள்ள மதிப்பே அதன் உற்பத்தி விலையாகிறது. அதில் பொதிந்துள்ள உபரி-மதிப்பு முதலாளியின் லாபம் ஆகிறது. சரக்குகளில் உபரி-மதிப்பு உருவாக்கப்பட்டிருந்தாலும், அது லாபத் திறனைக் கொண்டிருந்தாலும், இழப்பும் ஏற்படலாம். ஏனெனில் சரக்குகளின் உபரி-மதிப்பு பணமாக ஈடேற்றம் பெற வேண்டும். மூலதனம் மூன்றாம் பாகத்தில் மொத்த உபரி-மதிப்பும் எவ்வாறு வெவ்வேறு முதலாளிகளிடம் விநியோகிக்கப்படுகிறது, அவர் லாபத்தில் எவ்வளவு பங்கு பெறுகிறார் என்பது அவர் எவ்வளவு முதலீடு செய்தார் என்பதைப் பொறுத்துள்ளது. அதன் அடிப்படையிலே மொத்த உபரி-மதிப்பில் அவரது தனிப்பட்ட பங்கு அவர் எவ்வளவு உபரி-மதிப்பு அபகரிக்கிறார் என்பதைச் சாராமல் நிர்ணயிக்கப்படுகிறது. லாபத்தின் மதிப்பு = சராசரி லாப வீதம்*முதலீடு செய்யப்பட்ட மூலதனத்தின் அளவு.

லாப வீதம் சராசரியாக்கப்படும் நிகழ்வில் வெவ்வேறு மூலதனங்களுக்கு இடையிலான வேறுபாடு அவற்றின் அங்கக மதிப்பில் காணப்படும் வேறுபாடே. மூலதனத்தின் அங்கக மதிப்பு அதிகமாக இருக்கும் போது அது பெறும் லாபமும் அதிகமாகிறது. உலகளாவிய முதலாளித்துவ அமைப்பில் உபரி-மதிப்பு நாடுகளிடையே விநியோகிக்கப்படுகிறது. வளரும் நாடுகள் கூடுதலாகச் சுரண்டப்படுகின்றன. ஒவ்வொரு தேசிய, பிராந்திய நிகழ்வும் ஒரு உலகளாவிய முதலாளித்துவப்

பின்னணியைக் கொண்டுள்ளது. உலகளாவிய முதலாளித்துவ அமைப்பு முறை சீரற்ற மூலதனத் திரட்டலும், மூலதனத்தைக் குவிக்கும், மையப்படுத்தும் போக்கும் கொண்டுள்ளது.

ஏகாதிபத்தியம் பற்றிய பல்வேறு கருத்தாக்கங்கள் உள்ளன. அவை ஏகாதிபத்தியத்தைக் குறை நுகர்வுவாதம், ஏகபோக முதலாளித்துவம், முதலாளித்துவ சகட நெருக்கடியின் வெளிப்பாடு, புரட்சிக்கு முந்தைய காலகட்டம் எனப் பல்வேறு விதமாக விளக்குகின்றன.

வெவ்வேறு மூலதனங்களுக்கிடையில் சமமற்ற அதிகார உறவுகள் உள்ளன. இது வெறும் பொருளாதார நிகழ்வு மட்டுமல்ல, ஏகபோகக் கட்டத்தில் மூலதனக் குவிப்புக்கும் அதிகார உறவுகளுக்கும் இடைமுகமாகவும் ஏகாதிபத்தியம் கருதப்படுகிறது. ஏகாதிபத்தியம் குறித்து ஒற்றைக் கோட்பாடு இல்லை. காலனியாதிக்க ஏகாதிபத்தியம் பற்றிய கோட்பாடுகள், காலனியாதிக்கத்திற்குப் பிற்கால ஏகாதிபத்தியம் குறித்த கோட்பாடுகள் எனப் பலவும் உள்ளன.

தடையற்ற போட்டியுடைய முதலாளித்துவம் என்ற ஒன்று என்றுமே இருந்ததில்லை.
19ஆம் நூற்றாண்டிலேயே முதலாளித்துவம் அதன் ஏகபோகக் கட்டத்தை அடைந்து விட்டது. ஏகாதிபத்தியத்தின் முழுமையான இயங்கியலை ஒரே கோட்பாட்டின் மூலம் விளக்கி விட முடியாது (மார்க்சியக் கோட்பாடுகளுக்குள் கூட).

ஒரு கோட்பாட்டில் ஏகாதிபத்தியம் என்பது முதலாளித்துவத்தின் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்துடன் மட்டும் தொடர்புடையதல்ல. முதலாளித்துவம் அதன் இயல்பிலேயே ஏகாதிபத்தியத்தைக் கொண்டிருப்பதாக விளக்கப்படுகிறது.

ரோசா லக்சம்பர்க்கின் குறை நுகர்வுவாதம் முதலாளித்துவம் எப்போதுமே ஈடேற்றப் பிரச்சினையை கொண்டிருக்கும். அதன் உபரி-மதிப்பை முழுவதுமாக ஈடேற்றம் பெற முன்-முதலாளித்துவச் சந்தைகள் தேவைப்படும். மொத்த உபரி-மதிப்பையும் ஒரு மூடிய பொருளதார அமைப்பில் ஈடேற்றம் செய்ய முடியாது என்றும் முதலாளித்துவம் தன்னைத்தானே நிலை நிறுத்திக் கொள்ள முடியாது. மூலதன முதலீடுகளுக்கான தூண்டுதலைப் பெறவும் அதற்கு முன்-முதலாளித்துவச் சமூக அமைப்பு தேவைப்படுகிறது என்றும் விவரித்துள்ளார்.

ஏகாதிபத்தியத்தை முதலாளித்துவத்தின் ஏகபோக வடிவமாகக் குறிப்ப்பிட்டு, நிதிமூலதனம் எவ்வாறு அதில் உட்பொதிந்துள்ளது என்பதையும் ஹாப்சன், ஹில் ஃபெட்ரின் ஆகியோர் விளக்குகிறார்கள். உள்நாட்டில் முதலீடுகளைக் குறைத்து வெளிநாட்டு முதலீடுகளை அதிகரிக்கும் போது கூடுதல் லாபம் பெற முடியும் எனவும், ஏகபோக முதலாளித்துவத்தில் மூலதனக் குவிப்பின் விளைவாக எந்தப் பொருளார்ந்த வரையறையும் இல்லாமல் எதில் வேண்டுமானாலும் முதலீடு செய்யலாம் என்ற நிலை உருவாகிறது என்றும் ஹாப்சன் குறிப்பிடுகிறார். வெவ்வேறு காலகட்டத்தில் வெவ்வேறு பொருட்கள் மூலதனமாகின்றன.

ஹில்ஃபெர்டின் கூட்டுப் பங்கு நிறுவனத்தின் தோற்றம் குறித்தும், வங்கியின் கடன் நிதியை மேலும் பெருக்குவதற்காக, வங்கி மூலதனம் தொழில் துறை மூலதனத்துடன் இணைந்து நிதி மூலதனம் உருவெடுப்பதையும் விவரித்துள்ளார். இதனால் வங்கி மூலதனத்தின் நலன்களும், நிதி மூலதனத்தின் நலன்களும் கூட்டு சேர்கின்றன. பெரு முதலாளிகளின் சர்வாதிகாரம் ஏற்படுகிறது. அதனால்தான் வாராக் கடன் உள்ள விஜய் மல்லயாவுக்கு மீண்டும் கடன் கொடுக்கப்பட்டது.

முதலாளித்துவத்தின் உச்சக்கட்டமே ஏகாதிபத்தியம் என்றும், அதை ஒரு குறிப்பிடத்தக்க வரலாற்றுக் காலகட்டமாகக் குறிப்பிட்ட லெனின் அதிகார உறவுகள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதை விவரித்து உழைக்கும் வர்க்கத்தின் செயல்பாட்டிற்கான வழிகாட்டுதலையும் தந்தார். லெனினும், ஓரளவிற்கு புகாரினும் ஏகாதிபத்தியத்தை புரட்சிக்கு முந்தைய காலகட்டமாகக் கருதினர். லெனின் வளர்ச்சி குன்றிய காலனியாதிக்க நாடுகளின் விடுதலைப் புரட்சியையும் அதில் இணைத்தார்.
இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு ஏகாதிபத்தியம் குறித்த வேறு பல கோட்பாடுகள் உருவாக்கப்பட்டன. இவை அனைத்தும் முக்கியத்துவம் வாய்ந்தவையே.

டேவிட் ஹார்வி புதிய ஏகாதிபத்தியம் குறித்து ஒரு கோட்பாட்டை அளித்துள்ளார். அவர் ஏகாதிபத்தியத்தை ஏகபோக முதலாளித்துவமாகக் கருதவில்லை. முதலாளித்துவச் சுழற்சியில் ஏற்படும் நெருக்கடியின் விளைவாகக் குறிப்பிடுகிறார். இன்னொரு மார்க்சிய மரபினர்,

ஏகாதிபத்தியம் என்ற ஒன்றே இல்லை என்றும் பேரரசே உள்ளது எனவும் வாதிடுகிறார்கள். வில்லியம் ராபின்சன் தேச அரசு என்ற கருத்தாக்கம் அதன் பொருத்தப்பாட்டை இழந்து விட்டது. தேசம் கடந்த முதலாளித்துவ வர்க்கம் தோன்றியுள்ளதாகக் குறிப்பிடுகிறார். பிரபாத் பட்நாயக் ஏகாதிபத்தியம் குறித்து ஒரு புதிய கோட்பாட்டை அளித்துள்ளார். ஜான் ஸ்மித் லாப வீதத்தின் வீழ்ச்சிப் போக்கின் அடிப்படையில் 21ஆம் நூற்றாண்டின் ஏகாதிபத்தியம் குறித்து விவரிக்கிறார்.

குறை நுகர்வு என்பது தவிர்க்க முடியாததல்ல, ஆனால் முதலாளித்துவத்தின் நோக்கம் நுகர்வு அல்ல, அது தற்செயலான விளைவே ஆகிறது. லாபமே அதன் நோக்கம். உழைப்பாளி உபரி-மதிப்பு உருவாக்கும் வரை மட்டுமே அவரை உயிருடன் இருக்க வைக்க வேண்டிய தேவை முதலாளிக்கு உள்ளது. உழைப்பாளர்களின் பெரும் பட்டாளம் உபரி-மதிப்பு உருவாக்கத் தேவையில்லை என்றும், வளர்ச்சி பற்றிய மீள் சிந்தனையில். உழைப்பாளரின் சேமப் பட்டாளம் முதலாளித்துவத்திற்குத் தேவை இல்லை என்ற கட்டத்தை அடைந்துள்ளது என்றும் அரசியலமைப்பைப் பாதுகாக்கவே அது தேவைப்படுவதாகவும் கல்யாண் சன்யால் கூறுகிறார்.

உழைப்புச் சந்தை தேக்கம் அடைந்துள்ளது. தொழிற் சங்கங்களின் பேர சக்தி குறைந்துள்ளது. சராசரி உழைப்பு தரப்படுத்தப்படும் (standardization) போது சரக்காக்கப்படுகிறது. தரப்படுத்தப்பட்ட உழைப்பைத் துல்லியமான குறியீடாக்க முடியும் (codification). உழைப்பின் திறன் அதிகரிக்கும் போது அதைக் குறியீடுகளாக்க மேலும் அதிக தரப்படுத்துதல் தேவைப்படுகிறது. அறிவு விற்பனைக்குரிய சரக்காக்கப்படுகிறது. கூட்டு மதிநுட்பமாக இருந்த அறிவு தரப்படுத்தும் நிகழ்முறைக்கு உட்படுகிறது. மருத்துவருடைய, பொறியியலாளருடைய மூளைப் பணியைப் குறியீடாக மாற்ற முடியாது. ஆனால் தொழிற்சாலையில் வேலை செய்பவரின் உழைப்பைத் தரப்படுத்திக் குறியீடாக்க முடியும். தொழிற்சங்கங்கள் இருப்பினும் கூட, உழைப்பின் தரப்படுத்தல் அதிகமாகும் போது, கூட்டு பேர சக்தி குறைக்கப்படும்.

(தொடரும்)

# டாலருக்கு வந்த வாழ்வு (10):

**சமந்தா**

## ஏணி எங்களுக்கே!

உலக வர்த்தக அமைப்பின் தோற்றம்:

தடையற்ற வர்த்தகத்தை ஊக்குவிப்பதற்காக பிரெட்டன்வுட்ஸ் அமைப்புகளில் ஒன்றாக 1948இல் சர்வதேச வர்த்தகத்திற்கான காப்பு வரி மற்றும் வர்த்தகம் தொடர்பான பொது ஒப்பந்தம் - ஜி.ஏ.டி.டி. (GATT) அமெரிக்கா உட்பட 22 நாடுகளின் ஒப்புதலுடன் உருவாக்கப்பட்டது. இதன் மூலம் சர்வதேச வர்த்தகங்களுக்குத் தடையாக உள்ள உலக நாடுகளின் காப்புவரிகளைக் குறைத்துத் திறந்த வர்த்தகத்தை ஊக்குவித்தது. 1994இல், 125 நாடுகள் ஜி.ஏ.டி.டி.(GATT)இல் இணைந்தன. ஜி.ஏ.டி.டி பணக்காரர்களின் அரங்கமாகவே செயல்பட்டது. ஆரம்பத்தில் வேளாண்சார் வர்த்தகம் அதன் ஒழுங்குமுறைக்குள் இல்லை. அமெரிக்கா தன் நாட்டு விவசாயத் துறையைப் பாதுகாத்து வளர்த்தெடுத்து 1980களில் வேளாண் உற்பத்தியைப் பன்மடங்கு பெருக்கிய பின்னரே விவசாயத் துறையையும் சர்வதேச வர்த்தக விதிமுறைகளுக்குள் கொண்டுவருவதற்கான பேச்சுவார்த்தைகள் 1986இல் உருகுவேவில் நிகழ்ந்த எட்டாவது சுற்றில் மேற்கொள்ளப்பட்டன.

உருகுவே சுற்றில் வேளாண்மை, சேவைகள் மற்றும் அறிவுசார் சொத்துரிமை என அனைத்தையும் கட்டுப்படுத்தவும், உறுப்பு நாடுகளிடையே வர்த்தக மோதல்களைத் தீர்ப்பதற்கான சட்ட அமைப்புப் பொறிமுறையைக் கொண்ட அதிக சக்திவாய்ந்த அமைப்பை ஏற்படுத்தவும் வர்த்தகம் தொடர்பான பொது ஒப்பந்தம் (ஜி.ஏ.டி.டி.) கலைக்கப்பட்டு மரகேஷ் ஒப்பந்தத்தின் மூலம் 1995இல் உலக வர்த்தக அமைப்பு உருவாக்கப்பட்டது. விவசாயம், சேவைகள் நிதி, தொலைத்தொடர்பு, தகவல் தொழில்நுட்பம், அறிவுசார் சொத்துரிமை, மின்னணு வர்த்தகம் என அனைத்தையுமே இது கட்டுப்படுத்துகிறது. ஒரு நவீன தாராளமய அமைப்பாக இது உலக அளவில் தாராளமயத்தையும் தடையற்ற வர்த்தகத்தையும் ஊக்குவிப்பதன் மூலம் உலக நாடுகளின் பொருளாதாரத்திலும், வர்த்தகத்திலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

சர்வதேச வர்த்தகத்திற்கான காப்புவரி மற்றும் வர்த்தகம் தொடர்பான பொது ஒப்பந்தத்தின் முகப்புரை “வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும், முழு வேலைவாய்ப்பை உறுதி செய்வதற்கும், உண்மையான வருவாயை அதிகரிப்பதற்கும் வர்த்தக மற்றும் பொருளாதார

முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்" என்று கூறுகிறது. உலக வர்த்தக அமைப்பை உருவாக்கிய மரகேஷ் ஒப்பந்தத்தில் இந்த அடிப்படை நோக்கங்களே வலுப்படுத்தப்பட்டன. ஆனால் அது நடைமுறையில் இவற்றுக்கு முற்றிலும் முரணாண விளைவுகளையே ஏற்படுத்தியுள்ளது.

164 உறுப்பு நாடுகளைக் கொண்டுள்ள உலக வர்த்தக அமைப்பின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்று பாகுபாடின்மை. ஆனால் உண்மையில் இது வளர்ந்த நாடுகளுக்குச் சாதகமான பாகுபாடின்மையாகவே உள்ளது. நாடுகளுக்கிடையிலான பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் கருத்தில் கொள்ளாது அனைத்து நாடுகளையும் ஒரே நெறிமுறைகளைக் கடைபிடிக்கப் பணிப்பது வளரும் நாடுகளை மிகவும் பாதிப்பதாகவும் வளர்ந்த நாடுகளுக்குச் சாதகமாகவும் அமைந்துள்ளது. குறைந்த வளர்ச்சியுடையதாகக் கருதப்படும் நாடுகளுக்கு மட்டுமே இதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. வளர்ந்த நாடுகள் அவை வளரும் போது பயன்படுத்திய வர்த்தக பாதுகாப்புக் கருவிகளைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகள் வளரும் நாடுகளுக்கு மறுக்கப்படுகின்றன. இது சமூக நீதிக்கு முற்றிலும் புறம்பாக இருப்பதுடன் வடக்கு, தெற்கு நாடுகளிடையே சமூகப் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை அதிகரித்துள்ளது.

'சுற்றுகள்' எனப்படும் பலதரப்பு பேச்சுவார்த்தைகளின் மூலம் உலக வர்த்தக அமைப்பு விதிகளில் மாற்றங்கள் செய்யப்படுகின்றன. உலக வர்த்தக அமைப்பின் உறுப்பு 9 ஒரு உறுப்பினருக்கு ஒரு வாக்கு என்று அனைத்து நாடுகளுக்கும் சமமான தகுநிலை அளிக்கிறது. ஆனால் வாக்கெடுப்பின் மூலம் முடிவுகள் எடுக்கப்படுவதில்லை, கலந்துரையாடல்களின் மூலம் அடையும் ஒருமித்த கருத்தின் அடிப்படையில் முடிவுகள் எடுக்கப்படுவதாகக் கூறப்பட்ட போதிலும் அதில் வளர்ந்த நாடுகளே ஆதிக்கம் செய்கின்றன. குறிப்பாக அமெரிக்கத் தலைமையே பேராதிக்கம் செலுத்தி வருகிறது. 'குவாட்' எனப்படும் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், கனடா ஆகிய நாடுகளின் அணிசேர்க்கையே முறைசாரா பச்சை அறைப் பேச்சுவார்த்தைகள் மூலம் அனைவர் சார்பாகவும் பல முடிவுகளை எடுக்கின்றன. உலக வர்த்தக அமைப்பின் செயலகம் அதிகாரமற்றதாக உள்ளது. வளர்ந்த நாடுகள் தங்களுக்குச் சாதகமான முறையில் சந்தைகளை விரிவாக்கவே உலக வர்த்தக அமைப்பைப் பயன்படுத்தி வருகின்றன. தங்களுக்கு சாதகமெனில் திறந்த வர்த்தகம், இல்லையேல் பாதுகாப்புவாதம் என்பதே அவர்கள் கடைப்பிடிக்கும்

நெறிமுறையாக உள்ளது. மற்ற உறுப்பு நாடுகளின் நியாயமான கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. அவை சரிசமமான முறையில் நடத்தப்படுவதில்லை. வளரும் நாடுகளும், ஏழை நாடுகளும் பிரதிநிதித்துவம் அளிக்கப்படாமல் ஓரங்கட்டப்பட்டுள்ளன. இதனால் நியாயமான வர்த்தகங்களுக்கான வாய்ப்பு முழுவதும் மூடப்பட்டு, வளரும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சி தடுக்கப்பட்டு, அவை வளர்ந்த நாடுகளைச் சார்ந்து இயங்கும் அரசியல் பொருளாதார அமைப்பு ஏற்படுத்தப்படுகிறது.

பிரிட்டானியக் காலனியாதிக்கத்தின் போது இந்தியாவில் ஏற்றுமதிக்காகவே செய்யப்பட்ட அவுரி, புகையிலைச் சாகுபடியால் உள்நாட்டு உணவு உற்பத்தி கடுமையாகப் பாதிக்கப்பட்டது. இந்தியாவிலிருந்து பருத்தி போன்ற மூலப் பொருட்களை மட்டும் ஏற்றுமதி செய்து கொண்டு இந்தியத் துணிகளுக்கு சந்தையை இழுத்து மூடி பிரிட்டானியத் துணிகளை இந்தியச் சந்தையில் குவித்து இந்தியாவின் நெசவுத் தொழிலும், பிற உள்நாட்டுத் தொழில்களும் அழிக்கப்பட்டன. இது காலனியாதிக்கத்துடன் முடிந்துவிடவில்லை. நவீன தாராளமயக் காலனியாதிக்கத்தால் இன்றும் மூன்றாம் உலக நாடுகள் பாதிக்கப்பட்டு வருகின்றன.

பல்-இழை (மல்டிஃபைபர்) ஒப்பந்தத்தின் மூலம், அமெரிக்காவும், ஐரோப்பிய ஒன்றியமும் தங்கள் உள்நாட்டு நெசவாடைத் தொழில்களைப் பாதுகாக்கும் விதமாக வளரும் நாடுகளிலிருந்து இறக்குமதியை வரம்பிட்டு கட்டுப்படுத்துகின்றன. வளரும் நாடுகளிலிருந்து இறக்குமதியைக் கட்டுப்படுத்தும் விதமாகக் காப்பு வரிகளைக் கொண்டும், காப்பு வரி அல்லாத தடைகளைக் (non-tariff barriers) கொண்டும், அளவுக் கட்டுப்பாடுகள், எதிர் நடவடிக்கைகள் போன்ற பிற பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கொண்டும் தடுக்கின்றன. இறக்குமதிப் பொருள்கள் சர்வதேச சுகாதாரத் தரக் கட்டுப்பாட்டு நடைமுறைகளின் (SPS) படி தயாரிக்கப்பட்டு சான்றிதழ் பெற்று , பல்வேறு கண்காணிப்புச் சோதனைகளையும், ஆய்வுகளையும் கடந்து வருமாறு கோரப்படுகிறது. இது சுகாதாரப் பாதுகாப்பு நடவடிக்கையாகக் கருதப்பட்டாலும் இதை வளர்ந்த நாடுகள் இறக்குமதியைத் தடுக்கவே பயன்படுத்துகின்றன. ஆனால் இதே சலுகை வளரும் நாடுகளுக்கு அளிக்கப்படுவதில்லை. வளரும் நாடுகள் தங்கள் விவசாயத் துறையையும் உள்நாட்டுத் தொழில்களையும் காப்பதற்காகக் காப்பு வரிகளை அதிகரித்தாலோ, பிற பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டாலோ அவற்றின் மீது உலக வர்த்தக அமைப்பில் வழக்கு

தொடரப்படுகிறது. உலக வர்த்தக அமைப்பின் விலையுயர்ந்த தீர்ப்பாயத்தின் நீதி நடைமுறைகளில் கலந்து கொள்வதற்கும், வழக்கு தொடர்ந்து தீர்வு பெறுவதற்கும் அதிகச் செலவு பிடிப்பதால் வளரும்-ஏழை நாடுகள் தங்கள் வர்த்தகப் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்காமல் தவிக்கின்றன.

வளரும் நாடுகள் தங்கள் உற்பத்தித் துறையை வளர்த்துப் பொருளாதார பன்முகத் தன்மை பெறுவதும் இதனால் தடுக்கப்படுகிறது. இத்தகைய தடையற்ற வர்த்தகத்தால் வளரும் நாடுகளின் இறக்குமதி உயர்ந்த அளவிற்கு ஏற்றுமதி அதிகரிக்காததால் வர்த்தகப் பற்றாக்குறையும் கடனும் அதிகமாவதற்கும் காரணமாகவுள்ளது.
1991-2020 காலகட்டத்தில் இந்தியா செய்த ஏற்றுமதியின் சராசரி வளர்ச்சி 9.6 சதவீதமாகவும், இறக்குமதியின் சராசரி வளர்ச்சி வீதம் 11 சதவீதமாகவும் இருப்பதால் வர்த்தகப் பற்றாக்குறையுடன் காணப்படுகிறது. 2001-02 முதல், இந்தியாவின் இறக்குமதி மதிப்பு ஏற்றுமதி மதிப்பை விடப் பெரும்பாலும் அதிகமாகவே உள்ளது.

அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் அரசுகளும் தங்களது ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்காக வழங்கும் ஏற்றுமதி மானியங்கள் வளரும் நாடுகளின் ஏற்றுமதியையும் போட்டியிடும் திறனையும் பாதிக்கின்றன. ஏற்றுமதி மானியத்தில் தயாரிக்கப்படும் வேளாண் சார் பொருட்களும் ஆடைகளும் மூன்றாம் உலக நாடுகளில் குவிக்கப்படுவதால் அவற்றுடன் போட்டியிட முடியாமல் வளரும் நாடுகளின் உள்நாட்டுத் தொழில்கள் பாதிக்கப்படுகின்றன. 2015இல் உலக வர்த்தக அமைப்பின் உறுப்பினர்கள் ஏற்றுமதி மானியங்களை ரத்து செய்ய ஒப்புக் கொண்ட போதும் அதை நாடுகள் கடைப்பிடிப்பதில்லை. மீன்பிடித் தொழிலுக்கான மானியங்களைக் குறைக்க வளர்ந்த நாடுகள் மறுக்கின்றன.

கேப்ரியல் ஃபெல்பர்மேயர் என்ற ஆஸ்திரியப் பொருளியலாளர் தமது ஆய்வறிக்கையில், 2009-2017 காலகட்டத்தில் வர்த்தகப் பாதுகாப்பு நடவடிக்கைகளுடன் ஒப்பிடும் போது, காப்பு வரியல்லாத வர்த்தகத் தடைகளின் பயன்பாடு படிப்படியாக அதிகரித்திருப்பதாகவும், 2010இல் 54 சதவீதமாக இருந்த காப்பு வரியல்லாத வர்த்தகத் தடைகளின் பயன்பாடு 2016இல் 61 சதவீதமாக அதிகரித்திருப்பதாகவும், உயர் வருவாய் கொண்ட நாடுகள் அதிக அளவில் காப்பு வரியல்லாத

வர்த்தகத் தடைகளைப் பயன்படுத்துவதாகவும் கூறியுள்ளார். இதில் உலக அளவில் 796 காப்பு வரியல்லாத வர்த்தகத் தடைகளை விதித்து அமெரிக்க ஐக்கிய நாடுகளே முதல் இடத்தில் உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

உலக வர்த்தக அமைப்பில் இணைந்ததால் தேச அரசுகளின் இறையாண்மை பறிக்கப்பட்டுள்ளது. தேச அரசுகளின் உணவுக் கொள்கை, விவசாயக் கொள்கை, பொருளாதாரக் கொள்கைகள் என அனைத்துமே அந்நாட்டு மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அல்லாமல் பன்னாட்டுத் தனியார் நிறுவனங்களின் லாப நோக்கங்களுக்காகவே இயற்றப்படுகின்றன. அரசு சமூகத் துறைகளுக்கும் விவசாயத் துறைக்கும் எவ்வளவு நிதி ஒதுக்க வேண்டும் என்பதும் வரம்பிடப்பட்டுள்ளது. வேளாண் துறையின் மொத்தப் பொருளாக்க மதிப்பில் ('ஜிடிபி') 10 சதவீதம் மட்டுமே நிதிச் சலுகைகள் வழங்க வேண்டும் என்று நிர்பந்திக்கப்பட்டுள்ளது. தாராளமயக் கொள்கைகளால் வளரும் நாடுகளில் அரசானது விவசாயத்திற்கு நிதி ஒதுக்கீடுகளைக் கணிசமாகக் குறைத்துள்ளதால் வேளாண் துறையை மேம்படுத்துவதற்கான முதலீடுகள் செய்யப்படாமல் விவசாய சேவைகளும், அதற்கான உள்கட்டுமான வசதிகளும் விரிவுபடுத்தப்படாமல் உள்ளன. அரசு அளித்து வந்த குறைந்தபட்ச விலை ஆதரவு, விலைக் கட்டுப்பாடு ஆகியவை நீக்கப்பட்டுத் தனியார் நிறுவனங்கள் வளர்வதற்கான சூழலே ஏற்படுத்தப்படுவதால் வளரும் நாடுகளின் உணவுப் பாதுகாப்பும், உணவுத் தன்னிறைவும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

வளரும் நாடுகளுக்கான வர்த்தக வாய்ப்புகளை மேம்படுத்தும் நோக்கத்துடன் 2001ஆம் ஆண்டில் 'தோஹா சுற்று' தொடங்கப்பட்டது. ஆனால் 2008ஆம் ஆண்டிலிருந்து அதற்கான பேச்சுவார்த்தையில் தடங்கல் ஏற்பட்டு எந்த முன்னேற்றமும் ஏற்படாமல் நிறுத்தப்பட்டுள்ளது.

உலக வர்த்தக அமைப்பு பெரிய பன்னாட்டு நிறுவனங்களுக்கு ஆதரவளிப்பதாகவும், சிறிய நிறுவனங்களின் வாய்ப்புகளைப் பறிப்பதாகவும் உள்ளது. உலக வர்த்தக நிறுவனம் எப்படி வளர்ந்த நாடுகளுக்கும் பன்னாட்டு நிறுவனங்களுக்கும் சாதகமாக நடந்து கொள்கின்றன என்பதற்கு வாழைப்பழப் போர்கள் ஒரு சிறந்த உதாரணமாக அறியப்படுகின்றன. 1993இல் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு லத்தீன் அமெரிக்க நாடுகளின் சிறு உற்பத்தியாளர்களிடமிருந்து

வாழைப் பழங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. இதை எதிர்த்து அமெரிக்க, லத்தீன் அமெரிக்கப் பன்னாட்டு நிறுவனங்கள் உலக வர்த்தக அமைப்பில் வழக்கு தொடர்ந்தன. இறுதித் தீர்ப்பு பன்னாட்டு நிறுவனங்களுக்கே சாதகமாக அமைந்தது.

பன்னாட்டு நிறுவனங்கள் வளரும், ஏழை நாடுகளின் விவசாயிகளிடம் தேயிலை, காபி, மூலப்பொருட்கள் ஆகியவற்றை அடிமட்ட விலையில் வாங்கி அதை அதிக விலையில் மீண்டும் அதே நாடுகளுக்கே ஏற்றுமதி செய்கின்றன. கட்டுப்படுத்தப்படாத வேளாண் இறக்குமதியால் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்றிருந்த ஆசிய, ஆப்பிரிக்க நாடுகள் உணவுத் தன்னிறைவையும் உணவு பாதுகாப்பையும் இழந்துள்ளன. இறக்குமதியினால் உள்நாட்டு விவசாயப் பொருட்களின் விலை வீழ்ச்சியடைவதால் வருவாய்க் குறைவால் விவசாயிகளும் விவசாயக் கூலிகளும் பாதிக்கப்பட்டுள்ளனர். பெருமளவிலான மக்கள் பட்டினி நிலைக்குத் தள்ளப்படுவதுடன், உணவுப் பொருட்களுக்கு இறக்குமதியையே நம்ப வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

. உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் அருகிலுள்ள சந்தையிலேயே விற்கப்படுமானால் சரக்குகள் மேற்கொள்ளும் தேவையில்லாத பயணங்கள், கூடுதல் செலவுகளும் குறைக்கப்படுவதுடன் சுற்றுச்சூழல் மாசுபாட்டையும் கட்டுப்படுத்த முடியும். உலக வர்த்தக அமைப்பு சர்வதேச வர்த்தகத்தை அதிகப்படுத்துவதை மட்டுமே நோக்கமாகக் கொண்டுள்ளதே தவிர வர்த்தகத்தில் சூழல் மாசுபாட்டை ஒழுங்குபடுத்தும் எந்த நெறிமுறைகளையும் ஏற்படுத்தவில்லை. இதனால் சூழலியல் பிரச்சனைகளை மேலும் அதிகமாக்கவே காரணமாக உள்ளது.

<u>வர்த்தகம் தொடர்பான முதலீட்டு நெறிகள் (TRIMS):</u>

1999இல் நடைமுறைப்படுத்தப்பட்ட இந்த நெறிமுறையானது பன்னாட்டு நிறுவனங்களுக்குச் சார்பாக உள்நாட்டு நிறுவனங்களுக்கு அளிக்கப்படும் முன்னுரிமைகளைக் கட்டுப்படுத்துகிறது. இதன்படி அரசு பன்னாட்டு நிறுவனங்களை உள்நாட்டு நிறுவனங்கள் போலவே கருத வேண்டும், அவ்வாறல்லாமல் உள்நாட்டு நிறுவனங்களுக்கு முன்னுரிமை அளிக்குமானால் அது நெறிமீறலாகக் கருதப்படும். இவ்வாறு இந்த நெறிமுறை சர்வதேச நிறுவனங்கள் வெளிநாட்டுச் சந்தைகளில் எளிதாகச் செயல்பட உதவுகிறது. பன்னாட்டு நிறுவனங்கள், உள்நாட்டுப்

பொருட்களை கொள்முதல் செய்வதற்கான குறைந்தபட்ச நிபந்தனை, அவற்றின் இறக்குமதிகளுக்கான கட்டுப்பாடுகள், தொழில்நுட்பப் பகிர்வு ஆகியவை தடை செய்யப்பட்டுள்ளன. இது வளரும் நாடுகளின் இறையாண்மையையும் வளர்ச்சியையும் கடுமையாக பாதிக்கிறது. இந்தியா, பாகிஸ்தான், உகாண்டா போன்ற பல்வேறு வளரும் நாடுகள் சியாட்டில் பேச்சுவார்த்தையில் வளரும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சியைப் பாதிக்காதவாறு இதை மாற்றியமைக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தன.

வர்த்தகம் சார்ந்த அறிவுசார் சொத்துரிமைகள் (TRIPS):

பெரும்பாலான மூன்றாம் உலக நாடுகள் கடந்த காலத்தில் விவசாயம், மருந்துகள், பிற அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் செயல்முறைகளுக்குத் தங்கள் தேசியக் காப்புரிமைச் சட்டங்களிலிருந்து விலக்கு அளித்திருந்தன. ஆனால் டிரிப்ஸ் நெறிமுறை இந்நாடுகளை மேற்கத்திய நாடுகளில் கடைப்பிடிக்கப்படும் அறிவுசார் சொத்துரிமைகளுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கான சட்டங்களை இயற்ற நிர்பந்திக்கிறது. இது வளரும் நாடுகளின் தொழில்நுட்ப வளர்ச்சியைக் கடுமையாகப் பாதித்துள்ளது. இதனால் உலகின் பெரும்பாலான காப்புரிமைகளை வைத்திருக்கும் பன்னாட்டு நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய உரிமக் கட்டணங்கள் அதிகரித்துள்ளன.

அறிவுச் சொத்துரிமையால் போட்டி கட்டுப்படுத்தப்படுவதால், முற்றுரிமை பெற்ற பன்னாட்டு நிறுவனங்கள் தங்கள் தயாரிப்புகளின் விலையை வரம்பின்றி உயர்த்தவும் இந்த நெறிமுறை துணை புரிகிறது. மருந்து நிறுவனங்களின் அறிவுசார் சொத்துரிமைகள் வளரும் ஏழை நாடுகள் குறைந்த விலையில் அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் பெறுவதைத் தடுக்கிறது. கோவிட்-19 தடுப்பு மருந்து உலக மக்கள் அனைவரும் இலவசமாக பெறுவதற்காக இந்தியா, ஆப்பிரிக்கா போன்ற வளரும் நாடுகள் கொண்டுவந்த முன்னெடுப்பும் அறிவுசார் சொத்துரிமையின் மூலம் பன்னாட்டு நிறுவனங்கள் லாபம் பெறுவதற்காக தடுக்கப்பட்டுள்ளது.

டிரிப்ஸ் ஒப்பந்தம் நுண்ணுயிரிகள் மற்றும் மரபணு மாற்றப் பொருட்கள் போன்ற உயிர் வடிவங்களுக்கும் காப்புரிமையை நீட்டித்துள்ளது. இதுவே பன்னாட்டு உயிரித் தொழில்நுட்ப நிறுவனங்கள் நுண்ணுயிர்கள், தாவரங்கள், விதைகள் அனைத்தையுமே வணிகமயமாக்குவதற்கு

காரணமாக உள்ளது. பன்னாட்டு நிறுவனங்களின் மரபணு மாற்றப்பட்ட விதைகளும், தாவரங்களும் விவசாயத் துறையையும், உணவுப் பாதுகாப்பையும் சீரழித்துப் பல உடல்நலக் கோளாறுகளையும் ஏற்படுத்தியுள்ளது. மரபணு மாற்ற விதைகள் விவசாயச் செலவுகளை அதிகரிக்கின்றன, இவற்றால் நோய்கள் மற்றும் பூச்சிகளின் தாக்குதல் அதிகரிப்பதால், உரம், பூச்சிக் கொல்லிகளின் பயன்பாட்டையும் அதிகரிக்கிறது. ஒற்றைப் பயிர்முறையை ஊக்குவித்து சூழலின் பன்மைத்துவத்தையும், மரபணுத் தூய்மையையும் அச்சுறுத்துகிறது.

வளரும் நாடுகளில் உள்ள பாரம்பரிய இயற்கைச் செல்வங்களுக்கு முற்றுரிமை பெறும் தொடர் முயற்சியில் பன்னாட்டு நிறுவனங்கள் ஈடுபட்டு வருகின்றன. 1995இல், அமெரிக்கா மிஸ்ஸிசிப்பி பல்கலைக்கழக மருத்துவ மையத்திற்கு மஞ்சள் காப்புரிமையை வழங்கியது. பிறகு இந்திய அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி மையம் (சி.எஸ்.ஐ.ஆர்.) காப்புரிமையை மீட்டெடுத்தது. அமெரிக்காவைச் சேர்ந்த டபியுள்யூ. ஆர். கிரேஸ் என்ற நிறுவனம் வேம்பின் மீது காப்புரிமை பெற்றது. அதை மீட்க, டெல்லியில் வந்தனா சிவா ஆராய்ச்சி நிறுவனம் 1995இல் வழக்கு தொடுத்தது. இவ்வழக்கு 2000இல் விசாரணைக்கு வந்த போது இந்தியாவிலிருந்து நம்மாழ்வார், வந்தனா சிவா உட்பட ஐந்து பேர் குழு ஜெனிவா சென்று அதை மீட்டு வந்தது. 1997இல் அமெரிக்காவின் ரைஸ்டெக் நிறுவனம் பாஸ்மதி அரிசிக்குக் காப்புரிமை பெற்றது. அதை எதிர்த்து வந்தனா சிவா மேற்கொண்ட தொடர் போராட்டங்களால் பிறகு மீட்கப்பட்டது. கென்யாவின் பாரம்பரியத் துணியான கிகொயிக்கும், கியொன்டொ என்ற கைவேலைபாட்டுக் கூடைக்கும், நியடிடி, மரிம்பா ஆகிய இசைக் கருவிகளுக்கும், ஐரோப்பியத் தனியார் நிறுவனங்கள் காப்புரிமை பெற்றுள்ளன.

அறிவுச் சொத்துரிமை ஒப்பந்தம் வாய் வழி அறிவை அங்கீகரிக்காததால்

பூர்வகுடி சமூகங்களின் பகிரப்பட்ட அறிவுக்குப் பன்னாட்டு நிறுவனங்கள் காப்புரிமை பெற அனுமதிக்கிறது. பன்னாட்டு நிறுவனங்கள் பல வளரும் நாடுகளின் பாரம்பரியச் சின்னங்களும், தொழில் நுட்ப அறிவையும், இயற்கைச் செல்வங்களையும், தங்கள் அறிவுசார் சொத்துரிமைகளாக்கியுள்ளன. தங்களது பாரம்பரியத் தொழில்களை, பொருட்களைப் பயன்படுத்த வேண்டுமானால் இப்படிப்பட்ட தனியார் நிறுவனங்களுக்கு மக்கள் உரிமக்கட்டணம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஈக்வடாரில் உள்ள ஷுவார் பழங்குடி மக்களிடமிருந்து

578 மூலிகைத் தாவரங்களைப் பற்றிய பாரம்பரிய அறிவு திருடப்பட்டு சர்வதேச வளர்ச்சிக்கான அமெரிக்க ஐக்கிய முகமை (USAID) மூலமாக தேசியச் சுகாதார நிறுவனத்திற்கும் (NIH) அங்கிருந்து தேசியப் புற்றுநோய் நிறுவனத்திற்கும் (என்சிஐ) அனுப்பப்பட்டுள்ளது. பொதுமக்களுக்கு அனுமதி மறுக்கப்பட்ட மூடிய பதிவேட்டில் இத்தகவல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன, பொதுவாக இத்தகவல்களைப் பெரிய மருந்து நிறுவனங்களே பெற முடியும். தண்ணீர் உள்ளிட்ட அனைத்து இயற்கை வளங்களையும் தனியுடைமையாக்கி, அதிக விலைக்கு விற்பதில் லாபம் பெறுகின்றன பன்னாட்டு நிறுவனங்கள். இயற்கை வளம் கொண்ட நாடுகளை வறட்சி ஏற்படும் நிலைக்குத் தள்ளி அந்த வறட்சியிலும் லாபம் பெறுகின்றன இப்பன்னாட்டு நிறுவனங்கள்.

<u>சேவைத் துறை வர்த்தகத்திற்கான பொது ஒப்பந்தம் (GATS):</u>

சேவைத் துறைகளின் தடையற்ற வர்த்தகத்தை ஊக்குவிக்க ஏற்படுத்தப்பட்ட இந்த ஒப்பந்தமே கல்வி, சுகாதாரம், சுற்றுச்சூழல், நிதி, தொலைத்தொடர்பு, பொறியியல், கட்டுமானம், கலாசாரம், விளையாட்டு, பொழுதுபோக்கு, போக்குவரத்து, சுற்றுலா, பயணம், வணிகம், விநியோகம் என அனைத்து சேவைத் துறைகளையும் வணிகமயமாக்குதை ஊக்குவிக்கிறது. இது தேசியச் சட்டங்களையும், நீதித்துறையின் அதிகாரத்தையும் நீர்த்துப் போகச் செய்து அனைத்தையும் வர்த்தகமாக்குவதற்குக் காரணமாகிறது.

ஐக்கிய நாடுகளின் வர்த்தகம் மற்றும் வளர்ச்சிக்கான அமைப்பு சார்பில் வெளியிடப்பட்ட ஆய்வறிக்கை இந்தியாவில் ஏற்றுமதி, இறக்குமதி இரண்டுமே திறனுள்ள(Skilled) மற்றும் திறன் குறைந்த (unskilled) ஊழியர்களுக்கிடையிலான ஊதிய ஏற்றத்தாழ்வுகளை அதிகரிக்கின்றன. விவசாயப் பொருட்களின் இறக்குமதி விவசாயத் தொழிலாளர்களின் கூலி விகிதங்களைக் குறைக்கிறது என்றும் 2003-04 முதல் 2006-07 வரையிலான காலத்தில் ஏற்றுமதி அதிகரிப்பால் பெறப்பட்ட மொத்த வருவாயில் 1.6% மட்டுமே வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள ஏழைகளை அடைந்தது என்றும் 70 சதவீதத்துக்கு மேல் அதிக வருமானம் பெற்றவர்களையே அடைந்தது என்றும் கூறுகிறது.

<u>வரலாற்றுப் படிப்பினை:</u>

கொரியப் பொருளியலாளர் ஹோ ஜூன் சாங்கின் “ஏணியை எட்டி உதை” என்ற நூலில் 'பணக்கார நாடுகள் உண்மையில் எவ்வாறு பணக்காரர்களாக மாறின?' என்ற கேள்வியை

எழுப்புகிறார். பணக்கார நாடுகள் வளரும் நாடுகளுக்கு இன்று பரிந்துரைக்கும் கொள்கைகளையும், நிறுவன அமைப்புகளையும் அன்று கடைப்பிடித்திருந்தால் அவர்கள் இப்பொழுதுள்ள நிலைக்கு ஒருபோதும் வந்திருக்க முடியாது எனக் கூறுகிறார். இன்று அவர்கள் எதையெல்லாம் மோசமான வர்த்தகம், மோசமான தொழிற்கொள்கை என்று விமர்சிக்கிறார்களோ அதைத்தான் அன்று --- 19ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலும், 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியிலும் --- தங்கள் வளர்ச்சிக்காகப் பயன்படுத்திக் கொண்டார்கள். வளர்ந்த நாடுகள் இளந்தொழில் பாதுகாப்புவாதக் கொள்கையையே (infant industry Protection) கடைப்பிடித்தார்கள். இவ்வாறு நல்ல கொள்கைகள், நல்ல நிறுவனங்கள் என்ற போர்வையில் அவர்கள் அளிக்கும் பரிந்துரைகளானவை வளரும் நாடுகளின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போட்டு அவற்றின் வளர்ச்சியை மேலும் கடினமாக்கியுள்ளன என்றும் குறிப்பிடுகிறார்.

வளரும் நாடுகளில் செயல்படுத்தக் கோரப்படும் சில நிறுவனங்கள் அவற்றின் வளர்ச்சிநிலைக்குப் பொருத்தமற்றவையாகவும், தீங்கு விளைவிப்பவையாகவும், அதிகச் செலவை ஏற்படுத்தக் கூடியவையாகவும் உள்ளன என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஜெர்மன் பொருளாதார நிபுணர் ஃபிரட்ரிக் லிஸ்ட் இளந்தொழில் பாதுகாப்புவாதத்தின் தந்தையாக அறியப்படுகிறார். அவர் பிரிட்டன்தான் உண்மையில் பாதுகாப்புவாதக் கலையில் தேர்ச்சியடைந்த முதல் நாடு என்று குறிப்பிட்டுள்ளார். பெரும்பாலான வளர்ந்த நாடுகள் பாதுகாப்புவாதத்தின் மூலமே செழிப்படைந்தன என்றும், இதை நம்பாதவர்கள் முதலில் பிரிட்டனின் தொழில் துறை வரலாற்றைப் படிக்க வேண்டும் என்றும் குறிப்பிடுகிறார். பிரிட்டனைத் தொடர்ந்து அமெரிக்காவும் மும்முரமாக இளந்தொழில் பாதுகாப்புவாதத்தைப் பயன்படுத்தித் தன் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்திக் கொண்டது. இரண்டாம் உலகப் போருக்குப் பின் தனக்கு இணையான போட்டியாளர் இல்லை என்பதை உறுதி செய்த பின்னரே அமெரிக்காவும் பிரிட்டனைப் போல் தடையற்ற வர்த்தகத்தை உயர்த்திப் பிடித்தது. தங்களது உயர்வுக்கு மட்டும் ஏணிப் படிகளாக அதனைப் பயன்படுத்திக் கொண்டு பின் மற்றவர்களுக்குக் கிடைக்காத வண்ணம் ஏணியை எட்டி உதைத்து விட்டன என்ற அவரது 'kicking away the ladder' விமர்சனத்தை வரலாற்று நிகழ்வுகள் உறுதிப்படுத்துவதாகவும் சாங்க் குறிப்பிடுகிறார்.

வெளிநாட்டு தொழில்நுட்பங்களை கையகப்படுத்துதல் அன்று சட்டப்பூர்வமாகவும், சட்டவிரோதமாகவும் செய்யப்பட்டது என்று சாங்க் குறிப்பிடுகிறார். சட்டப்பூர்வமாக தொழில்

நுட்பப் பயிற்சிபெறுவதற்கான சுற்றுப்பயணங்களை ஆதரித்து நிதியளிக்கப்பட்டன. சட்டவிரோத நடவடிக்கைகளின் மூலம் உளவுவேலைகளாலும், தடைசெய்யப்பட்ட இயந்திரங்களை கடத்தியும் வெளிநாட்டு காப்புரிமைகளை அங்கீகரித்த மறுப்பதன் மூலமும் வெளிநாட்டுத் தொழில் நுட்பம் கைவரப்பட்டது என்றும் உள்நாட்டுத் தொழில்நுட்பத்தை மேம்படுத்த அறிவியல் ஆய்வுகளுக்கு நிதி ஆதரவு அளிக்கப்பட்டதாகவும் குறிப்பிடுகிறார்.

பிரிட்டன்:

பிரிட்டன் தொழில் நுட்பங்களை பிறருக்கு கிடைக்காதவாறு தடை செய்ய திறனுள்ள தொழிலாளர்களின் வெளியேற்றத்தையும், தொழில் நுட்ப உபகரணங்களின் ஏற்றுமதியையும் கட்டுப்படுத்தியது. அதே சமயம் வளர்ச்சி குன்றிய நாடுகள் சந்தையை முற்றிலும் திறக்க வற்புறுத்தியது.15ஆம் நூற்றாண்டிலிருந்து இறக்குமதி பதிலீட்டுக் கொள்கையையும் கடைபிடித்து, கம்பளித் தொழில் வளர்ச்சியை பாதுகாத்தது.18ஆம் நூற்றாண்டில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்களின் மூலம் உற்பத்தித்துறையில் வளர்ச்சியை ஏற்படுத்தியது. மூலப்பொருட்கள்,இடுபொருட்களுக்கான இறக்குமதி வரியை கிட்டத்தட்ட முற்றிலுமாக நீக்கியதுடன், உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதி ஊக்குவிக்கப்பட்டு, ஏற்றுமதி சார்ந்த இறக்குமதி வரிகள் திரும்பப்பெறப்பட்டன உற்பத்திப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கான காப்புவரி உயர்த்தப்பட்டது. ஆனால் உற்பத்திப் பொருட்களுக்கான ஏற்றுமதி வரிகள் முற்றிலுமாக குறைக்கப்பட்டு ஏற்றுமதிக்கு மானியங்களையும் வழங்கியுள்ளது.

பிற காலனி நாடுகளிலிருந்து வரும் சிறந்த உற்பத்திப்பொருட்கள் தங்கள் நாட்டின் தொழில்வளர்ச்சியை பாதிக்கும் என்று அவற்றின் இறக்குமதியை பிரிட்டன் தடை செய்தது, இதனால் அயர்லாந்தின் கம்பளித்தொழிலை நசிவுற்றது.1700ல் இந்திய பருத்தித்துணிகள் இறக்குமதிக்கு தடை விதித்து இந்தியாவின் நெசவுத் தொழிலை அழித்தது. பிரிட்டனிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்கள் இந்தியச் சந்தைகளில் குவிக்கப்பட்டன. பிரிட்டனின் பொருளாதாரக் கொள்கைகள் அரசால் தீர்மானிக்கப்பட்டு அரசின் ஒழுங்குமுறையின் மூலம் நடைமுறைபடுத்தப்பட்டனவே தவிர சந்தையின் மாயக் கரங்களால் ஒழுங்கமைக்கப்படவில்லை. பிரிட்டனின் தடையற்ற வர்த்தக ஆட்சி நீண்ட காலம் நீடிக்கவில்லை. 1870களில் உற்பத்தித் துறையில் தன் பொருளாதார மேலாண்மையை இழந்த பின் பிரிட்டன் இருபதாம் நூற்றாண்டின்

ஆரம்பத்தில் 1932இல் காப்பு வரிகளை அதிக அளவில் விதித்துள்ளது.

<u>அமெரிக்கா:</u>

அமெரிக்காவை பால் பைரோச் நவீனப் பாதுகாப்புவாதத்தின் 'தாய்நாடாகவும், கோட்டையாகவும்' அழைத்துள்ளார். அமெரிக்காவின் தொழில்துறைகளை அதிகம் கொண்ட வடபகுதிகள் தங்கள் வளர்ச்சியைப் பாதுகாக்க காப்புவரிகளை ஆதரித்தன. ஆனால் விவசாயம் சார்ந்த தென் பகுதிகள் காப்புவரிகளை எதிர்த்தன, இந்தப் பொருளாதார முரண்பாடுகளும், அடிமைப் பிரச்சனைகளுமே உள்நாட்டுப் போர் வெடிக்கக் காரணமாயின. உள்நாட்டுப் போரை வெல்வதற்கான மூலோபாய நடவடிக்கையாகவே அடிமை விடுதலை அமைந்ததே ஒழிய தார்மீக அடிப்படையில் அல்ல என்று சாங்க் குறிப்பிடுகிறார்.

1929 பெரும் மந்தத்தைத் தொடர்ந்து 1930இல் அமெரிக்காவில் ஸ்மூட்-ஹவ்லி காப்புவரிச் சட்டம் மூலம் தொழில்துறைக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டது. இரண்டாம் உலகப் போருக்குப் பின் அமெரிக்கா பொருளாதார மேலாதிக்கம் அடைந்த பிறகுதான் தாராளமயக் கொள்கைகளைப் பின்பற்றித் தடையற்ற வர்த்தகத்தை ஆதரித்ததே ஒழிய அதற்கு முன்னர் அல்ல.

பிரிட்டன் காப்பு வரிகளை நீக்கித் தடையற்ற வர்த்தகத்தை 1860 முதல் 1932 வரை கடைப்பிடித்தது போல் அமெரிக்கா ஒருபோதும் கடைபிடிக்கவில்லை. மறைமுகமான பாதுகாப்புவாத நடவடிக்கைகளைத் தீவிரமாகக் கடைபிடிக்கிறது என்றும் அவர் குறிப்பிடுகிறார்.

அமெரிக்கா உட்படப் பத்து நாடுகளின் தரவுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் 1875-1914 பொற்காலத்தில் காப்புவரி விகிதங்கள் பொருளாதார வளர்ச்சியுடன் சாதகமான தொடர்பு கொண்டிருந்ததாக ஓ'ரூர்கே கண்டறிந்துள்ளார்.

ஆப்ரகாம் லிங்கனின் பொருளாதார ஆலோசகரும் மார்க்சு, எங்கெல்சால் மதிக்கப்பட்ட அமெரிக்கப் பொருளியலாளருமான ஹென்றி கேரி அமெரிக்காவின் வளர்ச்சிக்கான முதலாளித்துவ அமைப்பானது அரசின் தலையீடு, காப்புவரிப் பாதுகாப்பின் மூலம் உற்பத்தி மற்றும் தேசியத் தன்னிறைவை ஊக்குவிப்பதை அடிப்படையாகக் கொண்டிருப்பதாகவே

குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகள் மட்டுமல்லாது ஃபிரான்ஸ், ஜப்பான், சுவிட்சர்லாந்து, ஸ்வீடன், பெல்ஜியம் ஆகிய அனைத்து வளர்ந்த நாடுகளுமே இத்தகைய பாதுகாப்புவாதக் கொள்கைகளைப் பயன்படுத்தியே வளர்ச்சியடைந்துள்ளன என்பதையும் குறிப்பிட வேண்டும். ஒரு தொழில்துறை வளர்ச்சியடைவதற்கு முன்பே சர்வதேசச் சந்தையில் போட்டியிட வைப்பது ஒரு குழந்தையைப் போர்க் களத்திற்கு அனுப்புவதற்கு ஒப்பானதே. வளரும் நாடுகளின் அரசுகள் இளந்தொழில் பாதுகாப்பு கொள்கையை கடைப்பிடித்துத் தங்கள் தொழில் துறைகளை வளர்த்தெடுப்பதற்குப் பாதுகாப்பளிக்க வேண்டும். இறக்குமதி பதிலீட்டுத் தொழில்மயமாக்க (ISI) முறையை மேம்படுத்த வேண்டும்.

18ஆம் நூற்றாண்டிலும், 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் தங்கள் பொருளாதார வளர்ச்சியை ஆரம்பித்த பிரிட்டன், அமெரிக்கா, ஜெர்மனி போன்ற நாடுகளை நவீன தாராளமயக் கொள்கைகளையும், அமைப்பு மாற்றத் திட்டங்களான (SAP) சிக்கன நடவடிக்கைகளையும் நடைமுறைபடுத்துமாறு சர்வதேச நிதியமோ, உலக வங்கியோ நிர்பந்திக்கவில்லை. ஏனென்றால் சர்வதேச நிதியம், உலக வங்கி, வர்த்தக அமைப்பு ஆகியவை அப்போது உருவாக்கப்படவே இல்லை. அந்தக் காலகட்டத்தில் அறிவுசார் சொத்துரிமை (TRIPS), வர்த்தகம் சார்ந்த முதலீட்டு நெறிகள் (TRIMS), சேவை ஒப்பந்தங்கள் (GATS), தடையற்ற வர்த்தகம் ஆகியவற்றின் மூலம் கட்டுப்படுத்தி உலகவர்த்தக அமைப்பு இந்நாடுகளின் வளர்ச்சியை தடுக்கவில்லை. இந்நாடுகள் அன்று பாதுகாப்புவாதத்தின் மூலம் தங்கள் தொழில்களைப் பாதுகாத்துப் பொருளாதார வளர்ச்சியடைந்துள்ளன. ஆனால் அதே வாய்ப்புகளை வளரும் நாடுகளுக்கு அளிக்காமல் தடை செய்கின்றன. இந்த வரலாறு மறக்கப்பட்டும் மறுக்கப்பட்டும் உள்ளது. வளர்ந்த நாடுகளுக்கும், பன்னாட்டு நிறுவனங்களுக்குமே சாதகமாக செயல்படும் நவீன தாராளமய அமைப்புகளான உலக வர்த்தக அமைப்பையும், சர்வதேச நாணய நிதியத்தையும் புறக்கணித்து வரலாற்றுப் படிப்பினையுடன் ஒளித்துவைக்கப்பட்ட ஏணிப் படிகளைப் பற்றி உயர வேண்டியதே வளரும் நாடுகளின் முன்னுள்ள வரலாற்றுப் பணி!.

(தொடரும்)

# சூழலியல் வகுப்பு - 3

**சமந்தா**

## ஆறாம் பேரழிவைத் தடுப்போம்

புவி தோன்றிய காலத்தில் இருந்தே காலநிலை பல்வேறு விதமான மாற்றங்களுக்குட்பட்டு வருகிறது. காலநிலையில் தொடர்ந்த படிப்படியான பல மாற்றங்களும் திடீர் மாற்றங்களும் ஏற்பட்டுள்ளன. ஆனால் அவை யாவும் இயல்பாக நிகழ்ந்தனவே தவிர ஒரு குறிப்பிட்ட உயிரினத்தின் தாக்கத்தால் ஏற்பட்டவை அல்ல. அவை மனிதனின் தாக்கமில்லாமல் வேறு பல்வகைக் காரணங்களால் நிகழ்ந்தவை. வேறு எந்த விலங்கினமும் அதற்கு முழுமுதற் காரணமாக இருக்கவில்லை. ஆனால் மனித சமூகம் நாகரிகம் அடைந்த பின்னர், குறிப்பாக பொ.ஊ.பி. 1850க்கு பிறகு தொழில்மயமாக்கம், போக்குவரத்து, நகரமயமாக்கம் ஆகியவற்றால் தூண்டப்பட்ட காலநிலை மாற்றத்திற்கு முழுமுதற்காரணமாகப் பொறுப்பேற்க வேண்டியது மனித சமூகமே. புவியின் காலநிலையை மனித நடவடிக்கைகளுக்கு முன் என்றும், மனித நடவடிக்கைகளுக்கு பின் என்றும் பிரித்துப் பார்க்க வேண்டியது அவசியம். தூண்டப்பட்ட காலநிலை மாற்றத்தை அதற்கு முன் ஏற்பட்ட காலநிலை மாற்றத்தைக் காட்டிலும் அதிகத் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதால் முன்னதைப் பின்னதற்கு நிகராகக் கருத இயலாது. காலநிலை மாற்றம் என்பது புவி தோன்றியதிலிருந்தேதான் இருந்து வருகிறதே என்று, மனிதரால் தூண்டப்பட்ட காலநிலை மாற்றத்தைப் பொருட்படுத்தாமல் இருக்கலாமா? அப்படிச் செய்வோமானால் அது தற்கொலைக்கு ஒப்பாகும். நாம் எப்படியிருந்தாலும் ஒரு நாள் இறக்கத் தான் போகிறோம், அதற்கு இப்பொழுதே இறந்தால் என்ன எனத் தற்கொலை செய்வதற்கு ஒப்பாகும். உலகின் மிகப்பெரும் ஐந்து பேரழிவுகள் பல லட்சக்கணக்கான ஆண்டுகளில் ஏற்பட்டவை. ஆனால் மனித சமூகம் வெறும் 200 ஆண்டுகளிலேயே ஒரு பேரழிவுக்கான சூழலை ஏற்படுத்தியுள்ளது. இப்பொழுது நாம் ஆறாவது பேரழிவை எதிர்நோக்க வேண்டிய சூழலில் உள்ளோம். இன்று கொள்ளை நோய்க் காலத்திலும் வாழ்ந்து வருகிறோம், ஒன்றோடு ஒன்று தொடர்புடைய பல சுற்றுச்சூழல் பிரச்சனைகளை எதிர்நோக்குகிறோம். பல பிரச்சனைகளைத் தீர்க்கக் கூடிய ஒரே தீர்வும் இருக்கிறது. தீர்வுகளை அறிந்திருந்தும் ஆறாவது பேரழிவிற்கு ஆறறிவுடைய மனித இனம் தான் காரணமாக இருக்கப் போகிறது என்பது வெட்கக்கேடு என்பதுடன், அதைத் தடுக்காமல் செயலின்மைக்குச் சாக்குப் போக்கு

சொல்வது பொறுப்பற்ற அறிவின்மையின் உச்சக்கட்டமே.

. உலகில் இதுவரை தோன்றியுள்ள ஒட்டு மொத்த உயிரினங்களின் உயிர்ப் பன்மையத்தைக் கருத்தில் கொண்டால், இன்று உலகில் உள்ள உயிரினங்கள் அதில் 2 சதவீதம் மட்டுமே. அந்தளவுக்குப் பன்மைத்துவமிக்க பல்வேறு வகையான உயிரினங்கள் உலகில் வாழ்ந்துள்ளன. உலக உயிரினங்களில் இது வரை விஞ்ஞானிகளால் கண்டறியப்பட்டு வகைப்படுத்தப்பட்ட மொத்த சிற்றினங்களின் எண்ணிக்கை 2 மில்லியன். அதாவது 20 லட்சம் வகையான சிற்றினங்கள் கண்டறியப்பட்டுள்ளன. (உயிரினங்கள் பேரினம் என்றும் சிற்றினம் என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. தங்களுக்குள்ளே இனப் பெருக்கம் செய்யும் விலங்குகளின் கூட்டத்தைச் சிற்றினம் என்று குறிப்பிடலாம்).

உலகில் இன்னும் கண்டறியப்பட வேண்டிய பல்வேறு உயிரினங்கள் உள்ளன. பெருமளவு உயிரினங்கள் கடலில்தான் உள்ளன. பல உயிரினங்கள் அவை கண்டுபிடிக்கப்பட்டு வகைப்படுத்தப்படுவதற்கு முன்னே உணவுத்தட்டுக்கு வருவதாக சூழலியாளர்கள் கவலை தெரிவித்துள்ளார்கள். அவற்றைக் கண்டறிதலும், வகைப்படுத்துதலும் முடிவில்லாது என்றென்றும் தொடர்ந்து செய்ய வேண்டிய பணி. மனித சமூகங்கள் ஓரிடத்தில் நிலையாகத் தங்கி விவசாயம் செய்யத் தொடங்கியதிலிருந்தே காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றன. அதனால் உயிரிகளின் அழிவும் ஏற்பட்டது. ஆனால் இயல்பிலே பரிணாம அழுத்தத்தால் உயிரினங்கள் ஒரு குறிப்பிட்ட வீதத்தில் அழிந்து வருகின்றன. இது இயல்பான அழிவு வீதம் (normal extinction rate) என அழைக்கப்படுகிறது. அதாவது மனிதர்களின் தாக்கம் இல்லாது ஒரு வருடத்தில் பத்து லட்சம் சிற்றினங்களுக்கு ஒரு இனம் அழிந்து வரும் போக்கு காணப்படுகிறது.அதாவது புவியில் உள்ள 20 லட்சம் உயிரினங்களில் ஆண்டிற்கு இரண்டு சிற்றினங்கள் அழிந்து வருகின்றன. ஆனால் இப்பொழுது மனித நடவடிக்கைகளால் இந்த அழிவுவீதம் பல மடங்கு அதிகரித்துள்ளது. இயல்பான அழிவு வீதம் இன்று பல மடங்கு பெருகி 1000 சதவீதம் அதிகரித்துள்ளது. அதாவது ஒவ்வொரு வருடமும் 200இலிருந்து 2000 வரை உயிரினங்கள் அழிந்து வருகின்றன. அந்த அளவிற்கு உயிரிகளின் பன்மைத்துவமும் அழிந்து வருகிறது. இது உலக அளவிலான சராசரி அழிவுவீதத்தைக் குறிப்பிடுகிறது. இது அனைத்து உயிரினங்களுக்கும் ஒரே மாதிரியாக இல்லை. சில உயிரினங்கள் மாற்றங்களுக்கு ஈடுகொடுக்க இயலாதனவாகவும் அதிகப் பாதிப்புக்கு உள்ளாகி அழியக்

கூடியனவாகவும் உள்ளன. குறிப்பாக நீரிலும் நிலத்திலும் வாழக் கூடிய இரு வாழ்விகளான தவளை, ஆமை ஆகியவற்றின் அழிவுவீதம் சராசரியை விட மிகவும் அதிகமாகவுள்ளது. தவளையைப் போன்ற இரு வாழ்விகள் சுற்றுச் சூழலில் நீர் மாசுபாட்டையும், காலநிலை மாற்றத்தையும் குறிகாட்டுபவையாக (pollution indicators) உள்ளன. இருவாழ்விகளில் ஆமைகளின் அழிவுவீதம் 1000 சதவீதமாக உள்ளது.1900இலிருந்து 600க்கு மேற்பட்ட முதுகெலும்புள்ள நிலத்தில் வாழும் விலங்கினங்கள், அதாவது பாலூட்டிகள், ஊர்வன, பறவைகள் அழிந்துள்ளன. இன்று 500க்கு மேற்பட்ட விலங்கினங்கள் அழிவின் விளிம்பில் உள்ளன. இயற்கையை காப்பதற்கான சர்வதேசக் கூட்டமைப்பு (IUCN) புவியின் உயிரினங்களில் எந்தெந்த உயிரினங்கள் அழியும் தருவாயில் உள்ளன, எந்தெந்த உயிரினங்கள் பாதுகாப்பாக உள்ளன எனப் பலவிதமாக வகைப்படுத்துகிறார்கள். மிக அதிகமாக அழியும் தறுவாயில் உள்ள உயிரினங்களை 'critically endangered' என வகைப்படுத்துகிறார்கள். ஒரு உயிரினத்தின் எண்ணிக்கை 5000க்கும் கீழாகக் குறைந்து விட்டால் அவ்வுயிரினத்தால் புவியில் தொடர்ந்து தன் இனத்தை நிலைநிறுத்தச் செய்வதற்கான வாய்ப்புகள் குறைந்து விடும். அது அழியும் தறுவாயிலுள்ள உயிரினமாக 'critically endangered' பட்டியலில் சேர்க்கப்படும். அது போல 500க்கும் மேற்பட்ட உயிரினங்கள் தற்போது 'critically endangered' பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன. 5000க்கும் மேற்பட்ட பாலூட்டிகளின் வகைகளில் 25 சதவீதத்துக்கு மேல் அழியும் தறுவாயில் உள்ளன. இயற்கையைக் காப்பதற்கான சர்வதேசக் கூட்டமைப்பின் சிவப்புப் பட்டியலின் படி, 30,000க்கும் மேற்பட்ட இனங்கள் அழிந்து போகும் அபாயத்தில் உள்ளன, அதாவது இது வரை கணக்கிடப்பட்ட 1,12,000 இனங்களில் 27 சதவீதம் கடுமையான ஆபத்தில் உள்ளன. 40 சதவீதத்துக்கும் மேலான ஆமையினங்களும் 30 சதவீதத்துக்கும் மேலான ஊர்ந்து செல்லும் விலங்குகளும் அழிவின் விளிம்பில் உள்ளன. புவியின் மிக முக்கியமான உயிர்ச் சூழலாகக் கருதப்படும் பவளப் பாறைகளில் 30 சதவீதத்துக்கு மேல் அழியும் தறுவாயில் உள்ளன. கடல் நீர் அமிலமாக்கத்தால், பல வண்ணங்களைக் கொண்ட பவளப் பாறைகள் வண்ணமிழந்து (coral bleaching) வருகின்றன. இன்று உயிரிகளின் பன்மைத்துவமானது 70 சதவீதம் அழியும் நிலையில் உள்ளது. உலக வனவிலங்கு அறக்கட்டளையின் (WWF) 2018ஆம் ஆண்டு அறிக்கையின்படி, வெறும் 40 ஆண்டுகளில் பாலூட்டிகள், பறவைகள், மீன்கள், ஊர்வன, இருவாழ்விகளின் மொத்த எண்ணிக்கையில் 60 சதவீத வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

விவசாயத்தில் ஒற்றைப் பயிர்ச் சாகுபடியே அதிகம் செய்யப்படுவதாலும், குறிப்பிட்ட சில பயிர் வகைகளை மட்டுமே மீண்டும் மீண்டும் பயன்படுத்துவதாலும் உலகளவில் பாரம்பரியப் பயிர் வகைகளில் 75 சதவீதத்தை நாம் நிரந்தரமாக இழந்து விட்டோம். மீண்டும் நாம் ஒரே மாதிரியான பயிரினங்களையே சாகுபடி செய்வோமானால் அழிவு மேலும் துரிதமாகும். இன்று பாரம்பரிய விதைகளைப் பயன்படுத்தும் போக்கு முன்பை விட அதிகரித்திருப்பது வரவேற்கத்தக்கது. உலகெங்கும் இதற்கான முயற்சிகள் சிறிய அளவிலேயே மேற்கொள்ளப்படுகின்றன. ஏனென்றால் ஒரே மாதிரியான பயிர்களைச் சாகுபடி செய்வோமானால், நோய்த் தாக்கம் அதிகரிக்கும், பன்மைத்துவம் அழியும், அதுவே உணவு உற்பத்தி குறைந்து போகவும், உணவுப் பற்றாக்குறை ஏற்படவும் காரணமாகலாம். ஆகவே பல்வேறு வகையான பயிரினங்களையும், தாவரங்களையும் பாதுகாக்க வேண்டிய தேவை உள்ளது.

கடல் படுகைகளில் படிம எரிபொருள்களைப் பெறுவதற்கான எண்ணெய் துரப்பணப் பணிகளாலும், பலவிதமான தாதுக்களைப் பெறுவதற்கான சுரங்கப் பணிகளாலும், கடல்வழி போக்குவரத்தாலும் கடலின் உயிர்ச் சூழல் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. சுத்திகரிக்கப்படாத கழிவுகளைக் கடலில் சேர்ப்பதாலும், நெகிழிக் கழிவுகளாலும் மாசு மிகவும அதிகரித்துள்ளது. மீன்பண்ணை, இறால் பண்ணை ஆகியவற்றை வளர்ப்பதாலும் கடல் மாசுபாடு அதிகரித்து வருகிறது.

ஒரே நேரத்தில் மீன்கள் பெருமளவில் பிடிக்கப்படுவதால் மீன்களின் பன்மைத்துவம் 75 சதவீதம் அழிந்து விட்டது. பெரிய மீன்களின் மொத்த வகையில் 90 சதவீதம் அழிந்து விட்டது. விவசாய உரங்களின் நைட்ரஜன் கழிவுகள் கடலுடன் கலப்பதால் கடல் நீரில் ஆக்சிஜனின் அளவு குறைந்து கடலில் பல பகுதிகளில் இறந்த பகுதிகள் தோன்றியுள்ளன.

கடலை அடுத்துள்ள சதுப்பு நிலங்கள் மிகுந்த சூழலியல் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். இவை பேரழிவுகளைத் தடுக்கக் கூடிய காப்பரணாகவும் தாங்கியாகவும் செயல்பட்டு, மண்ணரிப்பு, வெள்ளம், ஆகியவற்றைத் தடுப்பதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. கடல் நீர் மட்டம் அதிகரிக்கும் போது உப்பு நீரை வடிகட்டி நீரைத் தூய்மைப்படுத்துகின்றன. உலகளவில் 80 சதவீதம் சதுப்பு நிலங்கள் அழிக்கப்பட்டுள்ளன.

மனித நடவடிக்கைகளால் சேகரிக்கப்பட்ட கழிவுகளாலும் அவை பாதிக்கப்பட்டுள்ளன. சதுப்பு நிலங்கள் கடல்வாழ் உயிரினங்களின் இனப்பெருக்கத்தில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. சதுப்பு நிலங்களுக்கே பிரத்தியேகமான நீர்ப்பறவைகள், விலங்கினங்கள், உயிரினங்கள் அழியும் நிலை ஏற்பட்டுள்ளது. சில உயிரினங்கள் கடல் நீரில் வாழும், பிறகு இடம்பெயர்ந்து இனப்பெருக்கத்திற்காக நன்னீருக்குச் செல்லும்; பிறகு மீண்டும் கடலுக்கு இடம்பெயரும். நீர் மாசுபாட்டாலும், பெரிய அணைக் கட்டுமானங்களாலும் நீர்வாழ் உயிரினங்களின் வாழ்க்கைச் சுழற்சியே பாதிக்கப்பட்டுள்ளது.

உலகளவில் நன்னீரின் அளவும் தொடர்ந்து குறைந்து கொண்டு வருகிறது. உலகின் பனியில்லாப் பகுதிகளில் 25 சதவீதத்துக்கு மேலான இடங்கள் கால்நடைகளை வளர்ப்பதற்கே பயன்படுத்துப்படுகின்றன. ஆனால் 12 சதவீத நிலமே விவசாயத்திற்காகப் பயன்படுத்தப்படுகிறது. பெருகும் கால்நடைப் பண்ணைகளால் பசுங்குடில் வாயுக்களின் அளவு 18 சதவீதம் அதிகரித்துள்ளது. விவசாயத்தின் மூலமாக உருவாகும் பசுங்குடில் வாயுக்களின் வெளியேற்றம் 7 சதவீத அளவில் உள்ளது. உலகளவில் உற்பத்தி செய்யப்படும் தானியங்களில் 40 சதவீதம் கால்நடைத் தீவனங்களுக்காகவே உற்பத்தி செய்யப்படுகிறது. நன்னீரில் 75 சதவீதம் விவசாயத்திற்காகவும், கால்நடை வளர்ப்பிற்காகவும் பயன்படுத்தப்படுகிறது. கால்நடைப் பண்ணைகளுக்காக இயற்கைச் சூழல்கள் அழிக்கப்படுகின்றன. கால்நடைப் பண்ணைகளில் சில குறிப்பிட்ட வகைகளே வளர்க்கப்படுவதால் பன்மைத்துவம் அழிவதற்கும் கால்நடைப் பண்ணைகளே காரணமாக உள்ளன. கால்நடைகள் சுகாதாரமற்ற சூழலில் கூட்டம் கூட்டமாக வளர்க்கப்படுவதால் அதுவே நோய்கள் எளிதில் பரவுவதற்கான சூழலை ஏற்படுத்துகிறது. தொற்றுநோய்களின் அடைகாப்பகங்களாகவே கால்நடைப் பண்ணைகள் உள்ளன.

உலக நிலப்பரப்பில் 30 சதவீதமே காடுகள் உள்ளன. நாம் 40 சதவீதத்துக்கு மேலான காடுகளை இழந்து விட்டோம். விவசாயம் ஆரம்பமானதிலிருந்தே காடுகளின் அழிவு தொடங்கியது. தொழில்மயமாக்கம், நகர விரிவாக்கம் ஆகியவற்றால் காடுகள் மேலும் மேலும் அழிக்கப்பட்டு வருகின்றன. ஓராண்டிற்குக் கிட்டத்தட்ட ஒரு கோடி ஹெக்டேர் காடுகள் அழிக்கப்பட்டுவருகின்றன. உலகளவில் உயிர்ப் பன்மையத்தில் 50 சதவீதத்துக்கு மேல் காடுகளில்தான் காணப்படுகிறது. குறிப்பாக மடகாஸ்கர், அமேசான்,

மேற்குத்தொடர்ச்சி மலை போன்ற வெப்ப மண்டல மழைக் காடுகள் அதிக உயிர்ப் பன்மைத்துவம் கொண்டவையாக உள்ளன. இவை Ecoloical hotspots எனப்படுகின்றன. வெப்ப மண்டல மழைக் காடுகளில் காணப்படும் ஒரு மரமே நூற்றுக் கணக்கான உயிரினங்களின் வாழ்விடமாக உள்ளது. உலகில் மூன்றில் இரண்டு வகையான உயிரினங்கள் வெப்பமண்டல மழைக் காடுகளிலேயே காணப்படுகின்றன. அந்தளவுக்குப் பன்மைத்துவம் மிகுந்தாக வெப்ப மண்டலக் காடுகள் உள்ளன. ஆனால் இன்று வெப்ப மண்டலக் காடுகளில் மூன்றில் ஒரு பங்கு அழிக்கப்பட்டுள்ளது. துருவப் பகுதிகளைக் காட்டிலும் நில நடுக்கோட்டுப் பகுதியிலும், மிதவெப்ப மண்டலப் பகுதியும் சூரியனிலிருந்து அதிக ஆற்றலைப் பெறுவதால் இங்குதான் பல்வேறு உயிரினங்கள் வாழ்வதற்கான பல்வேறு வாழிடங்கள் ஏற்படக் காரணமாக உள்ளது. பன்மைத்துவமான பகுதிகள் அதிகமாக அழிக்கப்படுவதே பெரும் எண்ணிக்கையில் உயிரினங்கள் அழிவதற்குக் காரணமாக உள்ளது. இந்தோனேசியாவில் பனை எண்ணெய் (‘பாமாயில்’) தயாரிப்பிற்காகக் காடுகள் பெருமளவில் அழிக்கப்படுவதால் பல உயிரினங்கள் அழிந்துள்ளன. காண்டாமிருகம், உராங்குட்டான் எனப் பல விலங்குகள் அழிவின் விளிம்பில் உள்ளன. குறிப்பாக வெப்ப மண்டலக் காடுகளைப் பாதுகாக்க மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். இந்த உயிர்க்கோளம் ஒரு பேருயிரி. ஒரு பெரும் வலையமைப்பாக உள்ள உயிர்க் கோளத்தின் அங்கங்களாக பல உயிர்ச் சூழல்கள் உள்ளன. அதில் ஒரு பகுதியில் ஏற்படும் பாதிப்பு பிற பகுதிகளின் மீதும் தாக்கம் ஏற்படுத்தி உயிர்க் கோளத்தின் சமநிலையைப் பாதிக்கிறது.

ஒரு சூழலைப் பாதுகாப்பதில் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் கொண்டவையாக சில உயிரினங்கள் காணப்படுகின்றன. அவை ‘முக்கியமான சிற்றினங்கள்’ (keystone species) என அழைக்கப்படுகின்றன. அந்தக் குறிப்பிட்ட உயிரினம் அழிந்தால், அதோடு தொடர்புடைய விலங்கினங்கள், அது இரையாக உண்ணும் விலங்குகளின் எண்ணிக்கையில் மாற்றம் ஏற்படுகிறது. அதனால் அச்சூழலின் உயிர்ச் சமநிலை பாதிக்கப்பட்டு அவ்வுயிர்ச்சூழல் அதே உயிர்ச்சூழலாகத் தொடர்வதற்கான பிரத்தியேகப் பண்புகளை இழந்து விடும். முக்கியமான சிற்றினம் வேட்டையாடும் விலங்கினமாக இருக்கும் போது அதன் இரையாக உள்ள உயிரினங்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துவதிலும் அச்சூழலின் சமநிலையைக் காப்பதிலும் முக்கியப் பங்கு வகிக்கிறது. அப்படிப்பட்ட முக்கியமான சிற்றினம் அழிந்து

விட்டால் அவற்றின் இரையாக இருந்த உயிரினங்களின் எண்ணிக்கை பெருகும். அது மற்ற விலங்குகளையும், சூழலின் உயிர்ச் சமநிலையும் கடுமையாகப் பாதிக்கும். குறிப்பிட்ட சூழலில் அதற்கு பிரத்தியேகமான உயிரிகளே வாழ்கின்றன, அதில் வாழ்வதற்கான தகவமைப்பு எல்லா உயிரினங்களுக்கும் இருக்காது. முக்கியமான சிற்றினம் அழிந்து போகும் போது அதன் சூழலும் அழிந்து போகும். இவ்வாறு ஒரு உயிரினம் அழியும் போது அதற்குத் தொடர்புடைய உயிரினங்களும் அழிவுறுவதால், அழிவு மேலும் அழிவை ஏற்படுத்தவும், அழிவுகள் அதிகரிப்பதற்கும் காரணமாகிறது (Extinction leads to extinction).

உலகளவில் அந்தந்தச் சூழலுக்குரிய பிரத்தியேகமான பூர்விகச் சிற்றினங்கள் (native species) 70 சதவீதம் அழிந்து விட்டன. வேற்றிடத்திலிருந்து அறிமுகப்படுத்தப்படும் சூழலுக்குப் பொருத்தமில்லாத உயிரினங்கள், வளர்க்கப்படும் தாவர இனங்கள், விலங்கினங்கள் **வேற்றிடச் சிற்றினங்கள்** (invasive species) என அழைக்கப்படுகின்றன. **வேற்றிடச்** சிற்றினங்களை அறிமுகப்படுத்தும் போது அந்த இடத்தின் சூழல் பாதிக்கப்படுகிறது. அந்த இடத்தில் உள்ள உயிரினங்களின் சமநிலை மாற்றத்துக்குள்ளாகிறது. உயிர்ச் சூழல் அதிகமாகப் பாதிக்கப்படுவதற்கு இந்த **வேற்றிட உயிரினங்களை** அறிமுகப்படுத்துவதும் ஒரு காரணமாக இருக்கிறது. கருவேல மரம், பார்த்தீனியச் செடி ஆகிய வேற்றிடத் தாவரங்கள் இங்குள்ள பூர்விகத் தாவரங்களின் வளர்ச்சியைப் பாதிப்பதால் சூழலின் சமநிலையைப் பாதித்து, சூழலையே மாற்றத்துக்குட்படுத்துகிறது. அதே போல் யூகலிப்டஸ் மரங்களும் வெப்ப மண்டலச் சூழலில் வளர்க்கப் பொருத்தமில்லாதவை, அவை அதிக அளவு தண்ணீரை எடுத்துக் கொள்வதால், வறட்சியை ஏற்படுத்தி மற்றத் தாவரங்களின் வளர்ச்சியைத் தடுக்கின்றன. பைன் வகை மரங்கள், வெப்ப மண்டலப் பகுதிகளில் வளர்க்கப்பட்டால் அதன் மூலம் காட்டுத்தீ உருவாவதற்கான வாய்ப்புகள் அதிகமாகின்றன. காடுகளை உருவாக்குகிறோம் என்ற பெயரில் சூழலுக்கு பொருத்தமில்லாத மரங்களை வளர்த்தல் அந்தச் சூழலுக்கு தீங்கையே ஏற்படுத்தும். ஆகவே அந்தந்தப் பகுதிகளுக்குப் பொருத்தமான வகை மரங்களைத் தேர்ந்தெடுத்து வளர்க்க வேண்டியது அவசியம். அதுவே அச்சூழலைப் பாதுகாப்பதற்கு உதவி புரியும்.

ஆர்க்டிக்கில் பனி அதிகம் உருகி வருகிறது. அதனால் பனிக்கரடிகள் அழியும் அபாயத்தில் உள்ளன. இப்போது உலகளவில் 20,000 பனிக்கரடிகள் மட்டுமே உள்ளன. புவி

வெப்பமாதலைத் தடுக்கா விடில் அவை நிரந்தரமாக அழிந்து விடும் ஆபத்து உள்ளது. பனித்தளம் இருந்தால்தான் பனிக் கரடிகளால் அவற்றின் இரையான சீலைப் பிடித்து உண்ண முடியும். ஆர்க்டிக் பனிக்கரடிகளைப் பாதுகாக்க அவற்றை அண்டார்டிகாவில் வாழ விடலமா என்று சிலர் கருத்துத் தெரிவித்தனர். ஆர்க்டிக்கில் வேட்டையாடும் பனிக்கரடிகளை அண்டார்டிகாவில் விடுவோமானால் அண்டார்டிகாவில் உள்ள பென்குவின்களும், பிற உயிரினங்களும் அழியும் அபாயம் ஏற்படும். ஆகவே அந்தந்த உயிர்ச் சூழலுக்குப் பொருத்தமான உயிரினங்கள் வாழ்வதைப் பாதுகாக்க வேண்டும்.

காடுகள் அழிக்கப்படுவதால் உயிரினங்களின் வாழ்விடம் அழிக்கப்படுகிறது. அதைச் சார்ந்து வாழும் மனிதர்களின் வாழ்வாதாரம் அழிக்கப்படுகிறது.உலக அளவில் பெருமளவிலான ஆதிவாசிகளும், பழங்குடி மக்களும் காடுகளை நம்பித்தான் வாழ்ந்து வருகிறார்கள். கிராமப்புறத்தைச் சேர்ந்த மக்களின் வாழ்வாதாரம் காடுகளைச் சார்ந்தே உள்ளது. காடுகளின் மூலமாகத்தான் மண்ணரிப்பு தடுக்கப்பட்டு மண்வளம் பாதுகாக்கப்படுகிறது. மகரந்தச் சேர்க்கைக்கு உதவுகிறது. நம் அடிப்படைத் தேவைகளான குடிநீர், உணவு பெற காடுகள் மிகவும் இன்றியமையதாவையாக உள்ளன.

இன்னொரு முக்கியமான தகவல் என்னவென்றால் உலகளவில் காடுகள், மற்ற உயிரினங்களின் பன்மைத்துவத்தைப் பாதுகாப்பதில் 80 சதவீதம் முக்கியப் பங்கு வகிப்பது பழங்குடி மக்களே. உலகளவில் பழங்குடி மக்களின் எண்ணிக்கை 5 சதவீதம் மட்டுமே உள்ளது. இயற்கைச் சூழலோடு இயைந்த அவர்களது வாழ்க்கை முறை காடுகளை அழிக்காமல் அவற்றைப் பாதுகாப்பதற்கு உதவுகிறது. அவர்களுடைய வாழ்க்கை முறை நகர்ப்புற சமுதாயங்களைப் போல அதிக அழிவுகளை ஏற்படுத்துவதில்லை. அவர்கள் காடுகளையும் மரங்களையும் மதித்துத் தங்களது முன்னோர்களாக கருதி வழிபடுவார்கள். அவர்களது வழிபாட்டுமுறை, மத வழிபாட்டு முறைகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டுள்ளது. மதங்கள் பொருளாதாரச் சுரண்டலை அடிப்படையாகக் கொண்டவை. உண்டியல் இல்லாமல் ஒரு மதக் கோவிலும் கிடையாது, மத **உண்டியல்கள் வேப்ப மரங்களையும் விட்டு வைக்கவில்லையே**! **பழங்குடி**யினரின் வழிபாடு உயிர் நேயத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. பழங்குடி மக்கள் மரங்களையும், பிற உயிரினங்களையும் தங்களது

உறவுகளாகவே கருதி வணங்குகிறார்கள். காடுகளை அழிப்பதாலும், காலநிலை மாற்றத்தாலும் பழங்குடி மக்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர். எந்தளவுக்குப் பழங்குடி மக்கள் பாதுகாக்கப்படுகிறார்களோ, அந்த அளவுக்கு உயிர்ச்சூழல் பாதுகாக்கப்படும் என்பது இன்று உலகளவில் பலராலும் அங்கீகரிக்கப்படுகிறது. முன்னர் இருந்ததைக் காட்டிலும் இன்று பழங்குடி மக்களின் முக்கியத்துவம் அதிகம் உணரப்படுகிறது.

உலகளவில் காணப்படும் சூழலியல் பிரச்சினைகளான காலநிலை மாற்றம், பன்மைத்துவ அழிப்பு ஆகியவற்றுக்குத் தீர்வாகப் புதிய பசுமை ஒப்பந்தம் (New green deal) குறித்த அறிக்கை வெளியிடப்பட்டு முன்மொழியப்பட்டுள்ளது. அதன் திட்டங்களுள் ஒன்றாக உலகப் பாதுகாப்பு வலையமைப்பு (Global safety net) ஏற்படுத்தப்படும் என முன்னிறுத்தப்பட்டுள்ளது. உலகளவில் 15% பகுதிகள் மட்டுமே பாதுகாக்கப்பட்ட பகுதிகளாக உள்ளன. இதற்குக் கூடுதலாக ஒரு 50 இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு கூடுதலாக 35% நிலப் பரப்புகள் பாதுகாக்கப்பட்ட பகுதிகளாக்காக்கப்பட்டு, அங்கு காடுகள் உருவாக்கப்பட்டு உலகப் பாதுகாப்பு வலையமைப்பை உருவாக்க வேண்டும். அதுவே இந்த இரண்டு சூழலியல் பிரச்சினைகளுக்குமான தீர்வாக அமையும். அதாவது இப்போது 15 சதவீதமாக உள்ள பாதுகாக்கப்பட்ட பகுதிகளை 50 சதவீதமாக அதிகரிக்க வேண்டும். இத்திட்டம் குறிப்பிடத்தக்க அளவில் பழங்குடியினர் வாழும் பகுதிகளை விரிவுப்படுத்துவதாகவும் உள்ளது. குறிப்பாக கனடா, அமெரிக்கா, ரஷ்யா, சீனா போன்ற அதிக நிலப் பரப்புகளைக் கொண்ட இருபது நாடுகள் இத்திட்டத்திற்கு அதிகப் பங்களிப்பை அளிக்க வேண்டியிருக்கும். குறிப்பாக வெப்ப மண்டலக் காடுகளை பாதுகாக்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. புவியின் நிலப்பரப்பில் 50 சதவீதத்தை உயிர்ச்சூழலுக்காக ஒதுக்க வேண்டும். மரங்களுக்கான தேவைகளை நிறைவு செய்யக் காடுகளை அழிக்கக் கூடாது, அதற்காகத் தனியாக சமூகக் காடுகளை உருவாக்க வேண்டும். குறிப்பாக சூழலுக்குப் பொருத்தமான மரங்களைக் கொண்ட சமூகக் காடுகளை ஏற்படுத்த வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.


மனிதர்களே தூண்டப்பட்ட காலநிலை மாற்றத்திற்கும் உயிர்ப் பன்மைத்துவம் அழிவதற்கும் காரணமாக இருக்கிறோம், மனிதர்களே அதற்குத் தீர்வையும் அளிக்க வேண்டும்.

(தொடரும்)

## சோதிப்பெரு வெளிச்சத்திற்கு
## ஒரு சின்னத்திரியின்
## அஞ்சலி

-கவிஞர் புதுவை இரத்தினதுரை

**முத்துக்குமாரா!**
**முகம் தெரியாப்போதினிலும்**
**செத்துக் கிடக்கின்றாய் எமக்காக,**
**எனவறிந்து**
**தேகம் பதறுகிறதே திருமகனே!**
**உன்றன்**
**ஈகம் அறிந்து எம்மில் தீப்பற்றுதே**
**நீட்டிக்கிடக்கின்றாயாம் நீ**
**உனக்கு அஞ்சலியெழுதும் என்னைச் சுற்றி**
**நூறு உடல்கள் கிடக்கின்றன வரிசையில்**
**அத்தனையும் எம் உறவுகளின் உயிரிழந்த கூடுகள்.**
**உன் மேனியில் மூண்ட நெருப்பு**
**உன்னை எரித்ததாய் சொல்லுகின்றார்**
**நீ எரிந்தவன் அல்லன், விரிந்தவன்.**
**சின்ன அக்கினிக் குஞ்சே!**
**உன் நெஞ்சிலிருந்த நெருப்பால் எரிந்தாய்**
**அந்தச் சோதிப் பெருவெளிச்சம்**
**எமக்குச் சக்தி தரும்**
**வையவாசலை எமக்காகத் திறக்கச் செய்யும்.**
**உன் இறுதி மூச்சு**
**புயலாகித் தமிழ்நாட்டைப் போட்டுலுப்பும்.**
**எல்லோருக்கும் சாவு வாழ்வின் இறுதி**
**உனக்கு மட்டுமே சாவு தொடக்கமானது.**



**தம்பி!**

**வாய்நிறைய உன் நாமம் உரைத்து அழைக்கின்றேன்.**

**நீ எங்களுக்கு வெறும் முத்துக்குமார் அல்ல**

**எமக்குப் பலம் நல்கும் சக்திக்குமார்.**

**இங்கிருந்து உன் முகத்தைக் காண்கிறேன்.**

**உன் குரலைக் கேட்கிறேன்.**

**உன் மூச்சை உள்வாங்குகிறேன்.**

**இடையில் கடல் கடந்தும் வருகின்றது**

**உன் சிரிப்பின் ஓசை.**

**எமக்காக எரிந்தவனை எரிக்கவா போகின்றீர்?**

**கடலிலே அனுப்பி வையுங்கள்**

**அவன் பொன்மேனியை ஒருதரம் தழுவ,**

**ஈழத்தமிழரைச் சுமந்த இதயத்தைப் பார்க்க,**

**கண்மூடிக் கிடந்தாலும் அவன் காதோடு பேச.**

**மகனே!**

**நெருப்பெரியும் தேசத்தை எண்ணி**

**நெருப்பில் எரிந்தவனே!**

**உன் நெஞ்சின் உணர்வுகளை வாங்கி**

**இங்கே உயிர்கள் பிறக்கும்**

**உன் இறுதி மூச்சை உள்வாங்கி**

**உயிர்கள் சுவாசிக்கும்**

**நாளை உயிர் தரித்திருப்போம் என்பதற்கு**

**எந்த உத்தரவாதமும் அற்று வாழ்கின்றனர் ஈழத்தமிழர்**

**உயிர் எரியும் வலியில் ஈழம் துடிக்கின்றது**

**ஆயினும் பகைக்குப் பணிவிடை செய்யோம் என்றபடி**

**நிமிர்ந்துள்ளோம் நாங்கள்.**

**முத்துக்குமார்,**

**நீ செத்துக் கிடக்கின்றாயாமே எமக்காக**

**யாராவது அவனின் புனித உடலை**

**எமக்குப் பொதிசெய்து அனுப்ப மாட்டீர்களா?**

**இந்த வீரமண்ணில் விதைப்பதற்காக**

**அந்த வித்துடல் வேர் பிடித்து**

**புதிய தலைமுறை ஒன்றைப் பிரசவிப்பதற்காக.**

**தம்பி!**

**வார்த்தை ஏதும் வரவில்லையே**

**உன்னை வனப்புச் செய்து வாசலில் வைப்பதற்காக**

**தமிழீழம் உனக்காக விழியுடைத்துப் பெருகுகிறது**

**உன் கடைசிக் கடிதத்தின் பொருள் உணர்ந்து**

**நெஞ்சுருகி உன்னைப் பாடுகின்றது தமிழீழத் தமிழ்.**

**நண்பனே!**

**முகம் தெரியாத எம் முத்துக்குமார்**

**உன்னை நெஞ்சில் வைத்துச் சத்தியம் செய்கின்றோம்.**

**நீ மூட்டிய சோதி நெருப்பு சும்மா அவியாது**

**விண் தொட எழும் - அந்த வெளிச்சத்தில்**

**நாங்கள் ஒளி பெறுவோம்.**

**என் பிரிய உறவே!**

**சென்று வருக**

**திரும்பி வராவிட்டாலும்**

**நன்றியென்ற ஒருணர்வை**

**நாம் சுமந்து நிற்கின்றோம்.**

**பிரிய தோழனே! உனக்குத் தமிழீழத்தின் வீரவணக்கம்!**

***

ஆபேல் இதழைப் படிக்க
கீழுள்ள இணைப்பை சொடுக்கவும்

https://drive.google.com/file/d/1f4HU1rC_qfllTZMDk_IoCG04tXD1VokW/view?usp=sharing

## தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம்

பொதுச்செயலாளர்: தோழர் ***தியாகு***

அன்பிற்குரியீர்! வணக்கம்.

தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தின் அரசியல்-கருத்தியல் நிலைப்பாடுகளையும் நடைமுறைச் செயல்பாடுகளையும் தொடர்ந்து கவனித்து வருவீர்கள் என நம்புகிறேன். தமிழ்த் தேசிய விடுதலைக்கும் சமூக நீதிக்குமான கொள்கைவழியைத் தொடர்ந்து பற்றி நிற்கிறோம். பதவி அரசியலைப் புறந்தள்ளிப் போராட்ட அரசியலை உறுதியாகக் கடைப்பிடிக்கிறோம். மக்கள் நலன் கருதி ஒன்றுபட்ட இயக்கங்களில் தொடர்ந்து எங்களால் இயன்ற பங்களிப்பைச் செய்து வருகிறோம். உணர்வு அரசியலில் மயங்காமல் அறிவார்ந்த அரசியல் களத்தில் ஊன்றி நிற்கிறோம். தமிழீழம் உள்ளிட்ட தமிழ் மக்களின் உரிமைப் போராட்ட அரசியலில் எமது இடம் சிறிதென்றாலும் இன்றியமையாத ஒன்றென்னும் அறிந்தேற்புப் பெற்றுள்ளோம்.

எம் கொள்கை நிலைப்பாடுகளையும் கருத்துகளையும் திங்கள்தோறும் வெளிவரும் ***உரிமைத் தமிழ்த்தேசம்*** மின்னிதழில் உங்கள் பார்வைக்குப் படைத்து வருகிறோம். ***அறிவுக்குரல்*** வாயிலாகவும் புரட்சியச் சிந்தனைகளை விரிய விதைத்து வருகிறோம். எம் விடாமுயற்சியின் பயனாக இயக்கம் சீராகவும் உறுதியாகவும் வளர்ந்து வருகிறது. அறிவியல் நோக்கும் ஈகவுணர்வும் உழைப்பார்வமும் கொண்ட புதிய ஆற்றல்களை இயக்கத்தின் பால் ஈர்த்துள்ளோம்.

ஆனால், இன்றைய அரசியல் சூழலின் தேவைகளை நிறைவு செய்ய எமது வலிமையும் வளர்ச்சியும் போத மாட்டா என்பதை உணர்ந்துள்ளோம். இயக்கத்தின் பரவலான வளர்ச்சிக்கும் மக்கள்-பணிக்கும் மேலும் முழுநேர, பகுதிநேர ஊழியர்களைக் களமிறக்க வேண்டும். சமூக ஊடகங்களை இன்னும் விரிவாகப் பயன்படுத்தவும், மெய்ந்நிகர் அரசியல் செயல்நிரலைக் கடைப்பிடிக்கவும் தொடர்ச்சியான பொருள்வளம் தேவைப்படுகிறது. இதற்கென எம் தலைமைக் குழுவில் பேசி முடிவெடுத்து இந்தத் திங்கள் பங்களிப்புத் திட்டத்தை அறிவிக்கிறோம்:

எம் இயக்கப் பணிகளில் உங்களுக்கு நம்பிக்கையும் அக்கறையும் இருக்குமானால் தொடர்ந்து ரூ.100/- முதல் 2000/-க்குள் திங்கள் பங்களிப்பாகத் தாருங்கள். இது ஓராண்டுக்கான திட்டமாகும். இதற்கான படிவம் நிரப்பித் தந்து இத்திட்டத்தில் இணைந்து கொள்ள வேண்டுகிறேன். சிறுதுளி பெருவெள்ளம்!

தமிழர் விடுதலைப் போர்முழக்கம்! சமூகநீதித் தமிழ்த்தேசம்!

நன்றி!

தோழமையுடன்

தியாகு / சென்னை /04/05/2020

**தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம்**

பொதுச்செயலாளர்: ***தியாகு***

**திங்கள் பங்களிப்புப் படிவம்**

| | |
|---|---|
| **பெயர்:** | |
| **ஊர் / முகவரி:** | |
| **தொலைபேசி / புலனம் எண்:** | |
| **மின்னஞ்சல் முகவரி:** | |
| **திங்கள் பங்களிப்பு:** | **ரூ.** |
| **திங்கள்தோறும் பங்களிப்பு நாள்:** | |
| **பங்களிப்பு வழி (நேரில்/ வைப்பகக் கணக்கு/ ஏனைய வழி)** | |
| **இயக்கத்திடம் உங்கள் எதிர்பார்ப்பு:** | |